உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

# பெரியபுராணவசனம்.

இதனுள்

அரிவாட்டாயநாயனார் புராணமுதல்

ஆளுடையபிள்ளையார் புராணவரையிலுள்ள

ஆறுசரித்திரமும் [redacted] அடங்கியிருக்கின்றன

இது

1891ஆம் F. A. பரீக்ஷைக்காக

சென்னை ப்ரெஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்புலமை நடாத்திய

சமரசவேதசன்மார்க்கசங்கம்

## தொழுவூர்-வேலாயுதமுதலியாரால்

செய்யப்பட்டதை

ஷை யார் குமாரராகிய

தமிழ் ட்ரான்ஸ்லேட்டர் ஆபீஸ்

## தொழுவூர் - வே - திருநாகேஸ்வரமுதலியாரால்

சென்னை

மிமோரியல் அச்சுக்கூடத்தில்

பதிப்பித்துப்பிரசுரிக்கப்பட்டது.

February 1890.

*All Rights Reserved.*

# வரலாறு.

U. V. SWAMINATHAIYA
TIRUVANMIYUR, MAD

திருத்தொண்டர்புராணம் என்பது, சிவனடியவர்களது திறத்தைக்கூறிய பழங்கதையெனப் பொருள்கொள்க. இதனைப் பெரியபுராணம் எனவும்வழங்குவர். அது, ஏனையர் நினைத்தற்கும் அரியமேலோரது செய்கையின் ஒப்புயர்வற்ற பயனது திறத்தை விளக்குதலையுடைய புராணம் என்னும் பொருட்டு. அங்ஙனம் அன்றிப்பெரியர் புராணம் எனற்பாலது பெரியபுராணம் எனமருவிற்று என்பாருமுளர்.

இதுவடமொழியிலே அட்டாதசபுராணத்துளொன்றாகிய ஸ்ரீஸ்காந்த புராணத்துள்ளே சிவரகசிய கண்டத்திலே, முன் உலகமாதாவாகியபார்வதியாருக்குப் பரமாசிரியராகிய சிவபெருமானால் கூறப்பட்டதாகக் குறித்திருக்கின்றது. பின்னர். ஆசிரியர், அகத்தியனால், "அகத்திய பக்தவிலாசம்" என்றும், சாமவேதசாகையைச் சார்ந்த ஸ்ரீசாந்தோக்கிய வுபநிடதத்தில், "ప్రాచీనశాలౌపమన్యవః" = பிராசீனசாலஔபமன்னியவ: - என்று புகழ்பெற்ற ஸ்ரீபகவான உபமன்னிய முனிவரால், "உபமன்னிய பக்தவிலாசம்" என்றும் கூறப்பட்டுள்ளது.

தென்மொழியாகிய தமிழ்க்கணேவெனில்? பெருநதேவர்களின் ஆன்மார்த்தமூர்த்தியாக எழுநதருளிய திருவாரூர்ப்பூங்கோயில் வீதிவிடங்கப் பெருமான்வேதத்தை விளக்கிய தமது திருவாயமலர்நது "தில்லைவாழந்தணர்" என்று முதலெடுத்துக் கொடுத்தருளக்கொண்டு, ஆளுடைய நம்பிகளாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் "திருத்தொண்டத்தொகை" எனனும் திருப்பதிகத்தைத் திருவாய்மலர்ந்தருளினர். அதனைத் திருநாரை யூரில் ஆதிசைவவேதியர் மரபில் திருவவதாரஞ்செய்து ஸ்ரீ பொல்லாப்பிள்ளையாரை உபாசித்து, அவரருளால் வேதாகமங்களை யுணர்ந்துதிருமுறைகண்டசோழமஹாராஜன் வேண்டுகோள்ன்படி, சிதம்பரத்தில் சேமித்து வைத்திருந்த திருநெறித்தமிழைவெளிப்படுத்திய காலத்தில் அத்திருத்தொண்டத்தொகைக்கு வகையாகத்திருவந்தாதி வகுத்தருளினர்.

அதன்பின்பு, தொண்டமண்டலத்தை அரசு ஆண்ட ஆதொண்டமான சக்கரவர்த்திக்குப் படைத்துணையாகவந்த நற்குடி நாற்பத்தெண்ணாயிரவராகிய வேளாளருள், இம்மண்டலம் இருபத்துநான்கு கோட்டத்துள் புலியூர்கோட்டத்தைச்சார்ந்தகுன்றவள நாட்டிலே, குன்றத்தூரிலே வசிக்கும் சேக்கிழார் திருக்குடியிலே, அருண்மொழித்தேவர் எனபவர் பாலறுவாயர்என்னும் அனுஜரோடு திருவவதாரஞ்செய்து, கல்விகேள்விகளாற் சான்றோராய்சிவநேசமும் அடியார் பத்தியுஞ் சிறந்துவாழ்ந்திருக்குநாளில், சோழமண்டலத்திலே, அரசாண்டிருந்த அநபாயச்சோழமஹாராஜனவர் இவர்பெருமையைக்கேள்விப்பட்டு, இவரை அழைப்பித்து இவரது கல்விகேள்வி முதலியவற்றின் அருமைகளையும் அறிவொழுக்க முதலியவற்றினபெருமைகளையும்நன்காராய்ந்து, "உத்தமச் சோழப் பல்லவராயர்" என்னும் பட்டமும் அமைசசுரிமையும் கொடுத்துச்சிறப்புச் செய்துவைத்திருந்தனர். அப்போது, அச்சோழ மஹாராஜனது சபையிலே நாள்தோறும்வித்துவான்கள் "சீவகசிந்தாமணி" யையே பிரசங்கித்து வரக்கண்ட அருண்மொழித்தேவர், அரசனைநோக்கி யிச் "சீவகசிந்தாமணி" ஆருகதக்கட்டுக்கதை இம்மைமறுமைக்கும் ஆகாது வீண்

போதுபோக்காம்; ஆதலால், சிவகதைகேட்கவேண்டும். அது அறம்பொருளின்பம்வீடென்னும் புருடார்த்தங்களைத்தரும என்று கூறக்கேட்ட அவ்வரசர்பெருமான், அந்நூல்யாது? எத்தனையையது? அதற்குமுதனூல்யாது? அதனைச் செய்தவர்கள்யாவர்? என்றுவினவினர். அதற்கு அருண்மொழித்தேவர் நம்பியாண்டார் திருவந்தாதியை யெடுத்துக் கூறக்கேட்ட அவ்விறைமகன் அவரைநோக்கி, இதனைப் பெருங்காப்பியமாகச்செய்துதரவேண்டுமென்றுவேண்டும் திரவியமுங் கொடுத்து அனுப்பினார். அருண்மொழித் தேவரும் விடைபெற்றுச் சிதம்பரத்தை யடைந்து சிற்சபையில் பெருமான முன்னின்று தமதுகருத்தை விண்ணப்பித்தனர். அப்போது, "உலகெலாம்" என்றோர் அசரீரிவாக்குச் சிவானுக்கிரகத்தாலுண்டாயது. உடனே, அத்திருவாக்கினைக் கொண்டு இராஜசபையாகிய ஆயிரக்கால மண்டபத்தை யடைந்து அங்கிருந்து அந்நம்பியாண்டார் திருவந்தாதியை முதனூலாகக்கொண்டு இரண்டு காண்டம் - பதினொரு சருக்கமாகப் பிரித்து நாலாயிரத் திருநூற்றைம்பத்து மூன்று திருவிருத்தமாக விரித்துத் திருத்தொண்டர் புராணமென்ற திருநாமஞ்சாத்திப்பாடிமுடித்தருளினர். அதனை அவ்வநபாயச் சோழமஹாராஜன் உலகறிய அழகிய திருச்சிற்றம்பலமுடையார் திருவாணைப்படி அரங்கேற்றுவித்து இதுவுமோர் தமிழ்மறையென்று செப்பேடுசெய்து பொற்சபையேற்றி வைத்துப் பலசிறப்புஞ்செய்து பாலறுவாயனை யழைத்து மந்திரியாக்கி உரிமை வகுத்துப் பாராட்டிவந்தனர். பின்னருண்மொழித் தேவராகிய சேக்கிழார் சிவத்தியானத்தி லிருந்து ஆடிய திருவடிநீழ லடைந்தருளினர். இவர்க்குச் சேக்கிழார் என்பது குடிப்பெயர்.

இச்சேக்கிழார் அருளிச்செய்த அம்மூலக்கருத்தினையே பெரும்பாலுமநுசரித்து மிகுந்த எளியநடையினால் யாவர்க்கு முபயோகமாம்படி இவ்வாசகம் எழுதப்பட்டதெனக்கொள்க. இச்சரித்திரம், பல தெய்வரகசியப்பொருளைத் தன்னுள் அடக்கி யிருப்பதாயும், கற்போருக்கும் கேட்போருக்கும் இம்மை, மறுமை, வீடு, என்னும் மூன்றினையுந் தரும் தருமார்த்தகாம மோக்ஷஞானங்களுக்குக் கருவியாயும் இருத்தலால் சிரத்தையோடும் யாவரும் ஒழியாமல் ஓதி நல்லோர்களை வினவியறிதல் பெரும்பயனையுள்ளது.

திருச்சிற்றம்பலம்.

## திருத்தொண்டர்புராணம் ஆகிய

# பெரியபுராணம்,

### முதற்காண்டம். இரண்டாவது

### இலைமலிந்தசருக்கம்.

## I.—அரிவாட்டாயநாயனுர்புராணம்.

உலகெலா முணர்ந் தோதற் கரியவன் ... ... *
நிலவு லாவிய நீர்மலி வேணியன் ... ... ... *
அலகில் சோதிய னம்பலத் தாடுவான் ... ... *
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம் ... ... *

எடுக்கு மாக்கதை யின்றமிழ்ச் செய்யுளாய் ... *
நடக்கு மேன்மை நமக்கருள செய்திடத் ... ... *
தடக்கை யைந்துடைத் தாழ்செவி நீண்முடிக் ... *
கடக் களிற்றைக் கருத்து ளிருத்துவாம் ... ... *

நீர்வளம்பொருந்திய காரணத்தால் புனனாடுஎனப் பெயர் பெற்ற சோழதேசத்தின்கண்ணே கணமங்கலம் என்று ஒருதிருப்பதிஉண்டு. அதில் வேளாளர்குலத்தில் அவதாரம்செய்து பெருஞ்செல்வம் உடையவராய், இல்லறதருமம் வழுவாது நடத்திவருபவராய்த் தாயனுர் என்பவர் இருந்தார். அவர், தற்போதத்தால் எதிரிட்டு அறியமுடியாத சிவபெருமான் திருவடிக்கண்ணே மறவாதசிந்தையுடையவராய் அவருக்குத் தினந்தோறும் செந்நெல் அரிசி அமுதும் மாவடுவும் கீரையும் கொண்டுவந்து நிவேதனம் செய்துவருவார். அவ்வாறு செய்துவருகையில், உலகத்துள்யாவர்க்கும் அவ்விரதமுடிபைத் தெரிவிக்கும்படி, சிவபெருமான் திருவுளஞ்செய்து, அத்திருப்பணிக்கு வேண்டுவதாகிய செல்வம் குறைந்து வறுமை மேலிடப்பண்ணியருள, தாயனுர் தாம்கொண்டவிரதம் தவறாது நிவேதனத்திருத்தொண்டு நடத்திக்கொண்டிருந்தார். அப்போது, வீடு விளைநிலம் முழுவதும்ஒழிந்து தரித்

திரம் வளரக்கண்டு, அவ்வூரில் அயலாரிடத்தில் சென்று, கூலிக்கு நெல் அறுத்துப்பெற்ற அச்செந்நெல்லைத் தம்மை உடையவர் நிவேதநத்திற்கு உபயோகித்து, கார்நெல்லறுததுப்பெற்ற கூலிக்கார் நெல்லை தமக்கு உபயோகித்துவந்தார். ஆகவே, இன்னும் இவரது நிலைமையை வெளிப்படுத்தும்படி, ஆளுடையார், அவ்வூர்விளைவு எல்லாம்செந்நெல் ஆகும்படிமாற்றியருளினார். தாயனார் அதுகண்டு, இவ்வாறு நேரிட்டது நான்செய்தபுண்ணியம் என்று பெருங்களிப்புக்கொண்டு கூலிக்காகவந்த நெல்லைஎல்லாம் உடையவர் நிவேதநத் திருத்தொண்டுக்கே ஆக்கிவிட்டார்.

அதனால், இவர்க்கு வேறு உணவு இல்லாமற் போகவே, கற்பிற்சிறந்த அவருடைய மனைவியார், மனைக்குப்பின்புறத்தோட்டத்திற்சென்று; கீரைபறித்துவந்து சமைத்துப் படைக்க, அதனைத் தாயனார் திருவமுதுகொண்டருளி, தாம் உடையவர்க்குச் செய்துவரும் நிவேதநத்திருப்பணி மாத்திரம் முட்டாதபடி நிறைவேற்றி நின்றார். அந்நாளில், மனைப்புறத்து உள்ள இலைக்கறிகளும் மாண்டுபோய் வேறுஒன்றும் கிடையாமல மஹாபதிவிரதையாகிய அவர் மனைவியார், சுத்தசலம் படைக்க அதனைத் தாயனார் திருவமுதுசெய்து, பெருமான் திருப்பணியைத் தமது நியமப்படி நடத்திவருநாளில் ஒருநாள், வழக்கப்படி, பெரியபெருமானார் நிவேதநத்திற்காகச் செந்நெல் அரிசியையும் மாவடுவையும் கீரையையும் ஒரு கூடையிலவைத்து எடுத்துகொண்டு சென்றார். அவர்க்குப்பின்னே அவருடைய மனைவியாரும் பூசைக்கு உரியபால், தயிர், நெய், கோமயம், கோசலம், என்னும் பஞ்சகவ்வியங்களை எடுத்துக்கொண்டு சென்றார். செல்லுகையில், தாயனார் உணவில்லாமையால் திருமேனி இளைத்து, கால்சோர்ந்து, தவறித் தரைமேல் விழுந்தார். அதுகண்டுமனைவியார் பஞ்சகவ்விய பாத்திரத்தை மூடிக்கொண்டிருந்த மற்றொரு கையினாலே அவரைத் தாங்கியருளினார். அவ்வாறு தாங்கியும் அவர்கொண்டு போன நிவேதநத்திரவியங்கள எல்லாம் சிந்தி அத்தரைவெடிப்பிலே விழுந்துவிட்டன. அதுகண்டு, தாயனார், இனி அங்குபோவதாற் பயனில்லை; இன்றைய பொழுதில் செந்நெலரிசியும் மாவடுவும் கீரையும், எம்பெருமானுக்கு நிவேதநம் செய்யத்தக்க பேறு பெற்றுக் கொள்ளாமற் போனேன்: இப்படிப்பட்ட கொடியபாவியாகிய நான் இருந்தாவதென்னை? என்று திருவுள்ளத்தில் சிந்தித்தருளி, உடனே, தமது அரிவாளைக் கழுத்திற்பூட்டிப் பிறப்பை அறுப்பதுபோல, ஊட்டியை அரியத் தொடங்கினார். அப்போது, அழகிய திருச்சிற்றம்பலமுடையார், அவ்வரிய செய்கைக்கு ஆற்றாது ஊட்டியை அறுக்கும் கையைத் தடுக்கும்படி, அக்கமர்வழி

யாக, மாம்பிஞ்சை விடேல்விடேல் என்று கடிக்கும் ஓசையோடு, திருக்கரத்தை நீட்டி அக்கணமே பிடித்தருளினார்.

அதுகண்டு தாயனார் அஞ்சிநின்று, அறுப்புண்டகாயமும் மறைய, சிவாநந்தப் பெருமகிழ்ச்சிகொண்டு அருளாளர் தமக்குச் செய்தருளிய அருளப்பாட்டை எண்ணிஎண்ணி ஆராமையோடு அஞ்சலிசெய்து,"எனது அறிவில்லாமையை அறிந்து எனக்கு அறிவூட்டும்படி,கமரிடமாக எழுந்தருளிஅமுதுசெய்தருளியஐயனே! போற்றி: உலகத்திற்குஎல்லாம் அம்மையும் அப்பனுமாகிய அருட்பெருஞ் சோதியே! போற்றி: எல்லாஉயிர்களுக்கும் முடிவிடமாய் முடிவற்றிருந்த முன்னவனே! போற்றி: என்று துதித்தார். அப்போது, ஆளுடையார தருமமூர்த்தியாகிய இடபவாகனத்தின்மேல் பெரியபெருமாட்டியாரோடும் காட்சிகொடுத்தருளி, அன்புடையீர்! உமதுதொண்டு மிகச்சிறந்தது. இனி உமது மனைவியாரோடும் நமதுஇடம்பிரியாமல்இருப்பீராக என்றுஅருளிச்செய்து, அவர்களோடு, பெருமான் எழுந்தருளிவிட்டார். பரிவோடு அரிவாளினால்ஊட்டியை அறுத்தலால், அரிவாட்டாயனார் என்று இவ்வுலகம் திருநாமமந்திரம்பெற்றுத் துதித்து நிற்கின்றன. இவர் இலலறத்திலிருந்து சுத்தகிரியாமார்க்கத்தில் நின்று சிவலிங்கத்தால் முத்திபெற்றவர் என்றுணர்க. இச்சரித்திரத்தின் கருத்து என்னெனில்: எடுத்த கருமத்திற்கு ஏற்றகருவி முட்டினாலும், ஊக்கம் குறையாவழி இனிது முடிந்து பயனுண்டாகும் எனவும், இறைவன் நமதுதொண்டினை எற்றுக்கொள்வதற்கு இடம் வரையறை இல்லைஎனவும்பெறப்பட்டது எனவறிக. இவர் இலிங்கபத்தியுள சுத்தசரியா மார்ககத்தை உணர்த்தவந்த குருமூர்த்தம் என்று கொள்க.

அரிவாட்டாயநாயனார் புராணம் முற்றிற்று.

---

திருச்சிற்றம்பலம்.

## II.—ஆனாயநாயனார் புராணம்.

---

தமிழ்நாட்டின் உட்பிரிவாகிய மழநாட்டிலே, மங்கல [illegible]த்தின்கண் வாழ்கின்ற பெருமைபொருந்திய ஆயர் குலத்தை விளக்கஞ்செய்யும்படி ஆனாயர் திரு அவதாரம் செய்திருந்தார். அவர், திருவெண்ணீற்றை மறவாத அடிமைத்திறமுடையவராய், மனம், வாக்கு, காயம் என்னும் மூவகைக்கரணத்தாலும் நடத்தும் தொழில்முழுவதும் சிவபெருமானார் திருவடிக்கே ஆகும்படி, மற்

றொன்றினையும் விரும்பாதவராய் இருந்தார். இவர், தமது ஏவற்
சுற்றமாகிய கோபாலர்களோடு பசுநிரைகளையும் இளங்கன்றுக
ளையும் நல்லஇடங்களையும், சிறந்த புல்லுள்ள காட்டிற்குக்கொ
ண்டுபோய் அவற்றின் கருத்திசையமேய்த்து, நோய் விலங்கூறு
முதலிய துன்பங்களை யொழித்துக் காத்துவரும்நாளில், தம்மை
உடையவரும் சாமவேதப்பிரியருமான அழகிய திருச்சிற்றம்பல
முடையாரது திருவடிப்புகழை வேய்ங்குழலில் அமைத்து, இசை
யோடுபாடவேண்டும் என்னும் விருப்பத்தை அடைந்தவராயி
னார்;* உடனே, அவ்விசை இலக்கணத்தைக்கூறும் காந்தருவ
வேதவிதிப்படி, ஒருமூங்கிலினது மூன்று பாகத்துள் ஒத்தமுன்
பின்பாகங்கள் ஒழிய நடுப்பாகத்தை அரிந்துகொண்டு, அதில்
வாயுசஞ்சாரத்துளையோடு நரப்புத்தானத் துளைகள் ஒன்றற்கு
ஒன்று அங்குலவிசாலம் இருக்கும்படி அமைத்து குழல்செய்து
கொண்டு, அதில், நம்பெருமானாரது ஸ்ரீபஞ்சாக்கரத்தை எழுவ
கைச் சுரங்களும்பொருந்த; மன்னுயிர்கள்மனமுருக மரமுமுருக;
வாசித்துவந்தார். வாசித்துவருகையில், உலகத்து உயிர்கள் எல்
லாங்களிக்கத்தக்ககார்ப்பருவம் வந்தது. அப்போது, ஆனாயனார்,
ஒருநாள், திருவெண்ணீறுதரித்து, மரவுரிஉடுத்து, தழைஆடை
அணிந்து, திருவடியிற் செருப்புத்தொடுத்து, கையில்கோலும்
புள்ளாங்குழலுங்கொண்டு, ஏவற் சுற்றமாகிய இடையர்கள் பசு
நிரைகளோடு புடைசூழ்ந்துவரப் பாடி விட்டுப் புறப்பட்டார்.

புறப்பட்டவர், ஒருமுல்லைநிலக்காட்டிற்குப்போய், அங்கு
நிறையப்பூத்துக்காய்த்துநின்ற கொன்றைமரத்து அருகேநின்
றார். அப்போது, அக்கொன்றை மரமானது சிவபெருமானாரது
திவ்ய சகளகோலம்போலக்காட்டவே, அதனைநோக்கித் தம்பெரு
மான் தியானத்தைப்பெற்றவராய் மனமஉருகி ஒருவழிப்பட அன்
புபெருகி, முப்பத்திரண்டு, ஒன்பது, ஏழு, என்னும் துளைவேறு
பாட்டால் பலவகைப்பட்ட புள்ளாங்குழல்களுள், வங்கியம் என்
னும் ஏழுதுளையினையுடைய புள்ளாங்குழலை எடுத்து, மலர்வாய்
சாத்தி, முத்திரை முதலிய துளைத் தானங்களைச் சோதித்து, விரல்
களைச்செலுத்தி, வக்கானைசெய்து இசைகளைச்சமநிலைகண்டுமுதல்
தொடங்கி, எடுத்திசை, தாழிசைகளைக்கிரமப்படி அமைத்து, அந்
நிலத்துக்குரிய முல்லைப்பண்ணைப்பாடியபின்பு, அருட்கடலாரது
திருவெழுத்து ஐந்தினையும் இசைவித்து, வண்ணம் வனப்பு முத
லிய இலக்கணங்கள் வழுவாதபடி பாடியருளினார். அப்போது, அவர்
திருவாய்மலரினிடத்திலிருந்தும் உண்டாகிய மஹா மாதுரியமா
கிய இசையென்கின்ற தேன்வெள்ளமானது, ஆளுடையார் திரு
வைந்தெழுத்தாகிய அமுதத்தோடுகலந்து, எல்லாவுயிர்களினு

டைய காதுகளாகிய காலிற்சென்று உள்ளம்நிரம்பவே, மேய்ந்த பசுக்கள் அசைவிடாமல் தம்மை மறந்துவந்தன; கன்றுபால்மறந்தன; இடபங்கள், மான்முதலிய மிருகங்கள் மயிர்சிலிர்த்து அடைந்தன; ஆடும் மயில்கள் அசைவற்றன; கிளி, புறா, கானங்கோழி முதலிய பறவைகள் எல்லாம் சோர்ந்து அருகுவந்தன; ஏவற்சுற்றமாகிய கோவலர்கள் செய்தொழில் மறந்து நின்றார்கள்; நாகலோகவாசிகளும், மலைவாழும் வரையரமகளிரும், நீர்வாழும் நீரரமகளிரும், வானரமகளிரும், காந்தருவரும், சித்தரும், வித்தியாதரரும், சாரணரும், கின்னரரும் மற்ற தேவகணங்களும் வந்து அவ்விசைஅமுதத்தை யுண்டார்கள்; வலியரும் மெலியரும் ஒத்தார்கள்; தம்மை மறந்து அறிவு இசைமயமாய் ஒருவழிப்பட்டபடியால்தமக்குள்ள சாதி இயற்கைப்பகை மறந்து பாம்பு மயின் மேல்விழும்; யானையும் சிங்கமும் நண்புற்று ஓரிடத்தில் நிற்கும்; புலியும் மானும் ஒன்றாகச்சேரும்; பெருங்காற்றும் அசைந்தடித்ததில்லை; மரங்களின கிளைகளும் சலித்ததில்லை; மலையருவி ஓசை செய்ததில்லை; ஆற்றுவெள்ளமும் தேங்கிநின்றது; மேகங்களும் மழை பெய்யாது அசைவின்றி நின்றன.

இவ்வாறு, உலகமெல்லாம் இசைமயமாய்த் தம்மைமறந்து சிவயோகிகளாகிய ஞானிகளைப்போலத் தத்துவங்கமூன்று ஒருவழி நிற்கையில், பரிபூரணராகிய சிவபெருமான் திருவுளப்பாங்காய், அவரது தியானகோலமாகி உலகமாதாவாகிய பெருமாட்டியாரோடும் இடபவாகநரூடராய்க் காட்சிகொடுத்தருளி, ஐயரோ! இப் புள்ளாங்குழ லிசையை நமது அன்பிற் சிறந்த பெரியோர்கள் எப்பொழுதும் கேட்கும்படியாகப்பாடி, இவ்வாறே நமதுபக்கலில் அழிவற்றுஇருப்பீராகவென்று அருளிச்செய்து, தேவர்முனிவர்கள் வேதமொழிகளால் துதிக்கும்படி ஸ்ரீசிற்சபைக்குளெழுந்தருளினார். இவர் இல்லறத்திலிருந்து சிவலிங்கபத்தியால் தோத்திரயோக நிஷ்டராய் முத்தி யடைந்தருளினவர் என்றுணர்க. இச் சரித்திரத்தின் கருத்து என்னெனில்? இசையோடு கடவுளைத்துதிப்பதும் ஒருயோகமாம் எனவும், அது தற்போதம் அற்று ஒரு வழிப்பட்ட மனத்தோடு செய்யவேண்டு மெனவும், அவ்வாறு செய்தற்குக்குறிபிறர்மனத்தையும் கவர்தல் எனவும்,பயன் அழியா நிலைபெறுதல் எனவும் பெறப்பட்டதென வறிக. இவர் தோத்திரயோக நிலை உணர்த்தவந்த குருமூர்த்தம் எனக்கொள்க.

ஆனாயநாயனார்புராணமும் இலைமலிந்தசருக்கமும் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

திருநின்றசருக்கத்துள்,

# III.—அப்பூதிஅடிகள்புராணம்.

பெருமைபொருந்திய சோழவளநாட்டில் திங்களூரில்வாழும் அந்தணர் குலத்தில் அவதாரம்செய்தருளிய அப்பூதியடிகள் காம முதலிய அறுவகைப் பகைகளையும் கடிந்து, சற்குணங்களோடு நட்புகொண்டு, சிவநேசச்செல்வராய் இல்லற தருமம் வழுவாது நடத்தி வருநாளில், ஆளுடைய அரசுகளாகிய திருநாவுக்கரசு சுவாமிகளைத்தாம் நேரோதரிசிப்பதற்கு முன்பாகவே, அவரை உடையவர் அடிமைகொண்டு பேரருள்செய்த அருளப்பாட்டைக் கேள்விப்பட்டு, அவ்வளவிலே அவரிடத்தில் அளவில்லாத அன்பும் பத்தியும உடையவராய், அவரதுதிருநாமத்தைத் தாம் திருமந்திரமாகக் கொண்டதே அன்றி, தமது புத்திரர்களுக்கும் மற்றைய பொருள்களுக்கும் திருநாமமாகச்சாத்தி, அநேகம் மடங்களும் தண்ணீர்ப்பந்தர்களும் தடாகங்களும் மற்றுமுள்ள பலதருமங்களும் அவ்வருமைத திருநாமத்தாலே அமைத்து, ஆண்ட அரசுகளைத்தரிசிக்கவேண்டும் என்னும் ஆவலோடு எதிர்பார்த்து இருந்தார். இவர் இங்ஙனம் இருக்கையில், எம்முடைய அப்பரும், திருப்பழனம என்னும் தலத்திற்கு எழுந்தருளி ஆளுடையாரைத் தரிசித்துப்பதிகம் பாடித்துதித்தருளி, மற்றைய திருப்பதிகளையும் தரிசிக்க வேண்டும் என்னும் திருவுள்ளத்தால் புறப்பட்டு அத்திங்களூர் வழியாகவந்தார். வருகையில், அளவில்லாத போக்குவரத்தாய் உள்ளசனங்கள் வெயில் இளைப்பாறும்படி வைத்திருக்கும் ஒரு தண்ணீர்ப்பந்தரில் வந்து, அதன் அமைதிகளை எல்லாம பார்த்தருளி, அங்கே திருநாவுக்கரசென்னும பெயர்எங்கும்எழுதியிருப்பதைக்கண்டு, அங்கு உள்ளவர்களை விசாரித்தருள; அவர்கள், அப்பூதியடிகளார் ஆளுடைய அரசுகளின் திருநாமத்தால் இவ்வாறு அமைக்கப்பட்ட சாலைகளும் குளங்களும் சோலைகளும் அநேகம் உள்ளன என்று சொன்னார்கள். அதுகேட்டு, அப்பர் சுவாமிகளும்இவ்வாறுசெய்தகருத்துயாதோ? என்றுநினைத்தருளி, அவ்வப்பூதியடிகள் எங்கு இருப்பது என்று வினவினார். அதற்கு அவர்கள் இவ்வூரில்தான் இருப்பது. அவரும் இப்பொழுதுதான் இங்கு இருந்து திருமாளிகைக்குச் சென்றருளினார். அத்திருமாளிகையும் தூரமன்று சமீபமேஎன்று சொல்லினார்கள். உடனே, வாகீசத்திருவடிகளும் அங்கு சென்று அவர் திருமனை முற்றத்தில் எழுந்தருளினார். அப்போது, அப்பூதியடிகளார், சிவனடியவர் ஒருவர் எழுந்தருளி இருக்கின்றார் என்று கேள்விப்

பட்டு, அதிகவிரைவோடும் வந்து நமஸ்காரம்செய்ய; அவர் செய்வதற்கு முன் அரசுகள் தாம் நமஸ்காரம் செய்தருள, ஒருவரையொருவர்பெற்று அளவளாவியபொழுது, அப்பூதி அடிகள் ஆளுடைய அரசுகளை நோக்கி, எம்பெருமான் இங்கு எழுந்தருள முன்ன என்னதவம் செய்தேனோ? அறியேன். அதுநிற்க. இப்பொழுது, இங்குவரக் கருணைசெய்த காரணம் யாதோ? அதனைக் கட்டளையிட்டருள வேண்டும் என்று விண்ணப்பித் தருளினார்.

அதுகேட்ட திருநாவுக்கரசு சுவாமிகள், ஐயரே! திருப்பழனத்திற்குவந்து, தரிசனம்செய்துகொண்டு, வரும்வழியில் அமைத்திருக்கப்பட்ட தண்ணீர்ப்பந்தர் முதலிய பலதருமங்களின் விபவங்களைக் கண்டும் கேட்டும வந்தோம். ஆனால், அத்தருமங்களுக்கு உமது திருநாமம் சாத்தாது வேறொரு பெயர் எழுதி இருக்கின்றதே? அஃது என்னை? என்று வினவியருளினார். அப்போது, எதிர்நின்ற அப்பூதி அடிகள்கேட்டு, நிலைசோர்ந்து நெஞ்சுஉலைய வருத்தப்பட்டு பெருமூசசெறிந்து, ஐயா! தேவரீர் சுபவார்த்தையருளிச்செய்யாது விட்டீர். சமணரும் அரசனும் செய்த வஞ்சத்தை எல்லாம் சிவபணிவிடையின் பலத்தாலேயே ஜயித்தருளிய எம்பெருமான் திருநாமமந்திரமோ? வேறொருபெயர்: இன்னும் அத்திருத்தொண்டின் ஆற்றலாலே மறுமையிலேயும் நாம் பிழைப்பதென்று என்போன்ற சிறியவர்களும் தெளிவுகொள்ளும்படி, அடியேன், எம்மை ஆளுடைய அரசுகள் திருநாமத்தை எழுதினேன். அதற்கு நீர் இக்கொடுமொழி என்காதிற் படும்படி, அருளிச்செய்தீர். இதுநிற்க. பெரியசமுத்திரத்தின் மேல் கற்றூணே தெப்பமாக மிதக்கக் கொண்டு அவர் கரைஏறிய பெருமை, ஆண்டவர் ஆணைதாங்கிய புவனங்களில் உள்ளவர்களுள், அறியாதவர்கள் ஒருவருண்டோ? நித்தியமங்கலகரமாகிய சைவத் திருவேடத்தோடும் நின்றருளிய தேவரீர்! இவ்வார்த்தைசொல்வானேன்? தேவரீர்! எங்கே எழுந்தருளியிருப்பது? தேவரீர்தான் யார்? என்று குறைவினவி யருளினார். அப்போது, அவ்வேதியர்குலமணியாகிய அப்பூதியடிகளது பெருமையை அரசுகள்அறிந்து, அடியேன் வழிஅறியாது வேற்றுத்துறையில் விழுந்து, பிறவிக்கடலுள் அழுந்தாது முத்திக்கரைக்கு ஏறும்படி, தமது காருணியத்தினால் சூலைநோய் கொடுத்துப்பெருமானார் அடிமைகொள்ளப் பெற்றுப் பிழைத்த அறிவில்லாத ஏழையேன்: என்று திருவாய் மலர்ந்தருளினார்.

இங்ஙனம் எம்மை ஆளுடைய அரசுகள் திருவாய்மலர்ந்தருளிச் செய்யவே, அப்பூதியடிகள் தமது இரண்டுகைகளும் தலைமேல் ஏறக்குவித்துக் கண்களில் அன்புநீர்பெருக; சொல்குழற

உடம்புமுழுவதும் மயிர்க்குச் செறியத் தண்டம்போலப் பூமியில்விழுந்து, அரசுகளது திருவடிகளைப் பிடித்துக்கொண்டார். அரசுகளும் உடனே எதிராக வணங்கி அவரை எடுத்தருளவே; தாமடைந்த அருமையான திரவிய வைப்பைக்காலவசத்தால் இழந்து வறுமை அடைந்து, வருத்தப் படுகின்றவர்கள் மறுபடியும் அவ்வைப்பை ஒரு முயற்சியும் இன்றிப் பெற்றுக்கொண்டால் எவ்வளவுகளிப்பை அடைவார்களோ அவ்வளவு அடங்காத களிப்பை அடைந்தவராய் எதிர்நின்று கூத்தாடிப் பேராசையோடு ஓடியும் பாடியும் இனிச்செய்யத்தக்கது இதுஎன்று ஒன்றும்தோன்றாமல் மயங்கிநின்று, பின்தெளிந்து, திருமனைக்கு உள்ளாகப்போய், மனைவியார்க்கும் மக்களுக்கும் ஆளுடைய அரசுகள் எழுந்தருளிய பெரிய சுபசந்தோஷ வார்த்தையைச் சொல்லி, அன்புபெருக மற்றைய சுற்றத்தாரையும் அழைத்துவந்து நமஸ்காரம் செய்வித்து, அரசுகளைத் தமது திருமனைக்குள் எழுந்தருளப்பண்ணி, திருவடிகளை விளக்கி, அப்பரிசுத்த தீர்த்தத்தை அனைவரும் தங்கள்மேற் றெளித்துக்கொண்டு உள்ளுக்கும் கொண்டார்கள். பின்பு, அப்பூதியடிகள், ஓர் ஆசனத்தில் அரசுகளை வீற்றிருந்தருளச்செய்து, அருச்சனை முதலியவற்றைமுடித்து, திருவெண்ணீற்றுகாப்பு ஏந்தி மனம்குளிரத் தரிசித்து, திருவமுதுசெய்தருளவேண்டும் என்று விண்ணப்பித்தார். அரசுகளும் அவ்விண்ணப்பத்தை அங்கீகரித்தருளினார். அப்போது, அவ்வப்பூதியடிகள் தமது மனைவியாரைநோக்கி, நம்மிடத்தில் என்ன தவப்பேறிருந்தது? இது சிவப்பிரசாதத்தால் கிடைத்தது: பிழைத்தோம் பிழைத்தோம்: என்றுகூறிப் பெருமகிழ்ச்சியோடும் சென்று, அறுவகைச் சுவையுடைய கறிகளோடு பரிசுத்தமாகிய திருவமுது சமைத்து, தமது மகனாராகிய மூத்த திருநாவுக்கரசை அழைத்து, விரைவில் பரிகலத்திற்கு வாழைக்குருத்துக்கொண்டு வரும்படி அனுப்பினார்கள்.

அவரும், மஹாப்பிரசாதம் என்று காலதாமசம்செய்யாது, தோட்டத்துக்குட்சென்று பெரியவாழைக்குருத்தை அரியும்போது அங்கிருந்து ஒருபாம்பு அவரதுகையில் தீண்டிச் சுற்றிக்கொண்டது. உடனே, அதை உதறிவிட்டு, விஷம் தலைக்கு ஏறுமுன்சென்று கொடுக்கவேண்டும் என்று ஓடிவருகையில், பாம்புகடித்ததைப் பிறர்அறிந்தால், திருவமுதுசெய்யத் தடைஉண்டாம். ஆதலால் ஒருவருக்கும் கூறலாகாது என்று மனைக்குவந்து, விஷம் தலைக்குஏறி ஏழுவேகமும் மிஞ்சி, பற்களும் கண்களும் உடம்பும் கருகி சொல்லும் குழறி உயிர்பிரிய மயங்கி தளர்ந்து விழுகின்றவர், அவ்வாழைக்குருத்தைத் தாயார்பக்கத்தில் வைத்

துவிழுந்துவிட்டார், அதுகண்டு தாயாரும் தந்தையாரும், மனம் பதைபதைத்து, உற்றுப்பார்த்து இரத்தம்வடிதல் உடற்குறி முதலியவற்றால் பாம்புகடித்து இறந்தார் என்று உணர்ந்து, இதனை அறிந்தால் நமது ஐயர் அமுதுசெய்யமாட்டாரே என்று வருந்தி, பின் வேறு மனச்சோர்வு இல்லாமல், அப்பிள்ளையை ஒரு பாயுள் மறையச்சுருட்டி மனைப் புறக்கடை முற்றத்தில் கண்படாமல வைத்துவிட்டு, அரசுகளிடஞ்சென்று வணங்கி, எம்பெருமானே! நெடுநேரம் ஆய்விட்டது: அமுதுசெய்ய எழுந்தருள வேண்டும் என்று விண்ணப்பம் செய்தார்கள். அதுகேட்டு, அரசுகள் எழுந்தருள; அவர்கள் திருவடி விளக்கி, வேறொரு ஆசனத்திலிருந்தருளப்பண்ணி, திருபரிகலத்தைத் திருத்தத் தொடங்கினார்கள் அப்போது, அரசுகள் அவ்வாசனத்தில இருந்து திருவெண்ணீறுசாத்தி அப்பூதியடிகளாருக்கும் அவர் திருமனைவியாருக்கும் திருநீறுகொடுத்தருளிப் பிள்ளைகளுக்கும் கொடுத்தருளும்போது, மூத்தபிள்ளையைக்காணாது அவனையும் தருவிகும்படி அப்பூதியடிகளை நோக்கித் திருவுளம்பற்றியருள; அதற்கு அவர், அங்கேநடந்த காரியம் ஒன்றும் குறிப்பியாது, அவன் இப்போது இங்கே உதவமாட்டான் என்றார். அரசுகள், அச்சொல்லைக்கேட்ட அளவிலே, ஆளுடையபெருமான் திருவருளால் தமது திருவுள்ளத்தில்ஒருகலக்கமஉண்டாகக்கண்டு, இச்சொல்லுக்கு என்னுள்ளம் சம்மதியாது; இதற்கோர் காரணம் இருக்கவேண்டும்; அவன் என்னவாயினன்? உண்மை கூறவேண்டும் என்று வினவியருளினார். அதற்கு அப்பூதியடிகள் நடுநடுங்கி அஞ்சி, சுவாமிகள் திருவமுது செய்வதற்கு இதுதடை ஆதலால் சொல்லப்படாது; ஆயினும் பெரியோர்கள் கட்டளையானபடியால் மறையாது உண்மைகூறவேண்டும் என்னும் ஒழுக்கத்தால் மனம்தளர்ந்து, வருத்தத்தோடு நடந்த செய்திகளை விண்ணப்பித்தருளினார்.

அதனைக்கேட்டு, ஆளுடைய அரசுகள், நீர்கூறியது நன்றாயிருந்தது. இவ்வாறு யார்செய்வார்கள்? என்று அங்கிருந்தும் எழுந்தருளிப்போய் உயிர்பிரிந்து கிடந்த சவத்தைத்திருக்கண் சாத்தியருளி, சிவபெருமான் திருவருள் செய்யும்படி "ஒன்றுகொலாம்" என்னும் திருபதிகம் பாடிப் பாம்பின் விஷத்தைத் நீக்கியருளினார். விஷம் நீங்கவே அப்பிள்ளை, நித்திரைசெய்து விழிப்பவர்களைப்போல, உயிர்பெற்றெழுந்து திருநாவுக்கரசுகளது திருவடிகளில் வணங்கிநிற்க, அவரும் திருவெண்ணீறு சாத்தியருளினார். அதுகண்டு, அப்பூதியடிகளும் அவர் மனைவியாரும் சிவபெருமான் திருவடித் தொண்டின் மார்க்கத்து அருமையையும் பெருமையையும் அன்போடு துதித்து, ஆராமை பெற்றவர்களாய், இவன், எம்

பெருமான் திருவமுது கொள்வதற்கு சிறிதுகாலம் தடைசெய்தானே என்று வருத்தம் அடைந்தார்கள். அதனை அரசுகள் அறிந்தருளி, அவர்களோடு திருமனைக்கு எழுந்தருளியபோது, அப்பூதி அடிகள் வேண்டுவனவற்றைப் பக்கத்திலிருந்து உபசரிக்க, அவர் மனைவியார் விதிப்படி கோமயத்தால் நிலத்தைமெழுகிக் கோலமிட்டுப் பரிகலமாகியவாழைக்குருத்தை விரித்துதீபமேற்றி, சுத்தசலம் அமைத்துவைத்து, திருவமுதுபடைக்க, அரசுகள் அப்பூதிஅடிகளை நோக்கி, பிள்ளைகளோடு தேவரீரும் திருவமுது கொள்ளலாமே என்று திருவாய்மலர்ந்தருளிச் செய்தார் உடனே, அப்பூதியடிகளாரும் அவ்வாணையைப் பெற்று, புதல்வர்களோடு தாமும் அரசுகள் உடனிருந்து, மனைவியார் உபசரிக்கும்படி, திருவமுது செய்தருளினார்.

இவ்வாறு, ஆளுடைய அரசுகள் நெடுநாள் அப்பூதியடிகள் திருமனையில் எழுந்தருளியிருந்து பின்பு திருப்பழனம் என்னும் திருப்பதிக்கு எழுந்தருளி அவ்விடத்தில் பெருமான்சந்நிதி அடைந்து, அப்பூதியடிகள் திருத்தொண்டைச் சிறப்பித்துத் திருப்பதிகம் பாடியருளினார் அதன்பின, அரசுகள மற்றைய தலங்களைத் தரிசிக்கும்படி எழுந்தருளினார் - அப்பூதியடிகளார் அரசுகளுடைய கட்டளையின்படி அங்கிருந்தே, ஆளுடைய அரசுகளது திருவடித்தியானத்தினாலே அழகிய திருச்சிற்றம்பலமுடையார் திருவடிநீழலை அடைந்தார். இவர் இல்லறத்திலிருந்து குருபத்தியால் சுத்தஞானசன்மார்க்கம்பெற்று முத்தி அடைந்தருளினவர் என்றுணர்க. இச்சரித்திரத்தின் கருத்து என்னெனில்? குருபணி விடைசெய்வார் அடுத்த இடையூறுகளுக்கு அஞ்சித்திருப்பணியைச் சோரவிடலாகாதெனவும், அவ்வாறுசெய்த திருப்பணி முடிவில் இன்பத்தையே விளைவிக்கும் எனவும், கடவுள், அருளைப்பெற்றவர்களுக்குச்செய்தற்கு அரியதென்பது ஒன்றுமில்லை எனவும் பெறப்பட்டதென அறிக. இவர்குருபணிவிடையைச் செய்யும் சுத்தஞான சன்மார்க்க நிலைமையை விளக்கவந்த குருமூர்த்தமெனக் கொள்க.

அப்பூதிஅடிகள் புராணம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

# IV. திருநீலநக்கநாயனார்புராணம்.

• நீர்வளம் மிகுந்த சோழதேசத்தில் திருச்சாத்தமங்கை என்னும் திருப்பதியில் வாழுகின்ற சிறந்த அந்தணர்குலம் விளங்கும்

படி சிவநேசமுடையவராய் நீலநக்கஅடிகள் எழுந்தருளி இருந்
தார். அவர் சிவபெருமானையும் சிவனடியார்களையும்ஒரேகோலமெ
னக்கண்டுபணிந்துவேதாகமவிதிப்படிசிவபூசைசெய்யும் நியமம்
பூண்டு அடியார்களுக்கு அமுதுசெய்வித்தலாகிய மகேசுர பூசை
யும நடத்திவரும்நாளில், ஒருககால் திருவாதிரைத் திருநாள் நேர்
ந்தது. சேரவே தமது நியமப்படி, சிவபூசைமுடித்து, அத்திருப்
பதியிலுள்ள அயவந்தி என்னும் திருக்கோயிலுள் எழுந்தருளி யி
ருக்கும் அருள்வண்ணப் பெருமானை அருச்சிக்கும் இச்சையால்
பூசாத்திரவியங்களைக் குறைவறச் சேகரித்துக்கொண்டு மனைவியா
ரோடும் ஆலயத்திற்குச் சென்று அருளாளனை வணங்கித் தமது
பத்தினியார் வேண்டுவனவற்றை உதவி உபசரிக்கப் பூசைசெய்ய
த் தொடங்கினார். இவ்வாறு பூசைமுடித்தபின்பு அன்புக்கு முடி
வுஇல்லாமல் வலம்வந்து, நமஸ்காரம்செய்து, வேதவாக்கியங்க
ளால் துதித்து, அவ்வேதப்பொருளான உடையவனைத் தம்மு
ணர்வால் நோக்கி, ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைச் செபித்தருளியிருந்தார்.
அத்தருணத்தில், ஒரு சிலம்பிப் பூச்சியானது தவறிப் பெருமா
ன் அற்புதத் திருமேனிமேல் விழுந்தது. அதுகண்டு அருகிருந்த
மனைவியார் அன்பின் மிகுதியால் அதிக அச்சத்தோடும் விரைவா
கஓடி, உலகில் தாய்மார் தங்கள் இளங்குழந்தைகள் மேல் சிலம்பி
விழுந்தால், துடைத்து வாயினால் ஊதித் துமிப்பதுபோல; ஊதி
த்துமித்தார். அதுகண்டு நீலநககஅடிகள் தமது திருக்கண்களை மூ
டிக்கொண்டு, அறிவிலாதவளே? என்ன காரியம செய்தாய்? எ
ன்றார். அதற்கு அவர் சிலம்பிமேல் விழுந்தபடியால் ஊதித்துமி
த்தேன் என்றார். அபபோது, நீலநககஅடிகள் அவரது அன்பின்
மிகுதியைத் திருவுளங்கொள்ளாமல தமது பூசையில் இது அநுசி
தமானசெய்கை என்று நினைத்து, அமமனைவியாரை நீக்கிவிடத்
துணிந்து, அவரைப்பார்த்து, ஓ பெண்ணே! ஆளுடையவர் தி
ருமேனிமேல் சிலம்பிவிழுந்தால், அதைவேறு ஒன்றினால் மாற்ற
அறியாமல் ஊதிவாய்நீர் படும்படி அநுசிதம்செய்தாய். ஆதலால்
உன்னை நான் துறந்துவிட்டேன் என்று அருளிச்செய்தார்.

அப்பொழுது, சூரியன் அஸ்தமித்தபடியால், அவ்வம்மையார்
ஆணைகடவாது ஒருபுறம் நிற்க; நீலநக்கஅடிகள், உடனே பவித்தி
ர பூசைசெய்து முடித்துத் தமது திருமாளிகைக்கு எழுந்தருளி
னார். அவர் மனைவியாரோ? கட்டளையை மறுக்க அஞ்சிய உள்ள
முடையவராய் அவரோடு திருமனைக்குவாராமல ஆலயத்திற்று
னே இருந்தார். அன்று இரவில், நீலநக்கர் சயனித்திருந்தருளிய
பொழுது, அயவந்தியுடையார் அவர்கனவில் தியானத் திருக்கோல
த்தோடு தோன்றித் திருமேனியைக் குறித்துக் காட்டியருளி, ஐய

ரோ! எமது, அன்னை அன்பால் ஊதித்துமித்த இடமொழிய மற்றைய இடங்களில் இருக்கும் சிலம்பிக் கொப்புளங்களைப் பாரும் என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினார். உடனே, அன்பரும் விழித்து அக்கனவுநிலையை நனவுநிலையாகக் கொண்டு, அச்சத்தோடும் அன்போடும் கைகுவித்துத் தொழுது, பெருமான் அருளப்பாட்டைநினைத்துநினைத்து, ஆராமையோடும் அழுது, ஆடிப்பாடி, உதயகாலத்தில் திருக்கோயிலுக்குச்சென்று, தம்மை ஆட்கொண்டருளிய அப்பனைவணங்கித்துதித்து, மனைவியாரை அழைத்துக்கொண்டு, தமது திருமாளிகைக்கு எழுந்தருளி சிவபூசையையும் அடியார் பூசையையும் முன்போல நடத்திவந்தருளினார். அக்காலத்தில், சீகாழிப்பெருவள்ளலாகிய ஆளுடைய பிள்ளையார், உலகமெல்லாம் பிழைக்கும்படியாகச் சிவபெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருப்பதிகள் தோறும் சென்று தரிசித்து, திருச்சாத்தமங்கைஎன்னும் இத்திருப்பதிக்கும் வந்தருளினார். இவ்வாறு சம்பந்தப்பிள்ளையார், திருநீலகண்ட யாழ்ப்பாணனார் அவர்மனைவி விறலியார் முதலிய சிவநேசப் பெரியோர் திருக்கூட்டத்தோடும் எழுந்தருளியசுபசெய்தியை நீலநக்கஅடிகள் கேள்விப்பட்டு, பெருமகிழ்ச்சியோடு நடைக்காவணம் இட்டு, வாழைகமுகு நாட்டி, தோரணங் கொடிகள்கட்டி, அஷ்டமங்கலம் அமைத்து, நகர அலங்காரஞ்செய்து, பந்துவருக்கங்களோடு எதிர்கொண்டு போய, எமது சம்பந்தப்பெருமான் திருக்கூட்டத்தோடுகலந்து, களிப்பினால் ஆடியும் பாடியும் துதித்தும் பிள்ளையார் திருவடிகளில்வணங்கியெழுந்து, தமது திருமனைக்கு உடன் கொண்டுவந்து, எழுந்தருளப்பண்ணி, அங்கே அடியவர் திருக்கூட்டத்தோடும ஆளுடையாரையும் திருவமுதுசெய்வித்தருளினார்.

அதன்பின்பு, அன்றுஇரவிலும் கவுணியர் பெருமானாகிய நமது சம்பந்தநாயகர் தமது திருமடத்தில்தானே தங்குவதற்கு வேண்டுவனவற்றைச் சித்தஞ்செய்தார். அப்போது, காழிநாடர் திருத்தொண்டர் திருக்கூட்டத்தோடும் திருவமுது கொண்டருளிய வுடன், நீலநக்கஅடிகளை அழைத்து, ஐயரே! நமது திருநீலகண்டப் பெரும்பாணர் இன்றைப்பொழுதில் தங்கியருளுவதற்கு ஒருதக்கஇடம் கொடுத்தருளவேண்டுமென்று திருவாய் மலர்ந்தருளிச்செய்ய; நீலநக்கஅடிகள் நங்குருராயன் திருவாணைபெற்று, வணங்கிப்போய்த் திருமடத்து நடுவுள்ள யாகவேதிகையின் பக்கத்தில் அவர்க்கு இடம்கொடுத்தருளினார். அப்போது அவ்வேதிகை யிடத்துள்ள நித்தியாக்கினி யானது சிவசந்நிதானத்தில் வலமாகச்சுழித்து எழுவதுபோல் முன்னினுஞ்சிறந்து ஓங்கி வலஞ்

சுழித்து எழுந்திருக்கக் கண்ட வேதியர் பெருமானாகிய நீலநக்கர் பெருமகிழ்ச்சி அடைய; யாழ்ப்பாணர் பெருமானும்பாடினியாரோடும் அங்கே சயனித் தருளினார். மறுநாள்காலையில், நங்குருமணி, அயவந்தி ஆலயத்திற்குச்சென்றருளி, அங்கு உடையவரைத்தொழுது, நீலநக்கஅடிகள் திருத்தொண்டினைச் சிறப்பித்துத் திருப்பதிகம் பாடி, நீலநக்கருக்குப் பிரியாத நட்பினைப் பிரசாதித் தருளி, அவ்விடம்விட்டுப் புறப்பட்டு, ஏனைய திருப்பதிகளுக்கு எழுந்தருளினார். அப்பொழுது, நீலநக்கஅடிகள் பிள்ளையாரைப் பிரியமாட்டாதுசிந்தித்து, இட்டகட்டளையை மறுக்கக் கூடாமையால் தமது திருவுள்ளத்தை வள்ளலாரிடத்தில் ஒப்பித்து, அருமையாக மீண்டு, ஒருவகையால் வருத்தத்தோடும் திருச்சாத்த மங்கையில்தானே இருந்துகொண்டு, பழயபடிசிவார்ச்சனை முதலியன நடத்தி வந்தார்.

பின்பு, அவர் பிள்ளையார் எழுந்தருளும் திருப்பதிகளுக்கு இடையிட்டநாள்களில் சென்று சென்று, உடன்பழகிப் பலகாலம் இவ்வாறுகழிந்துபோகப்பின், எமது சம்பந்தநாயகர் திருக்கலியாண மஹோற்சவத்திற்குச் சென்று தரிசித்து, அங்கெழுந்த அருட்பெருஞ் சோதியில் கலந்தருளினார். இவர் இல்லறத்திலிருந்து, குருலிங்கசங்கமம் மூன்றும் ஒன்றாகத்தொண்டுசெய்து ஞானசன்மார்க்கத்தால் முத்திபெற்றவரென்றுணர்க. இவர் குருலிங்க சங்கமத்திறம் மூன்றினையும் ஒன்றென விளக்கவந்த ஞானசன்மார்க்க குருமூர்த்தமென்றுகொள்க. இச்சரித்திரத்தின் கருத்து - என்னெனில்? கடவுளுடைய பூசைக்கு சத்திய அன்புடைமையே ஆசாரமாவதன்றி, இடம்பக்கிரியைகள் அல்ல எனவும், பெரியோர்கள் கட்டளை மறுக்காமையே அருள்பெறுவதற்கு முதற்கருவிஎனவும், பிறப்பினால் வந்த சாதி கடவுள் சந்நிதியில் சிறந்தது அன்று. சத்தியபத்தி ஒழுக்கமேசிறந்தது எனவும் பெறப்பட்டதென அறிக.

திருநீலநக்கநாயனார் புராணம் முற்றிற்று.

---

திருச்சிற்றம்பலம்.

# V.—நமிநந்தியடிகள் புராணம்.

எல்லாச்செல்வமும் பொருந்திய சோழ தேயத்தில், மஹாசிறப்பினையுடைய ஏமப்பேறூர் என்னும் திருப்பதி ஒன்றுண்டு. அதில் சைவசன்மார்க்கத்துட்சிறந்த பற்றுடைய அந்தணர்குலத்

இல் திரு அவதாரம்செய்த நமிநந்தியடிகள், வேதத்தினுடைய முடிபுகளைச் சந்தேகமறத்தெளிந்து, அவ்வேதப்பொருளாயுள்ள சிவபெருமான் திருவடிகளில் இரவும் பகலும் ஒழியாத்தியானத்தினால் களிப்பை அடைந்தசித்தத்தை உடையவராய்த் தினந்தோறும் திருவாரூருக்குச் சென்று, புற்றிடங்கொண்ட பெருமானைத் தரிசித்துவந்தார். அப்படிதரிசித்துவருநாளில் ஒருநாள், வன்மீகப்பிரானைவணங்கி; பூங்கோயில் திருமுற்றத்திற்கு வந்து, அடுத்த அரனெறிஎன்னும் திவ்வியஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் பால்வண்ணப்பெருமானைத் தரிசிக்கும்படி அங்குசென்று தொழுது, பலதிருத்தொண்டுசெய்து முடித்து, தீபத்திருப்பணி குறைவாயிருந்தபடியால் பலதீபங்களை யேற்றவேண்டும என்னும் இச்சை அவர்திருவுள்ளத்தில் தோன்றியது. அப்போது, பகற்பொழுது கழிந்து, மாலைப்பொழுதுவந்தபடியால் வேறு இடம்போவதறகுக் கூடாமல், திருவிளக்குக்குவேண்டிய நெய்வாங்கும்படி, பக்கத்திலிருந்த மனைக்குட்புகுந்து, நெய்கேட்டருளினார். அதற்கு அவர்கள் விளக்கு ஏற்றலாகாது என்னும் ஒழுக்கத்தையுடைய சமணசமயத்தவர்களாயிருந்தபடியால், கையிலே எரிகின்ற தீயை ஏந்திகொண்டிருக்கும் கடவுளுக்கு வேறு விளக்கு என்னசெய்ய? அது அதிகமாம்: ஆயினும், இங்குநெய்யில்லை: வேண்டுமானால் சலத்தை வார்த்து விளக்கு எரியுமே என்று சொன்னார்கள்.

அதுகேட்டு நமிநந்தியடிகள் சகிக்க மாட்டாமல் அதிக மனவருத்தத்தோடும் திரும்பி, ஆளுடையார் திருககோயிலை அடைந்து, சந்நிதானத்தில் நின்று உருகிய உள்ளததோடும் நமஸ்காரஞ்செய்து எழுந்திராமல் அவ்வாறே யிருந்தருளினா. அப்போது, சிவானுக்கிரகத்தால், ஐயனே! கவலைப்படவேண்டாம்: திருவிளக்குத் திருப்பணிசெய்வதற்கு முட்டாதபடி, இக்குளத்துநீரை முகந்து, கொண்டுவந்து, வார்த்து, விளக்கு ஏற்றும் என்று ஆகாயத்தில் ஒரு அசரீரிவாக்கு உண்டாயிறறு. அத்திருவருள் ஆணைமொழியைக் கேட்ட நமிநந்தியடிகள், பேரானந்தம் அடைந்து, பெருமானார் செய்த திருவருளைச்சிந்தித்து, எழுந்து, திருக்குளத்து நடுவேசென்று, ஆளுடைய அப்பர்திருநாமத்தைக் கூறிவந்தித்து, சலத்தை முகந்துகொண்டு, கரையேறித்திருக்கோயிலைஅடைந்து, அகலிலே திரியைமுறுக்கியிட்டு, உலகமெல்லாம் அதிசயிக்கும்படி, அந்தத்திரியின் மேல் சலம்வார்த்து விளக்குஒன்று ஏற்றினார். உடனே அந்தத் தெய்வநீர் விளக்கானது சுடர்விட்டு எழுந்தது, அதுகண்டு, களிப்போடு ஆலயம் முழுவதுய், அந்தச் சமணர்கள் பார்க்கும்படி, உலகமுற்றும் அறிய, தண்ணீரால் திருவிளக்கு எரித்தருளினார். அதன்பின், விடியுமளவும் தீபம்எரியும்படி, குறையா

மல் வேண்டுமளவும் நீர்வார்த்து, அத்திருப்பணியை நிறைவேற்றி, பெருமானை வணங்கி விடைபெற்று, மற்றையகருமங்களை முடிக்கும்படி, அன்றிராத்திரிதானே தமது திருமாளிகைக்கு எழுந்தருளிச் சிவார்ச்சனைமுடித்து, திருவமுதுசெய்து, சயனித்து, உதய காலத்தில் எழுந்து, நித்தகருமங்கழித்து, திருவாரூருக்குவந்து, வணங்கி, பகல்முழுவதும், அரனெறியப்பரை வலமாகவந்து,தொழுது, அகத்தாலும் புறததாலும் செய்யத்தக்க திருப்பணிகள் எல்லாவற்றையும் செய்துமுடித்து, இரவில் அருமையான திருவிளக்குத் திருப்பணியையும் செய்தருளினார்.

அதுமுதல் நாள்தோறும் இவ்விததிருப்பணி செய்துகொண்டு, நமிநந்தியடிகள் எழுந்தருளியிருக்கும் நாளையில், தண்டியடிகளாலே கலகம்செய்த சமணர்கள்,தோல்வி அடைந்து ஒழியவே; சைவத்திருவாரூரின் பெருமை உலகமெங்கும் பரவியது, அப்போது, சோழமகாராஜனானவர் நமிநந்தியடிகள் தலைமைத் திருத்தொண்டு செய்தருள, புற்றிடங்கொண்டருளிய புனிதநாயகருக்கு நித்ய நைமித்ய பூசைக்குவேண்டுவனவற்றை வேதாகம விதிப்படி அமைத்து, உபசரித்துவந்தார். வீதிவிடங்கப் பெருமானாகிய தியாகராஜப் பெருமானுக்கு பங்குனியுத்திர மகோச்சவமும் செய்து, மற்றைய திருப்பணிகளையும் நடததிவந்தருளுங் காலத்தில் ஒருநாள், தேவதேவராகிய திருவாரூருடையார் திருமணலூர்க்கு உலாக்கோலமாக எழுந்தருளினார்! அங்கு எல்லாகுலத்தினரும் பேதம் இன்றி, தரிசநத்திற்கு வநதிருந்தார்கள். அவர்களோடு நமிநந்தியடிகளும் சென்றிருந்து, பெருமான் திருவோலக்கம் தரிசித்துக் களிப்படைந்தார். அஙகிருந்து, பொழுதுசென்ற பின்பு தேவநாயகர் மறுபடியும் திருககோயிலுக்கு எழுந்தருள, நமிநந்தியடிகளாரும் தரிசித்து, அருள்விடை. பெற்றுக்கொண்டு, தமது திருப்பதிக்குச்சென்று, திருமனைகருள் நுழையாமல் புறங்கடையில் நித்திரைசெய்தருள! அவர்மனைவியார்வந்து, சிவார்ச்சனை செய்து, நித்தக்கடன் முடித்து, நித்திய அக்கினி காரியத்தையும் நிறைவேற்றி, அமுதுசெயது, திருப்பளளி கொள்ளலாமே என்று விண்ணப்பித்தார். அதற்கு அவர், உடையவர் திருமணலூர்த்திருவெழுச்சிததரிசனைக்குப் போயிருந்த விடத்தில், பலசாதியாரும் வந்திருந்ததால் எனக்கு அசுசிவந்தது. ஆதலால், குளித்து, சுத்தம் செய்துகொண்டு, பின பூசைக்கு உள்ளே வரவேண்டும் ஆகலின், தண்ணீர் முதலிய கொண்டுவாரும் என்று கட்டளையிட்டருள; அவரும் அவ்வாறுகொண்டுவருவதற்குச்சென்றார்.

அத்தருணத்தில், திருவருளின் பிரேரணையால் நமிநந்தியடிகளுக்கு உடனே சிறிதுநித்திரைவர; விதிப்படி, ஆரூருடையார் திரு

வடியை மறவாமல் நித்திரைகொண்டருளினூர். அப்பொழுது,அவ ரது கனவிலே வீதிவிடங்கப் பெருமான் எழுந்தருளி, ஐயரே! திரு வாரூரில் பிறந்தவர்கள் எல்லாம் நமது பிரமதகணங்களாம். அத னை நீர்பார்ப்பீராக என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினூர். உடனே நமிநந்தியடிகள் சாக்கிரதையை அடைந்து, இன்று இரவில் அருச்சனை செய்யாமல் வீணை குற்றத்தை யெண்ணினேனே! என்று அச்சத்தோடு எழுந்தபடியே திருமனைக்குள்ளே புகுந்து, அருச்சனை முதலிய வழிபாடுகளைச் செய்து, திருமனைவியார்க்கு நடந்தசெய்தியைத் தெரிவித்து, விடியற்காலத்தில் விரைவோடு எல்லா முடையாரது திருவாரூருக்குச் செல்ல எதிரே அத்தெய்வ த் திருப்பதி தோன்றியது. அப்போது, உடையவர் கட்டளைப்படி அத்திருவாரூரில் பிறந்து, வாழ்கின்றவர்கள் எல்லாரும் சிவசாரூ பத்தைப்பெற்ற உருத்திரகணங்களாய் இருக்கத்தரிசித்தார். உட னே இரண்டுகைகளும் உச்சிமேல் ஏறக் கூப்பிகொண்டு மிகுந்த அச்சத்தோடு பலதடவையும் பூமியின்மேல் விழுந்து விழுந்து நமஸ்காரம்செய்து, பேராநந்தத்தை அடைந்தருளினூர். பின்பு அக்கோலம் மறைந்து, பழயபடியே யிருக்கத் தரிசித்து, ஆளுடை யார் சந்நிதியில், அடியேன் பழுதுநினைத்த அபராதத்தைப்பொறு த்தருளவேண்டும் என்று பிரார்த்தித்து, அதுமுதல் தாம் அந்தத் திவ்வியக்ஷேத்திரத்தில் தானே வாசம்செய்திருந்து, தமது நியமத் திருப்பணிகளை வழுவாமல் நடத்திவந்தருளி, திருவெண்ணீறு அ ணிந்த சிவனடியார்களுக்கும் நெடுங்காலம் வேண்டும் திருப்பணி களை யெல்லாம் செய்துவந்தபடியால், உலகம் பிழைக்கும்படி, தமி ழ்வேதத்தைத் வெளிப்படுத்த ஆசிரியமூர்த்தமாய் எழுந்தருளிய எம்பெருமான் திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத்துள் "தொண் டர்களுக் காணிப்பொன்" என்று திருவாய்மலர்ந்தருளித் துதிக் கப்பெற்றூர்.

இவ்வாறு, உலகில் யாம் எல்லாரும் பிழைக்கும்படி, பலதிரு த்தொண்டுகளை முடித்தருளி, நமிநந்தியடிகள், ஆளுடைய சிவ பெருமான் திருவடித் திருநீழலில் என்றும் அழியாநிலைமையில் வீற்றிருந்தருளினூர். இவர் இல்லறத்திலிருந்து சிவலிங்கபத்தி யால் முத்திஅடைந்தவர் என்றுணர்க. இச்சரித்திரத்தின் கருத்து என்னெனில்? கடவுள் நிந்தைசெய்பவர் தண்டிக்கப்படுவர் என வும், கடவுள் அருள்பெற்றவர்கள் ஒவ்வாத பெருங்காரியம் செய் யினும் அது இனிதுமுடியும் எனவும், கடவுள் சந்நிதியில் அறிவு ஒழுக்க ஒற்றுமை ஒன்றேயல்லாமல் கருமவசத்தால் வந்த தேகச ம்பந்தம் பற்றிய சாதி ஆச்சிரமபேதம் இல்லை யாதலால் அவ்வே றுபாட்டை அவ்விடத்தில் குறிக்கலாகாது எனவும் பெறப்பட்

தென வறிக. இவர் சரியை கிரியையின் பாற்பட்ட ஞானமார்க்கத்தை உணர்த்தவந்த குருமூர்த்தமெனக்கொள்க.

நமிநந்தியடிகள் புராணம்முற்றிற்று.

---

பெரியபுராணம், முதற்காண்டம் ௪-வது திருநின்றசருக்கம் முற்றிற்று.

## திருச்சிற்றம்பலம்.

இரண்டாவதுகாண்டம்

# வம்பறுவரிவண்டுச்சருக்கம்.

## VI—ஆளுடைய, திருஞானசம்பந்தப்பிள்ளையார் புராணம்.

வேதாகமமுடிபாகிய சைவநெறியில் வழுவாத பத்திஒழுக்கத்தையுடைய சோழராஜர்களால் அரசாட்சி செய்யப்பட்ட பொன்னிவளநாட்டிலே, பிரமபுரம், வேணுபுரம், திருப்புகலி, வெங்குரு, திருத்தோணிபுரம், திருப்பூந்தராய், திருச்சிரபுரம், திருப்புறவம், சண்பைநகர், கொசசைவயம, திருக்கழுமலம், சீகாழியென்னும பன்னிரண்டுகாரணத் திருநாமம்பெற்ற திருப்பதி ஒன்று பூலோக சிவலோகம போலுள்ளது. அத்திருப்பதியில் வாழ்கின்ற நால்வகை வருணத்துள்ளும சிறந்த அந்தணர்குலத்தில் கௌணியர் கோத்திரம விளங்கும்படி, சிவபாதவிரதயர் என்பவர் இருந்தார். அவர் மனைவியார, ஒத்த சிறப்புடைய வேதியர் குலத்திற்பிறந்து கற்புக்கு அரசியாய்ப்பகவதியார் என்பவர், கணவனார்கருத்தினுக்கு இசைந்த இல்லறவொழுக்கத்துணையாக இருந்தார். இவ்விருவரும், சைவத்தில் தலைசிறந்த மெய்யன்பு உடையவர்களாய், எலலாமுடைய சிவபெருமான் திருவடிகள் அல்லாமல் வேறுஒன்றை மதியாதவர்களாய், உலகிடதங்களெல்லாந் துதிக்கும்திருவெண்ணீற்றி னிடத்தில், சத்திய பத்திவைத்தவர்களாய், இல்லறதருமத்தை வழுவாது நடத்திவருங்காலத்தில், வேதாகம விரோதிகளாகிய சமணாகளும் புததர்களும், உலகம் எங்கும்பரவி, முற்காலத்தில் அகங்கரித்த அசுரர் முதலானவர்களை வஞ்சிக்கும்படி, விஷ்ணுவானவர் போதித்த சிறியயுத்திவாதமுடைய தங்கள் மார்க்கங்களைப் பாராட்டிவந்தபடியால், வேதாகம வழக்கமானது சுருக்கத்தைஅடைந்து, திருவெண்ணீற்றினது மகிமையும், அடியார் பெருமையும் விளங்காமற் போவது கண்டு,

சிவபாதவிரதயர் திருவுள்ளம் வருத்தமுற்று, அப்பரசமயங்களெல்லாம் நிலைதளர்ந்து ஒழியவும், எல்லாவுயிர்களும் உண்மைநிலையறிந்து, ஈடேறிப்பிழைக்கவும், இல்லறதருமத்தின் பயன்பெறவும்வேண்டி, ஒருபுதல்வனைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்னும விருப்பத்தாலே அரியதவத்தைச் செய்துவந்தார்.

அப்போது அத்தவம், எல்லாமுடைய பெரியதிருநாச்சியாரோடு திருத்தோணியில வீற்றிருந்த பெரியபெருமானார் திருவடிக்குப் பாங்காகவே, அச்சிவபாத விரதயர் திருமனைவியாராகிய பகவதியார் அருமந்த திருவயிற்றிலே உலகம் உய்யப் பெறும்பேறாகிய கருப்பம் உண்டாயிற்று. அதுகண்டு, சிவபாதவிரதயர், ஆளுடையார் பெருங்கருணையைத் துதித்து, அளவிறந்த களிப்போடு வேதவிதிப்படி, பத்துமாசங்களிலுஞ்செய்யத்தக்க சடங்குகளைச் செய்து சுற்றத்தாரோடும் அளவளாவியின்பம் அநுபவிக்கும்நாளிலே, சூரியன் முதலிய கிரகங்கள் உச்சஸ்தானங்களிலே வலிபெற்று நிற்கவும் திருவாதிரை நக்ஷத்திரத்தோடு கூடிய நல்லசுபலக்கினத்திலே, பரசமயங்களின் ஒளிமழுங்கவும், வைதிகத்திற்கு ஆதியாகிய சைவமானது தழையவும, சிவனடியார்கள் மனங்களிக்கவும் திருநீற்றின் ஒளி பிரகாசிக்கவும், எல்லாவுலகமும் சுகமுறவும், தேவர்களெல்லாம் அதிசயத்தை அடையவும், வேதியர்கள் செய்யும் வேள்விவளரவும், தமிழ்செய்த பெருந்தவமானது நிறைவேறிப பயன்பெறவும், முனிவர்கள் செய்த தவமெல்லாம் முடியவும், எல்லாவுலகத்துள்ளும் பூவுலகமே சிறந்ததாகவும், எட்டுதிசையுள்ளும் தெற்குத்திசையே பெருமையுடையதாகவும், பலபாஷைகளுள்ளும் தமிழ் ஒன்றே வெற்றிபெற்றதாய் விளங்கவும், புகழும் ஞானமும் சுருங்காது வளரவும், மூவகைத்தொழிலிலும் சிருட்டியே மேலானதாகவும், நிகழ்கால எதிர்காலங்களுள் உண்டாகும் குற்றங்களெல்லாம ஒழியவும், ஆளுடையபெருமானார் திருவருள்விலாசம எங்கும்பரவவும, எம்மையுடைய பிள்ளையார் திருவவதாரம் செய்தருளினார். அப்போது அங்குள்ளவர் யாவர்க்கும் காரணமின்றித் தம்மை அறியாது எலலாம திருவருள் என்னும எண்ணத்தோடுகூடிய ஒரு களிப்பு உண்டாயிற்று. சோலைகளிலேயுள்ள எவ்வகைப்பட்ட மரம, கொடி, புதல் முதலிய ஓரறிவுயிர்களும் தழைத்தலாகிய சந்தோஷக்குறியைக் காட்டி, காலநியமம் இல்லாமல, அரும்பியும், பூத்தும தேன் துளித்தும், மகரந்தங்களையுதிர்த்தும், காய்த்தும், பழுத்தும், மணம்வீசியும் நின்றன. புழுதியெழும்பாதுகுளிர்ந்த இளந்தென்றல் வீசியது. குளமுதலிய நீர்நிலைகளில சலம் தானே குளிர்ச்சியையும் தெளிவையுமடைந்தது. தேவர்கள் பூமழை பொழிந்தார்கள். யாகத்தீவலஞ

சுழித்துஎழுந்தது. வேதியர் அகாரணமாய் நைமித்திக வேள்வி
செய்தார்கள். அவரவர் தங்கள் கிரககிருத்தியத்தை முன்னிட்டு
வேறுவார்த்தை பேசத்தொடங்கினாலும், அவர்அறியாதபடி, அ
வ்வார்த்தை இன்றிவேதமொழிகளே வெளிப்பட்டன. கேவலம்
அபக்குவிகளுக்கும் சிவஞானமும், சிவயோகமும், குருவுபதே
சம் இன்றி நிகழ்ந்தன. ஆகாயம் மேகமாசின்றி, அஸ்தமித்தல்
வக்கிரித்தல் முதலிய தோஷங்களில்லாத கிரகங்களோடு சுத்தமு
டையதாகப் பிரகாசித்தது. எல்லாமங்கல வாத்தியங்களும முழக்
குவாரில்லாமல் தெய்வத்தன்மையால தாமே முழங்கின. பறவை
முதலியன சுபக்குறிகளைத் தெரிவிப்பனவாய், நல்லதிசைகளில்
களிப்போடு சுகதொனிசெய்தன.

இப்படிபபட்ட சுபசகுநஙகள் உலகத்தில் எங்கெங்கும் உண்
டாகப், பிள்ளையார் திருவவதாரஞ் செய்யக்கண்டு, பிதாவாகும்
படி தவஞ்செய்த சிவபாத விரதயா, பரமானந்த மடைந்தவராய்,
நைமித்திக ஸ்நாநம், தருபபணம, ஜபம, ஹோமம், தாநம்முதலிய
சடங்குகளை விதிப்படி நிறைவேற்றி மங்கல முழக்கத்தோடு சாத
கருமஞ்செய்து, புத்திரோச்சவமகொண்டாடி நெய்விழாவெடுத்
தனர். அத்திருப்பதியி லுள்ளவர்களும, ததகம புத்திரோச்சவம்
போலக்களித்துத தங்கள்தஙகள மனைகள்தோறும, எண்ணெய்
விழாச்செய்து, விதைவழங்கி, பலதானங்களைக்கொடுத்து, வரு
கின்ற அடியவர்களுககு மஹேஸ்வரபூசைமுதலியவற்றைச் சிறப்
பாகநடத்தி, வெண்கடுகு, நெய், அகில, சந்தனம், தேவதாரம்,
சாம்பிராணி முதலிய தூபங்களாலும் பலவகைத் தீபங்களா
லும் விளக்குவித்து ஆடலபாடல்கள் நிரமப நடத்தினார்கள்.
இவ்வாறு, பெற்றவர்களேயன்றி மற்றவர்களும் அற்புதப் புத்
திரோச்சவத்தைக் கொண்டாடிய பத்துத்தினமுங் கழிய, நல்ல
சுபமுகூர்த்தத்திலே, நாமகரணஞ்செய்து தொட்டிலி லேற்றி
பலஅருமையோடு சீராட்டி, அந்நப்பிராசந முதலிய கருமங்க
களை விதிப்படி அவ்வக் காலங்களிலே தாதையார் நடத்தியருளி
னார். பிள்ளையாரும், நற்றாயரோடு செவிலித்தாய் முதலிய தாய்
மார் தாலாட்டிச் சீராட்ட, காப்புப் பருவங்கடந்து, தவழ்தற்
பருவஞ்சென்று மேல் தளர்நடைப்பருவந் தாண்டிச் சிறுதேர்
உருட்டுதல் முதலிய திருவிளையாடற்பருவத்தை யடைந்து யாவர்
க்கும் இன்பம்விளையும்படி பாலலீலைகளை நடத்தியருளினார். அப்
போது, நம்மையாளுடைய பிள்ளையார்க்கு மூன்றாவது திருவய
தும் வந்தது. அதுமுதல், பிள்ளையார் தம்மையென்றும் பிரியா
மையுடைய சிவபிரான் பிரித்துச் சிவபாதவிரதயர் தவத்திற்குப்
பிரசாதமாகும்படி, புத்திரராகக்கொடுத்தருள, தாம் பிரிந்துவந்த

பிரிவாற்றாமை திருவுள்ளத்தில் உறுத்துந்தோறும், கண்டவர்க்கு வெருக்கொண்டு அழுவதுபோற் குறிப்புவேறாக, அழுதருளுவார்.

அவ்வாறு நிகழுநாளிலே, ஒருதெய்வத்திருநாளில், வேதவிதிப்படி, தாம் செய்துவருநித்தநைமித்திககருமங்களை முடிப்பதற்குச் சிவபாதவிரதயர் நீராடச்செல்லுகையில், திருவருளாணையால், பிள்ளையார் தாமும் அவரோடு கூடச்செல்லுவதற்குப்பின்தொடர்ந்து அழுதுகொண்டேசென்றருளினார். அதுகண்டபிதா அப்புறம்போகாது நின்றுகோபிப்பார்போலக்காட்டி, தம்மோடுஅவர்வருதலைத் தடுத்தார். அத்தடைக்குப் பிள்ளையார் உடம்படாது சதங்கையணிந்து சிவந்து அழகிய சிறிய செல்வத்திருவடியை உதறிக்கொட்டி அழுதுகொண்டு தொடரவே; உனது செய்கை யிதுவாயிருந்தால் வாவென்றுசொல்லி, தம்மோடும் அழைத்துக் கொண்டு சென்றார். சென்றவர், எவ்வுலகிற்கும் அம்மையப்பராவார் வீற்றிருந்தருளும் தெய்வத்திருத்தோணி விமானத்திற்குக் கீழ்த்திசையிலுள்ள சைவதீர்த்தக்கரையை அடைந்து, அங்கு பிள்ளையாரை இருக்கச்செய்து, தனிவிட்டுப்போக அஞ்சி, திருத்தோணி எழுந்தருளியிருந்த பெருந்தகையாரையும் பெருந்தேவியாரையும் வணங்கி, உள்ளிறங்கி, சலத்துட் புகுந்து நீராடி, தருப்பணமுதலிய கருமங்களை முடித்து, பிள்ளையார் காணாதபடி அச் சலத்துள்ளே அகமருடண விதியால் ஸ்நாநம்செய்ய முழுகி யருளினார். அப்பொழுது, பிள்ளையார், பிதாவைக் காணாமல் அழுகின்றவரைப்போல, நம்பெருமான் திருவடித்தொண்டின் நிலைமையைப்பற்றி விடாத முன்னைய ஞாபகம உள்ளுறுத்த; அத்தடாகக் கரையினின்றபடியே, திருவிழி மலர்களில் இனியதேன் சொரிவதுபோலும் அன்பு நீர் ததும்ப, திருக்கைமலர்களாற் பிசைந்துகொண்டு, சிவந்த கனிவாயொத்த உதடு துடிக்க; அளவற்றவேதகோஷமலியவும், சமஸ்த ஆன்மாக்களும் பெருமகிழ்ச்சி அடையவும், பொருமிப்பொருமி, தமது பிள்ளைமை வெளிப்படுத்துவாராய், திசைமுற்றும் சுழன்று பார்த்து கண்ணீர் அற்புதத் திருமேனியை நனைக்கும்படி, ஆளுடையார் திருத்தோணித் தெய்வவிமான நோக்கி "அம்மேயப்பா!" என்று அழைத்து அழுதருளினார். அழுதருளவே, திருத்தோணி வீற்றிருந்தருளும் உடையவர், அப்பிள்ளையாரது முன்னைய திருத்தொண்டின் நிலைமையைத் திருவுளத்து அடைத்து அவர்க்கு அருள்செய்யும்படி ஆளுடையபிராட்டியாரோடும் தருமமூர்த்தியாகிய திருவிடைத்தேவர்மீது எழுந்தருளி, அப்புநித தீர்த்தக்கரைக்குச் சமீபித்து, சிவபாத விரதயரும் பகவதியாரும் பெற்ற வரப்பிரசாதம் முற்றுப்பெறத் தமது திருவடிஞானத்தைப் பிரசாதிக்கும்படித் தம்மைப் பிரியா திருக்கும், உலகை

யாளுடைய அம்மையை நோக்கி, அழுகின்ற பிள்ளையாரைக்கடைக்கணித்துக் குறிப்பித்தருளி, உமையே! உமது தெய்வத் திருமுலைப்பாலைச் சிவஞான அமுதததோடு பொன் வள்ளத்திற்கலந்து ஊட்டுக என்று அருளிச்செய்தார். அவ்வாறு பெருமானார் திருவாய்மலர்ந்தருளவே, வேதாகம உபநிடதங்களையும் எல்லாவுலங்களையும் பெற்று, அவற்றிற்கெல்லாம் நிமித்த உபாதான காரணமாய், ஆன்மாக்களை அநாதியிற்றானே பந்தித்து இருந்த சகசமலக்கட்டையறுத்து, அவ்வான்மாக்களுக்குத் திருவடி ஞானத்தைக்கொடுத்து, முத்தி சித்திவியத்திகளை அனுக்கிரகித்தருளும் தயவே திருமேனியாகவுடைய அம்மை, உடனே பிள்ளையார் அருகே அடைந்தருளி, பொற்கிண்ணத்திலே தமது தெய்வத் திருமுலைப்பாலைக்கறந்து, அதனோடு, எல்லைகடந்த சிவஞான அமுதத்தைக்கலந்து குழைத்தருளி, ஐயா! உண்ணுக என்று தமது அருமந்த திருவாய்மலர்ந்து, உபசரித்து ஊட்டியருளுகையில், எதிர் நோக்கிய எங்குருமணியின் திருவிழி நீரைத்தொடைத்து, அப்பொற்கிண்ணத்தை அவர் கரத்திற்கொடுத்து, அழுகையைத்தீர்த்து, பெருமான் திருவருட் பாங்காக்கியருளினார்.

இவ்வண்ணம், பெரியதேவர் முனிவர் முதலிய ஆன்மாக்கள் யாவர்க்கும் தாயாகிய பெருமாட்டி தெய்வத்திருமுலைப்பாலமுதம் கொடுத்தருளப் பெற்றமையால், அவர் "ஆளுடைய பிள்ளையார்" எனவும், எவ்வகைப் பெரியவர்க்கும் அறிதற்கரிய பொருளாகிய "சிவஞானசம்பந்தர்" எனவும் சான்றோர்கள் திருநாம மந்திரமாகக்கொண்டு துதிக்க நின்றார். அந்நிலையிற்றானே "சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம், பவமதனை யறமாற்றும் பாங்கினி லோங்கிய ஞானம், உவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானம், தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்." "எப்பொருளு மாக்குவா னீசனே யெனு முணர்வும், அப்பொருடா னுடையானா ரடியார்க ளெனுமறிவும், இப்படியா லிதுவன்றித் தம்மிசைவுகொண்டியலும், துப்புரவில்லார் துணிவு துகளாகச் சூழ்ந்தெழுந்தார்." எங்கள்தவத்து அரசாகிய சம்பந்தப்பிரான், யாவர்க்கும் சிவயோகச் செல்வத்தைக் குறைவறக்கொடுக்கும் சிவஞானத்திற்கு ஏதுவாகிய சமஸ்த கலாஞானமும், ஒழியாதபிறப்பை ஒழித்தற்குரிய சிவபோகத்தைக் கொடுக்கும் அநுபவ ஞானத்திற்கு ஏதுவாகிய சத்திய ஞானமும், ஓதுதல் சாதகஞ்செய்தலென்னும் முன்னிலை ஒன்றும் இல்லாமல் தாமே உணர்ந்தருளி, எல்லாப்பொருளையும் ஆக்கி ஆளுகின்ற "உடையான்" எமது சிவனே என்னும் தெளிவுணர்ச்சியும், அப்பொருளாகிய "உடைமை" அடியார்களே யென்னும் துணிபுணர்ச்சியும், இவ் "வுடை

யான் உடைமை" என்னும், முடிபு ஒன்றொழிய; அவ்வவரும் சிவஞபோதத்தால் "யுத்திவசநங்களை" வகுத்துக்கொண்டு கூறும் பொருண்முடிபெல்லாம், அநுத்தரத்தன: என்று அவ்வேதாகம உபநிடத முதலியவற்றின் துணிபுகளைநாடி, வாமபு செய்தருளி, எம்மை உய்விக்கக் கருணைவைத்து எழுந்தருளினார். அப்போது, சிவபாத விரதயரும், சலத்துள்ளே சிறிதுநேரம் முழுகியிருந்து தமது நியமக்கடன் முடித்துக்கரையேறி, சிவாநுபவச செல்வப் பிள்ளையாராய் எழுந்தருளியிருக்கும் எமது குருராயனை நோக்கி, ஐயா! யார்கொடுத்த பாலமுது உண்டது.? இவ்வண்ணம் எச்சில் மயங்கக்கொடுத்தவர் யார்? காட்டுக: என்று வெகுண்டாராகக் கையில் ஒருசிறியவளார்கொண்டோச்ச; அச்சிறு பெருந்தகையார், தெய்வத்தாமரை மலர்போலும் அருமைக்குழந்தைத் திருவடியை தூக்கிக்கொண்டு, கண்களில் ஆநந்தநீர் முத்தினை உதிர்ப்பதுபோல்துளிக்கும்படிஉச்சிமேலெற எடுத்த திருக்கரத்து ஒரு திருவிரற்சுட்டி, அருட்பெருஞ்சோதிவீச, அறக்கடவுளாகியவிடைத்தேவர்மேல் பெரியபிராட்டியாரோடும் கருணைசெய்து நின்ற தேவர் பெருமானைக் காட்டி, கரணங்களை அகம்புறங்காட்டாது அடங்கவிழுங்கி எழுந்த சுத்த ஆநந்த அநுபவமெய்ஞ்ஞானத் திருமொழியாலே, ஆன்மாக்கள் எல்லாம், அளவற்ற வேதமுடிபுகளை இனிய தமிழினால் எழுதுமறைப்பிரமாணமாய் எளிது பெறும்படி, அவ்வேதமுதலாகிய இருவகைக காயததிரியின் முதலெழுததுககளால; தமது திருப்பாடல் என்றும ஏற்றருளும் பிரமாணமாதற்குப் பெருமானார் திருச்செவியை முன்னர் சிறப்பித்து, இருவினையொப்பு மலபரிபாகச்சத்திநிபாதங்களை இனிது உணர்த்தப் பிறஅடையாளமாகிய "விடை," "மதி" "பொடி" முதலியவற்றையும் குறிபபிததருளி, திருச்சிற்றம்பலம், "தோடுடையசெவியன்விடையேறியோர் தூவெண் மதி சூடிக், காடுடையசுடலைப்பொடிபூசி யெனதுள்ளங்கவர்கள்வன், ஏடுடையமலரான் முனைநாள்பணிந்தேத்த வருள்செய்த, பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே." திருச்சிற்றம்பலம். என்ற திருப்பதிகம்பாடி, திருத்தந்தையாராகும் தவமுடையார்க்கு "எம்மை இதுசெய்த பிரான் இவன்" என்று அநுக்கிரகித்தருளினார்.

இது, தாதையார் முன்னிலையாகப் பிரளயாகலர் முதலியோர்க்கு அநுக்கிரகிக்கும் "உபதேசமந்திரமொழி" ஆதலால், பெருமான் அடையாளங்களைப் பலமுகத்தாலும் ஏழுதிருப்பாட்டளவும் சுட்டியருளிய ஐயர், அதற்குமேல், அருளப்பாட்டையும், அத்திருவருளைப்பெறும் உபாயத்தையும் கட்டளையிட்டருளவேண்டி, இம்மண்ணுலகச் சிற்றுயிர்கள் பிழைசெய்தாலும் தம்மை

அடைக்கலமாகப் பின்வந்து அடைந்தால், கைவிடாது காத்தருளுங்கருணையையும், அவ்வடைக்கலம் புகும் மார்க்கத்துள் சிறந்தது, பெருமான புகழைத்துதித்தல் ஒன்றே என்பதையும் எட்டாந் திருப்பாட்டிற் சரித்திர பூர்வமாயும், சீவபோதமுயற்சியால், எத்துணைப் பெரியவர்க்காயினும் தருக்கவாதத்தாலும், எவ்வகை நூலாராய்ச்சியாலும், எவ்வளவு அரியயோக சமாதிமுயற்சியாலும், தம்முள்ளே தோன்றாத்துணையா யிருக்கும், பெரும்பொருளாகிய தலைவனை ஒருசிறிதும் காணமுடியாது என்பதையும்; அத்தலைவனைக் காணும்சிறந்த உபாயமாவது, யான் எனது என்று எழும் சீவபோதம் முழுவதும் ஒழிந்து, தருக்கவாதங்களை வீண் காலப்போக்கு என்று கழித்து, மற்றைய முயற்சிகளை அபலம் என்று இழித்து, அன்பினால் உள்ளுருகிச்செய்யும் தோத்திர தியானத்தினாலே, திருவருள் துணைநின்று காட்ட; அத்திருவருளே கண்ணாகக் காண்பதே துணிவு என்பதையும் ஒன்பதாவது திருப்பாட்டில் அதற்குரிய சரிதமுகமாயும், பத்தாந் திருப்பாட்டில், சிவபோதத்து விளையும் "யுத்திவசனத்தால்" பக்குவிகளுக்கும் சந்தேக விபரீத வுணர்ச்சி யுண்டாம்; ஆதலால், அதனை ஒழித்து முடிந்த முடிபு இதுவென்று உணர்த்த வேதமார்க்கத்தினை எடுத்துக்காட்டி மற்றையமார்க்கங்கள் எல்லாம், அநாதிமலக்கட்டுடைய ஆன்மாக்கள்வினைக்கீடான அறிவினர் ஆதலால், அவர் அறிவுக்கும் பருவத்திற்கும் தக்கபடி, சிவப்பிரேரணையால், ஒவ்வொருஆசிரியர்கள் வெளிப்படுத்திய சிறு மார்க்கங்களெனக் குறிப்பித்து, அவ்வதிகாரிகள் அச்சிறுமார்க்கத்தில்செல்லாதவகை மறுத்தும், அருளினார். பதினோராந் திருப்பாட்டில், அவ்வையம் திரிபு அறியாமை என்னும் முக்குற்றமும் ஒழித்து வழிபடுகின்ற பக்குவர்க்கு அதனால் உண்டாம்பயன் இது என்று "பலசுருதியும்" கூறி, அக்கூற்றில், அவர்க்குச் சத்தியபத்தி சிரத்தை நம்பிக்கை மேன்மேல் வளர வேண்டி "ஞானசம்பந்தனுரைசெய்த, திருநெறிய தமிழ்வல்லவர் தொல்வினை தீர்தலெளிதாமே." என்று, திருநாம ஒப்பத்தோடு திருவாணையும் பிரசாதித்து, திருக்கடைக்காப்புச் சாத்தி, அஞ்சலிசெய்து நின்றருளினார். தேவர்கள் பூமழைபொழிந்தார்கள். தேவதுந்துமி முழங்கின. கந்தருவர் முதலிய தேவகணங்கள் கானம் பாடினர். இந்திராதி பெரியதேவர்கள் துதித்தார்கள், சிவகணாதிபர் "ஹரஹர" என்று முழக்கஞ்செய்தார். வேதகோஷத்தோடு தமது முடிகள் நெருங்கும்படித்தேவரும் முனிவருங்கடல்பெருகியதுபோலத்திரண்டுவந்துநிரம்பினர். இவ்வாறு, ஆன்மாக்கள், கரையில்லாத பிறவிக்கடலைத்தாண்டுவதற்கு ஒப்பற்ற தமது திருவடியாகியதெப்பத்தைப்பெற; ஆளுடையபிள்ளைப்பெருமானுக்குத் திருக்

காட்சி கொடுத்தருளி, தாம் பெருந்தேவியாரோடு ஊழியில் மிதக்கும் வேதத்திருத்தோணி விமானத்திற்கு எழுந்தருளினார். எழுந்தருளவே, சம்பந்தப்பெருமானும் அன்பின் மிகுதியாற் பிரிவாற்றாமல், தமது திருக்கண்ணும், கருத்தும் விடாது அவர்பின்செல்லவிடுத்துத் தாமும் செல்வக்கோயிலுள் பிரவேசித்தருளினார்.

அப்பொழுது, ஒருவராலும்செய்தற்கு அருமையான தவஞ்செய்து, பிள்ளையார்க்குத்தாதை என்று சான்றோர் துதிக்கும் பேறுபெற்ற சிவபாதவிரதயர், ஒச்சஎடுத்தவளாரை யெறிந்துவிட்டு, அஞ்சலிசெய்து, பெருமகிழ்ச்சியோடு கூத்தாடி, தமமை அறியாது எழுந்தஅச்சமும், ஆச்சரியமும், ஆசையும் குதிகொள்ள; எம்மையுடையவர்அருளிச்செய்த அத்தெய்வத் தமிழினபொருளைச்சிந்தித்து, தாம் கண்ணாரத்தேவர்பெருமானைத் தரிசியாவிடினும், அங்கேநடந்த மற்றையவிபவங்களைத்தரிசித்து, இது திருத்தோணியப்பர் திருவருட்பாங்கு என்று அறிந்து அன்புபெருகிய திருவுளத்தோடும் முன்னே நடந்தருளுகின்ற பிள்ளைப்பெருமாள் பின்னே தாமும் தொடர்ந்தருளினார். இச்சுபசரித்திரத்தைக் கண்டவரும் கேட்டவரும் வேதபண்டிதராகிய அந்தணர் முதலிய பெரியோர் யாவரும, இவ்வறபுதம யாரேனும் கண்டதா? கேட்டதா? எங்கேயுள்ளது? என்று திருக்கோயிற்றிருவாயில் திருமுற்றத்தை வந்து சூழ்ந்தார்கள். பின்பு, பிள்ளையார், என்னையுடையபெருமான், என்னமமையோடும் இதோ! இருந்தருளுகின்றான் என்று திருவாய் மலர்ந்து, பரமனையேபாடும பழம்பணிபெற்ற சம்பந்தத்தோடு கோயிலினின்றும் புறப்பட்டருளினார். அங்கு, வேதியர் அடியர்முதலிய அசசீகாழிப் பதியாரனைவரும், பாலறாவாயனைத் தரிசித்து, காழியர் தவமே! கௌணியர்கள்செல்வமே! கலைஞானக்கடலே! அக்கடலிடத்து அமுதமே! கருதுவார் வாழ்வே! வேதசாம்பிராச்சியமே! வைதிகத்தின் இருப்பே! பேரினபமேகமே! அடைக்கலத்தானமே! காவிரித்துறைமுத்தே! சுருதிப்பிரகாசமே! புண்ணியத்தின் முளையே! அஞ்ஞானவிருட்குச் சூரியனே! சிவபோகாமிர்தசந்திரனே! பரமகதியே! பெரியபெருந்தகை அருள்செய்யப்பெற்றபிள்ளைப்பெருந்தகையே! என்று துதித்து, பலமுறை அட்டாங்கபஞ்சாங்கமாகவணங்கிச், சூழ்ந்தார்கள். இதனால், பிளளையார், பிறவிக்கேதுவாகிய வினைக்கட்டினையுடையசீவருள் ஒருவர் அல்லர் என்பது, பெறப்பட்டது.

அதன்மேற் சிவபாதவிரதயர், பிள்ளையாரைச்சென்று எடுத்து பெற்றபயன் பெற்றாராய்த் தமது திருத்தோளின்மீது, எழுந்தருளப்பண்ணிக்கொண்டு நடந்தருளினார். சிவனடியாரும் வேதியரும்

திரண்டு திருவெண்ணீற்றின் ஒளி தழையச் சிவானந்தவெள்ளம் பெருகுவதுபோற் புறப்பட்டார்கள். கற்புடையமாதரும் அறுகு அக்ஷதை, மலர், பொரி, பொற்சுண்ணப்பொடி, கலவை, பனிநீர், தூவி மங்கலம் பாடினார், விளக்கு, முளைப்பாலிகை, கண்ணாடி, பூரணகும்பம், இணைக்கயல், கவரி, குடை, ஆலத்தி முதலிய அட்டமங்கலங்களை யேந்தினர். விருத்தவேதியர் மந்திர நீர் தூவிப் பல்லாண்டு கூறினர். மங்கலவாத்தியம் முழங்கின. யாவரும் ஆடை வீசிப் பெருமகிழ்ச்சியால் ஆடல் பாடல் செய்தனர். இவ்வளவு சம்பிரமத்தோடு திருநகர் வலமாகவந்து, நந்தேசிகராயர் திருமாளிகைக்கு எழுந்தருளினார். அங்கே, அன்று இரவுமுழுதும் திருவருள் நாட்டத்தோடுந் தங்கி, சூரியோதயமானவுடன், திருத்தோணிக் கோயிலுக்குச் சென்று, தமது தாதையாராகிய மஹா தேவரையும் புண்ணியத் தாயாராகிய மஹா தேவியாரையும் வணங்கி அருள்விடை பெற்று, திருக்கோலக்கா என்னும் திருப்பதிக்கு எழுந்தருளிக் கோயில் வலம்வந்து, பெருமான் சந்நிதியில்நின்று, திருக்கரத்தால் ஒத்தறுத்து, "மடையில்வாளை பாயமாதரார், குடையும் பொய்கைக் கோலக்காவுளான், சடையும் பிறையும் சாம்பற் பூச்சுங், கீளுடையுங்கொண்ட வுருவமென்கொலோ." என்னும் திருப்பதிகம் பாடியருள, பிள்ளையார் அருமைக்குழந்தைத் திருக்கரம் சிவக்கவே; சிவபெருமான், கருணையாலே ஸ்ரீபஞ்சாக்ஷரம் எழுதிய பொற்றாளத்தை அத்திருக்கரத்தில் வந்திருக்கும்படி அருள்செய்தார். அதுகண்டு பிள்ளையாரும் பெருங்களிப்போடு அப்பிரசாதத்தைத் திருமுடிமேற்கொண்டு வாழ்த்தி, முற்கூறிய முறைப்படி, திருப்பதிகத்தை முடித்துத் திருத்தாளக்காப்புச் சாத்தியருளினார், அப்போது தரிசித்த தும்புருநாரதர் முதலிய காந்தருவ வேதபாரகர் அனைவரும் துதித்துப் பூமழை பொழிந்தனர். பிள்ளையார் அருள்விடை பெற்று, சீகாழிக்கேகி நடந்தருளினார். அதுகண்டு, தவஞ்செய்து பெற்ற சிவபாதவிருதயர் பிள்ளையார் நடப்பதற்கு இசையாமல் தமது திருத்தோளின் மீது தரித்துக்கொள்ளப் பிள்ளையாரும் சென்று, சீகாழியை அடைந்து திருக்கோயிலை வலம்வந்து, "திருத்தாளச்சதி" முதலிய திருப்பதிகங்களைப்பாடி, வணங்கி, விடைபெற்று, திருமடத்தில் அச்சீகாழியி லுள்ளவர்களும் அடுத்தவர்களும் பிழைக்கும்படி, தமது தெய்வ இளந்திருக் கோலக்காட்சி கொடுத்து வீற்றிருந்தருளினார். அவ்வா றிருக்கையில், பிள்ளையாரைத் தவஞ்செய்து பெற்ற தாயாராகிய பகவதியார், திருவவதாரம் செய்யத் தவஞ்செய்த திருநனிபள்ளி வேதியர் அனைவரும் இவ்வர்த்தமானத்தைக் கேள்வியுற்று, பெரியகளிப்பை யடைந்து மங்கலவாத்தியம் முழங்க, வேதபாராயணத்தோடு சீகா

ழிக்கு வந்து, கௌணியர்குலப் பெருமான் திருவடிக்கமலங்களில் முறைப்படி நமஸ்காரம்செய்து, கருணைபெற்று இருந்தார்கள். இங்ஙனம், சிவஞான சாம்பிராச்சியம் வெளிப்பட்ட சுபவார்த்தை எங்கும் பரவவே, அடுத்த திருப்பதிகளிலும் பிறவிடங்களிலும் உள்ள பிராமணகுலோத்தமரும், மற்றையவருமாகிய அடியார் அனைவரும், அற்புதம் அடைந்து கூட்டங் கூட்டமாய்த் திரண்டு வந்து சீகாழியைச்சேர்ந்து எமது குருசிகாமணியை வணங்கும் பேறுபெற்று வாழ்ந்தார்கள். இங்ஙனம், வந்த அனைவர்க்கும் அத்திருப்பதியிலுள்ளார் பெருமகிழ்ச்சியோடு தங்கள் தங்கள் வீடுகளில் விருந்துபசரித்தல் முதலியனசெய்து பேரின்பம் பெற்றிருந்தார்கள். சீகாழியோ? சிவலோகமாயிருந்தது.

அப்போது, ஒருநாள், திருநனிபள்ளி வேதியர் பிள்ளையாரை வணங்கி தங்கள் திருப்பதியில் ஆளுடையாரைத் தரிசிக்கவேண்டும் என்று விண்ணப்பஞ்செய்தனர் அதற்குப் பிள்ளையார் திருவுள்ளமாய்த் திருத்தோணி யப்பரையடைந்து தொழுது, அருள்விடைபெற்று மற்றைய திருப்பதிகளையும் தரிசிக்க எழுந்தருளினார். எழுந்தருளுகையில், பிள்ளைப் பெருமானரது குழந்தைத் திருவடி தரைமேல் மண்ணுறுத்த நடப்பதற்கும், பிறரொருவர் தாங்கிச் செல்வதற்கும் இசையாத தவத்தந்தையார் வந்தெடுத்து, தமது திருத்தோண்மேல் எழுந்தருளப் பண்ணிக்கொள்ள, எம்பெருமானும் தமபெருமான் திருவடியைத் திருமுடிமேற் சூடிய சிந்தத்தோடு திருநனி பள்ளிக்குச் சமீபித்தபோது, எதிரே தோற்றும் சோலைகளையுடைய திருப்பதியாது? என்று வினவச் சிவபாதவிருதயரும், இதுவே திருநனி பள்ளியென்றார். அது கேட்டவுடனே பிள்ளையார் "காரைகள் கூகை முல்லை" என்ற திருப்பதிகம் பாடி உடையவர் திவ்வியாலயத்தை அடைந்து பணிந்து அத்திருப்பதியிலிருந்து புறப்பட்டு, திருத்தலைச்சங்காடு, திருவலம்புரம், திருப்பல்லவனீச்சரம், திருச்சாய்க்காடு, திருவெண்காடு, திருமுல்லைவாயில், என்னும் திருப்பதிகளுக்கு, அடியார்கள் எதிர்கொள்ளச்சென்று ஆளுடையாரை வணங்கித் திருப்பதிகம் பாடி மற்றைத் திருப்பதிகளையும் தரிசித்து வந்து சீகாழியில் எழுந்தருளினார். இத்திருப்பதிதான் முன்னம் பாலைநிலமாகவிருந்து, தேசிகப்பிரான், "காரைகள் கூகை முல்லைகள் வாகைபீகை படர்தொடரி கள்ளிகவினிச், சூரைகள் பம்பிவிம்மு சுடுகாடமர்ந்த சிவன்மேய சோலை நகர்தான், தேரைகள் சாரை சாயமிதிகொள்ள வாளைகுதிகொள்ள வள்ளைதுவள, நாரைகளாரல்வார வயன் மேதிவைகு நனிபள்ளிபோலு நமர்காள்." என்றருளிச்செய்த அத்திருப்பதிகத்தால், நெய்தல் நிலமாகத் திரிந்தது.

பின்பு, சிவபெருமானைத் தரிசனஞ் செய்திருந்து, அடுத்த திருமயேந்திரப்பள்ளி, திருக்குருகாவூர் முதலிய பல திருப்பதிகளுக்குஞ் சென்று பெருமானைத்தரிசித்து, பதிகமோதி யருளி மீட்டும் சீகாழியில் வந்து எழுந்தருளி யிருக்குநாளில்; திருநீலகண்ட யாழ்ப்பாணர் தமது கற்புடைய மனைவியாராகிய, பாடினியாரோடு புறப்பட்டு, சம்பந்தப்பிரான் திருவடிச் சந்நிதியை வணங்கச் சீகாழிக்கு வந்தருளினார். அதனை அறிந்து பிள்ளையார் எதிர் எழுந்தருளக்கண்ட நமது பாணத்திருவடிகள் பிள்ளைப் பெருமான் தெய்வச்சீர்பாத மலர்களை வணங்கிச் சத்திய அன்பின் மொழிகளாற் றுதித்துப் பெறுதவாழ்வு பெற்றவராய்க் களிப்படைந்தார். பிள்ளையாரும் அவரை நோக்கி ஐயரே! உமது வரவு நல்வரவாகப் பெற்றேம் என்று உபசரித்து, திருத்தோணியுடையார் கோயிற்கு அவரை யழைத்துச்சென்று, உங்கள் நாயகரை யாழிசைபாடிக் கேட்பித்தருளும் என்று திருவுளம்பற்றினார். பாணத் திருவடிகளும், பிள்ளையார் அருளிச்செய்யப் பெற்றதற்கு மகிழ்ந்து நமஸ்காரம், செய்து, தமது யாழைமாடகம்முறுக்கி அமைத்து, ஆளுடையார் மெய்ப்புகழ்ப்பாணியை விதிப்படி, பாடினியாரோடும் பாடியருளினார். அதுகேட்டுப் பிள்ளையாரும் பிறரும் ஆநந்தமடைந்தவர்களாய், அவரை அழைத்துவந்து, உறைவிடமும் விருந்தும் சமைத்து, உபசரித்தனர். இவ்வாறு, பிள்ளையார் திருவருளுக்கு ஆளுக்காய பாணத்திருவடிகளும், தேசிகமாமணி அருளிச்செய்த திருப்பதிகங்களைக் கேட்டுத்தொழுது அத்திருவிராகங்களைத் தமது யாழிலே அமைத்துப்பாடி, சமஸ்த சீவராசிகளும் களிக்கும்படி செய்து, பின் பிள்ளையாரை வணங்கி, தேவரீர் திருவாய்மலர்ந்த தமிழ்ச்சுருதியை அடியேன் எப்பொழுதும் யாழில் அமைத்துச்சேவிக்கவேண்டும் என்று விண்ணப்பித்தருளினார். அதற்குப்பிள்ளையார் திருவுளமாக அப்பாணர் பெருமான், இது எனையும் ஒருபொருளாக எம்பெருமானருளிய பெருங்கருணையென்று, ஆராமையோடு அங்கிருந்து, அத்தமிழ்மறையையாழிற்பாடும் திருப்பணி செய்து வந்தருளினார்.

அங்கு ஒருநாள், விராட்புருடனுக்கு, இதயபுண்டரிகம் என்று பெரியோர்கள் துதிக்கும் ஸ்ரீ சிதம்பரத்தில், எல்லாமுடையார் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம், என்னும் பஞ்சகிருத்தியமும் நடக்கும்படி, சிற்சபைகண்ணே செய்தருளுகின்ற ஆநந்தத்திருநடனத்தைத் தரிசிக்க அடங்காத ஆசைவெள்ளம் பெருக, அதனைப்பிள்ளையார், சிவபாதவிருதயருக்குக் குறிப்பித்தருளினார். அதுகேட்டு அவர் தாமும் உடன்வரச் சம்மதிக்க, அவரோடும் பாணத் திருவடிகளாரோடும், ஏனைய

ரோடும் புறப்பட்டு, திருத்தோணியாண்டாரைத் தரிசித்து, சீகா
ழியைக்கடந்து, போகையில், வழியில் பல தலங்களையும் தொ
ழுது, கொள்ளிடக்கரையைத்தாண்டி, தேவர் முதலியார்க்கும் இச்
சித்தன தருகின்ற ஸ்ரீ சிதம்பரத்தின் திருவெல்லையை அடைந்து
முறைப்படி நமஸ்கரித்து, அஞ்சலியத்தராய்எழுந்தருளும்போது,
எதிரே தாமரைத்தடாகம் சந்தோஷமுகத்தைக்காட்டி அழைப்
பதுபோலவும், வண்டு குயில் கிளி முதலிய பறவைகள் கூவுவது
இன்சொல்கூறி இனிய கீதம்பாடி வரவு ஏற்பதுபோலவும், பூங்
கொடிகளும் பூங்கொம்புகளும் அசைவது பரதநாட்டியஞ் செய்
வது போலவும, பூக்களதேன் துளிப்பது அன்புநீர் துளிப்பது
போலவும், வயலில் நெற்கதிர் சாய்ந்திருப்பது நமஸ்கரிப்பதுபோ
லவும், வாழை, கமுகு, தெங்கு முதலிய விருக்ஷசாலைகளும, வெள்
விப்புகையும் பரவியிருப்பது நடைககாவணம் அமைத்ததுபோல
வும் இருந்தன. பிள்ளையார் இவ்வளங்கண்டு சிவார்ச்சனைக்குப
பல புஷ்பங்களைக்கொடுக்கும் புண்ணிய சொரூபமுடைய திரு
நந்தவனங்களை நமஸ்கரித்துப்போய்த் திருமதில் வாயிலையடைய;
தில்லைவாழந்தணர் திருமடமுதலிகள் முதலிய சான்றோர் உலக
முய்ய ஞானபோனகம பெற்றருளிய சம்பந்தநாயகர் எழுந்தரு
ளிய சோபனவார்த்தையைக்கேட்டு, பெருமகிழ்ச்சியோடு அத்திரு
நகரத்தை அலங்கரித்து, மங்கலவாத்தியம முழங்கவும் வேதகோ
ஷம் நிரம்பவும் அஷ்டமங்கலம தாங்கி எதிர்கொண்டுவந்து,
ஒருவர்க்கொருவர் நமஸ்காரஞ்செய்து, அளவளாவிப் பிள்ளை
யாரை அழைத்துக்கொண்டு, தென்றிசைவாயில வழியாக நக
ரப் பிரவேசம் செய்தார்கள். பிள்ளையார், திருவீதிகளை வணங்கிச்
சென்று அழகிய திருச்சிற்றம்பலமுடையார எழுநிலைத் திருக்கோ
புரவாயிலை அட்டாங்கபஞ்சாங்க முறைப்படி வணங்கி, திருநந்தி
தேவர் முதலிய சிவகணநாதர்கள் திருக்கூட்டம் நின்று சேவிக்
கும் "திருவணுக்கன்திருவாயில்" அடைந்து பணிந்து, கைகள்
அஞ்சலியாய் உச்சிமேலேறக் கண்களில் அன்புநீர்பெருக உருகிய
உள்ளத்தோடும் உள்ளே எழுந்தருளினார். அவ்விடத்து, பெரு
மான் தமக்கு முன்பிரசாதித்த மெய்ஞ்ஞான சொரூபமாகியதிருச்
சிற்றம்பலத்தையும், அபபூரணஞான அநுபவப்பேரின்பத் திரு
நடனத்தையும் தரிசித்து நமஸ்காரஞ்செய்து, பெரியகளிப்போடும்,
சத்திகாரிய தத்துவங்கள் முப்பத்தாறினையும் கடந்து இயற்கைச்
சுத்தராகிய நடேசப்பிரபு செய்தருளுகின்ற அற்புதத் தெய்வ
நாடகத்தைத் துதிக்கத்தொடங்கி, அவரது திருவடி யணுக்கத்
திருத்தொண்டுசெய்யும் சிறப்பினை எம்மை ஒத்த ஏழையர்க்குத்
தெரிவித்தருளவேண்டி, அத்திருத்தொண்டினைச் செய்யும் சைவ

முனிவர்களாகிய தில்லைவாழந்தணரை முன்வைத்து, ஆன்மஇயற்கை அறிவால் எதிரிட்டு அறிதற்கு அரிய "சிவபோகத்தை" சத்திகாரிய தத்துவக் கூட்டத்தாலாகிய இவ்வுருவத்திலே அமைந்த ஐம்பொறிகளும் எளிதிலே உணர்ந்துகொள்ளும்படி, அருள்செய்த பெருங்கருணைத் திறம் அமைய "கற்றாங்கெரியோம்பிக் கலியை வாராமே, செற்றார்வாழ்தில்லைச் சிற்றம்பலமேய, முற்றாவெண்டிங்கள் முதல்வனபாதமே, பற்றாநின்றாரைப் பற்றாபாவமே." என்ற திருப்பதிகமோதி அன்பினாலாடிப்பாடி, திருக்கண்களில் ஆநந்தநீர்பெருக அழகரது திருக்கூத்தின் மயமாய நின்றுதெளிந்து, திருமாளிகையைப் பலமுறை வலம் வந்து பணிந்து வெளிப்பட்டு, முற்றம் வணங்கித் திருக்கோபுரவாயிலை நமஸ்கரித்து, திருமடவளாகத் திருவீதியைத்தொழுது, தாம் சுத்த திருமேனியராயும், அத்திருப்பதியில் தங்கினால் பழுதுசெய்ய நேருமென்பது எமக்குணர்த்த அங்கு தங்குதற்கஞ்சி, அடுத்த திருவேட்களம் அடைந்து தங்கியிருந்து, காலங்கள்தோறும் அழகிய திருச்சிற்றம்பலம் உடையாரைவந்து தரிசித்து எழுந்தருளுவார். அந்நாளில், அத்திருவேட்களம், திருக்கழிப்பாலை முதலிய திருப்பதிகளில் தமபெருமானை வழிபட்டுப் பதிகம் பாடியருளினார். அத்தமிழ்வேதத்தைப் பாணத் திருவடிகளும் யாழிலமைத்துகானஞ்செய்தருளினார். இங்ஙனம் நிகழுநாளில் ஒருநாள், பிள்ளையார், திருவம்பலவாணர் திருவடித் திருப்பணிக்குத் தில்லைவாழந்தணர்கள் அணுக்கராகப் பெற்றபேறு நினைத்துத் தமது திருவுளம்வியந்து அவர்கள் ஒழுக்கமிகுதியை எண்ணியெண்ணி வளர்ந்தெழுந்த ஆசையாலே அவர்களைத் தரிசிக்கவேண்டி அப்பெரும்பற்றப் புலியூர்க்கு எழுந்தருளும்போது, எம்பெருமான் திருவருளால், அத்தில்லைவாழந்தணர் மூவாயிரவர்களும் சிவகணாதீசர்களாய்த் தோற்றத் தரிசித்து, அவ்வருமைப் பாட்டைத் திருநீலகண்ட யாழ்ப்பாணத் திருவடிகளுக்கும் காட்டித் தரிசிப்பித் தருளினார். பின்பு, அத்தில்லை மூவாயிரவர்கள், பிள்ளையார் திருவெழுச்சி அறிந்து எதிர்வந்து பிள்ளைப்பெருமானாம் குழந்தைத் திருவடிகளில் வணங்க; அதற்கு முன்னரே எம்பெருமானும் வணங்க; ஒருவரையொருவர் அளவளாவி, திருவீதி ஓலக்கம் எழுந்தருளி எங்கள் சம்பந்தநாதனார், திருமுடிமேற் குவித்த அஞ்சலியத்தத்தோடு திருவாயில் கடந்து, உள்ளமுருக, மேருவாக நிற்கும்பேரம்பலத்தைத் தரிசித்து மாணிக்ககூத்தர் பொன்னம்பலத்தை யடைந்து திருக்களிற்றுத் திருப்படிக் கீழ்நின்று நமஸ்கார முதலியனசெய்து "ஆடினாய் நறுநெய்யொடு." என்ற திருப்பதிகம் பாடி அதில், தாம் தில்லைவாழந்தணரைச் சிவகணாதீசர்களாகக் கண்டுதரிசித்த அருமைப்பாட்

டை "நீலத்தார் கரியமிடற்றார் நல்லநெற்றிமே லுறைகண்ணினார்
பற்று, சூலத்தார் சுடலைப்பொடி நீறணிவார் சடையார்" என்று
சிறப்பித்துத் திருக்கடைக்காப்புச் சாத்தி, தொழுது பிரியாவிடை
பெற்று வலம்வந்து பணிந்து, திருமுற்றம் வணங்கித் திருவாயி
லைக் கும்பிட்டு, பிறதிருப்பதிகளைத் தரிசிக்க எழுந்தருளினார். எழு
ந்தருளவே, யாழ்ப்பாணர் குலப்பெருமாள், பிள்ளையார் திருவடிக
ளில் வணங்கி, எம்பெருமானே! அடியேன் பிறந்த திருவெருக்க
த்தம்பூலியூர் முதலாகிய நிவாநதிக்கரைத் திருப்பதிகளையுந் தரிசித்
தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தார். பிள்ளையாரும், அ
தற்குத் திருவுள்ளம் இசைந்து தவத்தந்தையாரும் பரிசனங்களும்
பெரியோர்களும் புடைசூழ எழுந்தருளினார். திருநீலகண்ட யாழ்
ப்பாண முநிவரும் தமது திருமனைவியார் மதங்க சூளாமணியா
ரோடும் உடன் எழுந்தருளினார்.

இவ்வண்ணமாகச் சென்று திருவெருக்கத் தம்புலியூரை யடு
த்தபோது, யாழ்ப்பாண முநிகள் பிள்ளையாரை வணங்கி, இதுதா
ன் அடியேன் அவதரித்த திருப்பதி என்று விண்ணப்பிக்க, ஐய
ரே! நீர் திருவவதாரம் செய்யும்படி இத்திருப்பதி என்னதவஞ்
செய்ததோ? என்று உபசரித்தருளி, பெருமான் திருக்கோயிலை
டைந்து வலம்வந்து பணிந்து பதிகம்பாடி, அங்கிருந்து புறப்ப
ட்டு இடையில் அகப்பட்ட பலதிருப்பதிகளையும் தரிசித்துக்கொ
ண்டுபோய், திருமுதுகுன்றத்தைத் தூரத்தேகண்டு, அதன் தெய்
வத்தன்மை வெளிப்பட "மத்தாவரைநிறுவி" "முதுகுன்றடை
வோமே" என்று பதிகம் பாடிச்சென்று, கோயில் வலம்வந்து
முதுகுன்றவாணர் சந்நிதியில் பலபதிகங்களைப்பாடி, அருளநுப
வம்செய்து, அங்கு சிலநாள் வீற்றிருந்தருளினார். பின்பு, அங்கு
நின்றும் திருப்பெண்ணாகடத்திற்குச் சென்று திருத்தூங்கானைமா
டக்கோயிலினுள் அமர்ந்தருளிய பரஞ்சோதியைத் தரிசித்து, "ஒ
டுங்கும் பிணிபிறவிக்கேடு" என்று உறுதித் திருப்பதிகம் திருவாய்
மலர்ந்தருளினார். அப்பால், திருவரத்துறைக்குப் போகவேண்டும்
என்று தவத்தந்தையாருக்குத் தெரிவித்து எழுந்தருளுகையில்,
அதற்குமுன் அவரது திருத்தோண்மேல், ஒரோ ஒருகால் எழுந்
தருளுவதுபோல் எழுந்தருளாது, அவர் பின்வரத் தாம்முன்னே
நடந்தருளினார். இவ்வாறு பிள்ளையார், குழந்தைத் திருவடி வரு
ந்த சிவத்தியானத்தோடு மெல்லமெல்லநடந்து, மாறன்பாடியை
அடைந்தபோது, வழிநடந்த இளைப்பினால் வருந்தி யாவரும் சோ
ர்வை யடையப் பிள்ளையார் கருணையோடு ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைக்
கூறித்தங்கியருளினார். சூரியனும் மேற்றிசை யடைந்தான். அன்
றிரவில், பிள்ளையார் அங்கே ஒரு திருமடஞ்செய்து திருக்கூட்டத்

தோடும் எழுந்தருளி யிருந்தார். இவ்வாறிருக்க, பிள்ளையார் வழி நடந்த வருத்தத்தை, அரத்துறை நாயகர் திருவுளம் செய்தருளி, எங்கள் ஆசிரியமணி யேறியருளுவதற்கு முத்துச்சிவிகையும், நிழல்செய்ய முத்துக்குடையும், புகழ்குறித்தற்கு முத்துச்சின்னமும், பிரசாதித் தருளவேண்டி, அத்திருநெல்வாயிலில் வசிக்கும் அந்தணர் கனவின்கண் அருளிச்சை மேனிகொண்டெழுந்தருளி, சம்பந்தப் பிள்ளையார் நம்மிடத்திற்கு வருகின்றார்; ஆதலால், நம்மிடத்திலுள்ள முத்துச்சிவிகை முத்துக்குடை முத்துச்சின்னமும் கொண்டுபோய், கொடுத்து, அழைத்து வருவீர்களாக என்று தனித்தனி கட்டளையிட் டருளினார். அப்போது அவர்கள் அனைவரும் உணர்ந்தெழுந்து வந்து கூடி, தம்முள் கனவு ஒத்தமைகண்டு களிப்பும் அற்புதமும் அடைந்து, உடனே திருவரத்துறைக்கோயிலைச் சேர்ந்தார்கள். அங்கேயும் அவ்வாறே அடியவர்களுக்கும் மற்றைய அகம்படித் தொண்டர் புறம்படித்)தொண்டர்களாகிய கோயிற் றுறையார்க்கும் கட்டளையா யிருக்கக்கண்டு, இது என்ன அதிசயமென்று கூறித் தம்முள் வியந்து, காலம்பார்த் திருக்கையில், திருப்பள்ளி யெழுச்சிக காலம்நேர்ந்தது, அப்போது, திருவடியருச்சிக்கும் அகம்படியார்களாகிய ஆதிசைவ முநிவர்கள் திருவாயில் திருக்காப்பு நீக்கினார்கள். அவ்விடத்தில், பூரணசந்திரோதயம்போல, முத்துச்சிவிகையும் முத்துக்குடையும் முத்துச்சின்னமும் பெருமான் திருவருளால் இருக்கக்கண்டு, அற்புதத்தோடு ஆனந்தக் கூத்தாடித் துதித்து, பூசித்து, சகலமங்கல வாத்தியங்களும் முழங்க அமமூன்றினையும் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு, பிள்ளையார்கரு எதிராகச் சென்றார்கள்.

இங்கே இவ்வாறாக, அங்கே மாறன்பாடியில், அருள் வள்ளலார், பிள்ளையார் முன் எழுந்தருளி, ஐயா! நாமவரவிடுக்கும் முத்துச்சிவிகை குடை சின்னங்களைப் பெற்றுக்கொள்க: என்று திருவாய் மலர்ந்தருளினார். உடனே அவ்வருளப்பாட்டை, தவத்தந்தையாரோடு, ஏனைய அடியார்களுக்கும் அருளிச்செய்து, திருவருளை யெண்ணித்தொழுது, திருவெண்ணீறணிந்து ஸ்ரீபஞ்சாக்கரத்தைச் சிந்தித்து, துதித்து வணங்கிப் புறப்படாயருளினார். சூரியனும் உதயமாயினான். அப்போது, திருநெல்வாயில் வேதியர்களும் அடியார்களும் முத்துச்சிவிகை குடை சின்னங்களைக் கொண்டு எதிர்வந்து, பிள்ளையாரை வணங்கித் தாம்கொண்டுவந்த திருவருட் பிரசாதத்தை முன்வைத்து, கட்டளைப்படி அங்கீகரித் தருளவேண்டுமென்று விண்ணப்பம் செய்தார்கள். அதுகேட்டுப்பிள்ளையார், இது எம்பெருமான் எம்மை அடிமைகொள்ளும் பெருங்கருணையே யென்று வணங்கி, அத்திருவருட் பேற்றின் அருமை

யும் பெருமையும் தோன்ற; "எந்தை யீசனெம்பெருமானேறமர் கடவுளென்றேத்திச், சிந்தை செய்பவர்க்கல்லாற் சென்று கூடுவதன்றாற், கந்தமாமலருந்திக்கடும் புனனிவாமல்குகரைமே, லந்தண்சோலை நெல்வாயிலரத்துறை யடிகடம்மருளே" என்று திருப்பதிகம் பாடியருளி, முத்துச் சிவிகையை வலம்வந்து பணிந்து எழுந்து, இவ்வுலகமெல்லாம் பிழைக்கும்படி ஸ்ரீ பஞ்சாக்கரத்தையோதி அச்சிவிகைமேல் ஏறியருளினார். அப்பொழுது, அடியார்கள், ஹர ஹர வென்று முழக்கஞ் செய்தனர்கள்; வேதகோஷங்கள் முழங்கின; சமஸ்த மங்களவாத்தியங்களும் தழங்கின; தேவர்கள் பூமழை பொழிந்தார்கள். உடனே முத்துக்குடை பிடிக்கப்பட்டன. பாற்கடலில் உதயமான பூரண சந்திரனைப்போல, திருவெண்ணீற்று ஒளி மிகுந்த அடியவர் கூட்டத்துள்ளே முத்துச்சிவிகை பிரகாசித்தது. வேதநாயகரான பெருமானிடத்திற் பெற்ற காளம், "வேதமும் தவமும் தலையெடுக்கும்படி ஞானசம்பந்தன் வந்தான்" என்று தானே ஒலித்தது. சின்னம், "உலகன்னை சிவஞானத் திருமுலைப்பால் கொடுத்தருளப் பெற்ற பாலறாவாயன் வந்தான்" என்று இசைத்தது. தாரை "வேதாகமாதிகளை எல்லாம் ஓதாதுணர்ந்த முத்தமிழ் விரகன் வந்தான்" என்று குறித்தது.

இச்சரிதம், உயிர்களுக்கு வேண்டும போகம் உணர்ந்து ஊட்டுவிப்பார் சிவபெருமானே எனவும, அப்போகத்தை வேண்டுவதும வெறுப்பதும் அடிமைத்திறம் செய்வார் புரியலாகாது, ஆணைப்படி ஒழுகுதலே கடன் எனவும் உணர்த்திற்றென றுணர்க. அவவாறு நிகழ, ஆன்மாக்களது அஞ்ஞான இருட்பகையாக எழுந்த ஞானமார்த்தாண்டராகிய பிள்ளைப்பிரான், ஞானபோகானுக்கிரகரும் பக்தவத்ஸலருமாகிய ஸ்ரீ உமாப்பிரியரது திருவரத்துறைத் திருக்கோயிலைத் தூரத்தே கண்டவுடனே, நித்திலயானத்தைவிட்டிழிந்து, நமஸ்காரம்செய்து, பேரானந்தத்தோடும சென்று, உட்புகுந்து, வலமாகவந்து, தொழுது, அன்பினால் உள்ளம் உருக, உரோமஞ் சிலிர்ப்ப, உடல்பூரிக்க, உரைகுழற, ஒழியாது கண்ணருவி பொழியப் பாடியாடிப் பரவசராய் அப்பனை வணங்கி அருள்விடைபெற்று, அருமையாகப்பிரிந்து, புறம்பேவந்து, அத்திருப்பதியிற்றானே ஓர் திருமடஞ் செயதிருந்து, அடுத்த திருவெண்ணெய் நல்லூர் முதலிய பதிகளுக்குச் சென்று திருப்பதிகம்பாடி அங்கு இருக்கையில், திருத்தோணி அம்மையப்பர் ஞாபகம திருவுளத்தி லுண்டாக, அன்பினாலுருகி அத்திருக் கோலத்தைத் தரிசிக்கும்படி, அரத்துறையாண்டாரை வணங்கி விடை பெற்றுமுத்துச் சிவிகையேறி; மார்க்கத்திலுள்ள திருப்பதிகளோடு திருப்பழு

லூர், திருவிசயமங்கை, திருவைகா, திருப்புறம்பயத்தையும் அடைந்து பதிகம்பாடிப் பெருமானைத்தரிசித்து, திருச்சேய்ஞலூருக்கு எழுந்தருளினார். அப்போது, அத்திருப்பதிவாசப் பெரியோர்கள் ஆளுடைய பிள்ளையார் அங்கு எழுந்தருளும் மங்கலமொழிகேட்டுத் தங்கள் சண்டேசப் பிள்ளையார் எழுந்தருளினாற்போலப் பேராநந்த முடையவர்களாய்க் குடந்தம்பட்டுக் கூத்தாடி, எதிர்கொண்டார்கள். சம்பந்தப் பிள்ளையாரும் அத்திருப்பதியைத் தரிசித்தவுடனே, பெருமான் திருமுடிமாலை சாத்தியருளப் பெற்ற தொண்டர் நாயகமாகிய சண்டேசப்பிள்ளையார் திருவவதாரஞ் செய்த திருப்பதியென்று, அவ்வெல்லையில் சிவிகைமேல் எழுந்தருளத் திருவுளம் இசையாமல் இழிந்து நடந்தருளினார். எதிர் வந்தவர்களும் உடன்சென்றவர்களுமாகிய அடியவர்கள் அனைவரும் ஒருவரை யொருவர் வணங்கி வழிபட்டு பெருமகிழ்ச்சி கொண்டாடிச்சூழப் பிள்ளையார், உடையவர் செல்வக்கோயிலுட் புகுந்து, வலம்வந்து, பணிந்து, எழுந்து, "பாலதாட்டப் பேணாதவன்றாதை வேரடைந்து பாயந்ததாளை வேரறத்தடிந்தார் றனக்கு," "மாலைசூட்டித் தலைமை வகுத்த தென்னே" என்று சண்டேசுரப் பிள்ளையாரது அருளப் பாட்டைச் சிறப்பித்துப் பாடி அங்கிருந்து புறப்பட்டு, திருப்பனந்தாள், திருப்பந்தணைநல்லூர், திருவோமாம்புலியூர், திருவாழ்கொளிப்புத்தூர், திருக்கடம்பூர், திருநாரையூர், திருக்கருப்பறியலூர் முதலிய திருப்பதிகளுக்குச் சென்று வணங்கித் திருப்பதிகம் பாடியருளினார்.

பின்பு,எங்கள் தவப்பயனாகிய சம்பந்தவள்ளலார், அங்குநின்றும்வழிக்கொண்டு இடையிலகப்பட்ட திருப்பதிகளைஎல்லாம் தரிசித்துச் சென்று, பூலோக சிவபுரமாகியசீகாழிக்கு எழுந்தருளினார். அச்சோபனச்செய்தியைக்கேட்டஅத்திருப்பதி வேதியர்முதலியபெரியோாகள் சுமங்கலிகள் முதலியஅனைவரும்மங்களவாத்தியங்கள் அஷ்ட மங்கலத்தோடும் எதிர்கொண்டு போய், பிள்ளைப்பெருமானார், சின்னமுதலிய தெய்வப் பேரொலியும் அன்பாகள் பல்லாண்டொலியும் நிரமப; முத்துக்குடை நீழலில் முத்துச்சிவிகைமீது அமர்ந்தருளிய, பவனித் திருக்கோலத்தைக் கண்ணாரக்கண்டு களித்துக் கூத்தாடிப்பாடி., பலமுறை வணங்கிப் பிறந்தபயனைப் பெற்றார்கள். அதுகண்டு, எங்கள் தமிழ்க்கு அரசும் நித்திலயானத்தைவிட்டு இழிந்து, அப்பெரியோர்க்கு எதிர்வணங்கி, நல்லவரவுவினவி அவர்களோடு சென்று, ஆராவமுதாது திருத்தோணித் தெய்வ விமானங்கண்டு கும்பிட்டுத் திருப்பதிகம்பாடி, திருவருளநுபவஞ்செய்து, தெளிந்து, அரிதாகவெளிப்பட்டு, திருமாளிகை நோக்கி எழுந்தருளும்போது, திருநீலகண்ட யாழ்பாணத்

திருவடிகளை அவரது தெய்வமாளிகைக்கு எழுந்தருளப்பணித்து, தாம் தமது திருமாளிகைக்கு எழுந்தருளினார். அப்போது, ஆலத்திகொண்டு சுமங்கலிகள் புடைசூழத் தவத்தாயாம் பகவதியார் திருநீற்றுக் காப்பு ஏந்தி எதிர் எழுந்தருளி, திருநீறு சாத்தித் தொழுதுநிற்ப; அவருக்குத் தக்கவாறு கருணைசெய்து, உள்ளே எழுந்தருளினார்.

இவ்வண்ணம் அங்கிருந்து, நாள்தோறும் திருத்தோணிநாதரைச் சென்று வணங்கிப் பலதிருப்பதிகங் களைப்பாடி எழுந்தருளி இருக்கும் நாளில், ஆளுடைய பிள்ளையார்க்கு உபநயநத் திருவயது வந்தது. அப்போது, அங்குள்ள பெரியோர்களாகிய அந்தணர்கள் உபநயந கருமத்தைச்செய்ய; அதற்கு எம்பெருமான் உலகுய்யவந்த குருநாதன் ஆதலால், வேதவழக்கத்தை நிலைநிறுத்தவேண்டித் திருவுளம் இசைந்து, விதிப்படி மான்தோலோடு முப்புரிநூலும் தாங்கியருளினார். பின்பு, வினைதொலைக்கவேண்டி ஒருபிறப்பையேனும் பெறா என்னையனை யிருபிறப்பாளனாக உபநயந கருமஞ்செய்து பிரமசரிய நிலை[illegible]யை யடையப்பண்ணிய அவ்வேத முனிவர்கள் எதிரே யிருந்துகொண்டு விதிப்படி நான்குவேதங்களையும் ஓதிக்கொடுத்து ஓம், என்று பிரணவமுதலாக எல்லா மந்திரங்களையும் கூறினார்கள். அப்போது அவர்கள் பொருட்டு மரபு கெடாது நிலைநிற்கும்படி, எங்கள் தமிழ்நாதனும் பரிசுத்தமாகிய அவ்வளவிறந்த வேதங்களையும் ஓதி அதற்குரிய ஆறுசாத்திரமாகிய அங்கங்களையும் விரித்து அருளிச்செய்தார். அதுகண்ட அவ்வந்தணர்கள் பெருமான் திருவருளை எண்ணி, பெரிய அதிசயத்தோடும் துதித்து, ஓதாதுணர்ந்த எங்கள போதமூர்த்தியைத் தங்கள் தியாநப்பொருளென்றே தெளிந்து வணங்கி, கற்று நன்குணர்ந்திருந்த அவ்வேதத்துள்ள அருத்தங்களைக் கேட்டறிந்து, சந்தேக விபரீதக் குற்றங்களினின்று நீங்கி வாழ்ந்திருந்தார்கள். பின் ஆசிரியர் பெருமானும், எல்லா மந்திரங்களையும் எடுத்தருளிச்செய்து, வைதிககருமத்துள்ளே நேரிடும் ஆசங்கைகளை எல்லாம் தீர்த்து, வேதம் துணிந்த முடிபாகி எல்லா மந்திரங்களும் தோற்றுந்தாயாகி உள்ளது எம்பெருமான் திருவெழுத்தாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரம் என்று நாமுய்யும்படி, அவர்களை இன்னும் தேற்றும் பொருட்டு. "மந்திரநான் மறையாகி வானவர், சிந்தையுணின்றவர் தம்மையாள்வன, செந்தழலோம்பிய செம்மை வேதியர்க்கந்தியுண்மந்திர மஞ்செழுத்துமே" என்று ஸ்ரீபஞ்சாக்கரத் திருப்பதிகத்தை அருளிச்செய்தார். அவ்வருளப்பாட்டை வேதியரெல்லாம் தலைமேற்கொண்டு வணங்கி ஒழுகுவாராயினார்.

அந்நாளில், பிள்ளையார் ஆளுடையார் கட்டளைப்படி அம்மை சிவஞானப்பால் கொடுத்தருளப் பெற்ற சோபனவார்த்தையை ஆளுடைய அரசுகள் கேள்விப்பட்டு, பிள்ளையாரைத் தரிசிக்கும்படி சீகாழிக்கு எழுந்தருளினார். எழுந்தருளவே, பிள்ளையார் கேள்விப்பட்டு, பெரும்பேறு பெற்ற பெருங்களிப்புடனே எதிர்கொண்டெழுந்தருளும்போது, அன்பு அறாத சிந்தையும், திருமேனிக்குழைவும், ஐம்பொறிகளையும் கடந்த எண்ணமும், திருக்கையில் அமைந்த உழவாரப்படையும், திருவெண்ணீற்றுப் பொலிவும், அத்திருவெண்ணீறு கரையும்படி திருவிழிகளிற் பெருகும் அருவியும் உடைய அற்புத கோலத்தோடும் வாகீசப்பெருமான் எதிர் வந்தருளக் கண்டு, பேரன்போடு பிள்ளையார் வணங்கியருள, அரசுகளும் வணங்கியருள ஒருவரையொருவர்கொண்டாடிஇன்பமொழி கூறி, அரசுகளை உடன்கொண்டு, திருத்தோணித் திருவிமானத்தை அடைந்து தம்பெருமானையும் பெருமாட்டியையும் வணங்கி மீண்டு திருமாளிகைக்கு எழுந்தருளினார். அங்கு ஆளுடைய அரசுகளுக்கும் அவரோடு வந்த திருத்தொண்டர்களுக்கும் திருவிருந்துசமைத்து அமுது செய்வித்தருளினார். அன்றுபோல அடுத்து வருநாட்களிலும் அவ்வாசிரிய மூர்த்திகள் இருவரும் அன்பின் அளவளாவி உடனிருந்து பின்பு அரசுகள் மற்றைய திருப்பதிகளைத் தரிசிக்கவேண்டுமென்று திருவுளங்கொண்டு பிள்ளையார்உடம்பாடுபெற்று எழுந்தருள, பிரிவாற்றாமையால் திருக்கோலக்காவரையில் பிள்ளையார் பின்செல்ல; அரசுகள் அவ்விடத்து வணங்கிப் பிரியா விடைபெற்றுச் சென்றருளினார். இது, யாவரும் விரும்பத்தக்க சாதுசங்கத் திறத்தினை விளக்குகின்றது.

அவர் சென்றருளிய பின்பு, பிள்ளையார் மீண்டு சீகாழிக்கு வந்து எழுந்தருளி யிருந்தார், அப்போது, தமிழாசிரியர் பெருமானாதலின் பிள்ளையார், எம்மை யுணர்த்தவேண்டி,செந்தமிழ் விகற்பச் செய்யுட்களாலே,மொழிமாற்று, மாலைமாற்று,வழிமொழிமடக்கு,இயமகம், ஏகபாதம், தமிழிருக்குக்குறள், எழுகூற்றிருக்கை, ஈரடி,ஈரடிமேல் வைப்பு, நாலடிமேல்வைப்பு, முடுகு, ஆராகம்,சக்கரமாற்று, முதலிய வெல்லாம் முதல் இலக்கியமாகத்திருப்பதிகம் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார். அத்திருமொழிகளைப் பெரும்பாணத் திருவடிகளும் அவர்பத்தினியார் பாடினியாரும் யாழிலமைத்துப்பாடி யின்புற்றிருந்தருளினார். அந்நாளில் உலகிலுள்ள பக்குவர் அபக்குவர் முதலிய எல்லா ஆன்மாக்களுக்கும் உபாசனை முறையை உபதேசித்தருளும்படி திருவுளங்கொண்டு, அரியதமிழ்நாட்டுள் சிவபெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கப்பட்ட தெய்வத்தலங்கள் தோறுஞ் சென்று தரிசித்து வா

வேண்டுமென்று தவத்தந்தையாருக்கும் ஏனைய பெரியோர்களுக்கும் தெரிவித்தருளினார். அதுகேட்ட தாதையார், உம்மை அருமையாகப் பெற்றுக்கொண்டதனால், பிரிந்திருக்கச்சகியேன் ; அன்றியும், இம்மைக்கும் மறுமைக்கும் உதவியாகிய வேள்வியொன்று செய்யவேண்டுவதாக விருக்கின்றது ; ஆதலால் இன்னும் சிலநாள் உடன் வருகின்றேன் என்று குறிப்பித்தருளினார். அதற்குப் பிள்ளையார் திருவுள்ளம் இசைந்து, தோணிப் பெருங்கோயிலுக்கு எழுந்தருளி அம்மையப்பரை வணங்கி, அருள்விடைபெற்று தவத்தாதையாரும், திருநீலகண்ட யாழ்ப்பாணத் திருவடிகளும், அத்திருப்பதியிலுள்ள ஏனையபெரியோர்களுள்ளே உடன்வரத் தக்கவர்களும், உடன்வரவும் மற்றையர்கள் நிற்கவும் புறப்பட்டு, முத்துச் சிவிகைமேல், முத்துக்குடை பிடிக்கவும், சின்னம் காளம் தாரை, எங்கள் சிவஞான சம்பந்தப்பெருமான் வந்தானென்று தெய்வப்பேரொலி செய்யவும் ஏனைவாத்தியங்கள் முழங்கவும், அங்கங்குள்ள அடியவர்கள் எதிர்கொண்டு வணங்கவும் எழுந்தருளி, திருக்கண்ணார்கோயில் முதலிய திருப்பதிகளைத் தரிசித்து, காவேரிவடகரையில மேற்குத்திசை நோக்கிச் சென்று திருப்புள்ளிருக்குவேளூர், திருநின்றியூர், திருநீடூர், திருப்புன்கூர், முதலிய திருப்பதிகளைத் தரிசித்தருளினார்.

அங்கிருந்தும் புறப்பட்டு, திருமண்ணிப்படிக்கரை, திருக்குறுக்கை வீரட்டானம், திருஅன்னியூர், திருப்பந்தண நல்லூர், திருமணஞ்சேரி, திரு எதிர்கொள்பாடி, திருவேள்விக்குடி, திருப்பூந்துருத்தி, திருக்கொடிகா, திருக்கஞ்சனூர், திருமாந்துறை, திருமங்கலக்குடி, திருவியலூர், திருந்துதேவன்குடி, திருஇன்னம்பர், திருவடகுரங்காடுதுறை, திருப்பழனம், முதலிய திருப்பதிகளைத் தரிசித்துப் பதிகம்பாடி, திருவையாற்றுக்கு எழுந்தருளினார். அங்கே அடியார்கள் எதிர்கொண்டு வணங்க, பிள்ளையாரும் வணங்கி, நம் முதல்ஆசிரியராகிய திருநந்தியடிகள் திருவருள்பெற்ற அத்திருப்பதியெல்லையைப்பணிந்து "புலனைந்தும் பொறிகலங்கி" என்றதிருப்பதிகம் பாடிச்சென்று, திருவீதிகடந்து, கோபுரந்தொழுது உள்ளடைந்து, உடல்குழையஉளமுருகஅன்பினால் "கோடல்கோங்கம்" என்னும் திருப்பதிகம்பாடிப் பலமுறையுங் குடந்தம்பட்டுக் கூத்தாடி, அரிதிற்புறம்வந்து, திருமடஞ்செய்திருந்து, திருப்பெரும்புலியூர் முதலிய திருப்பதிகட்குச் சென்றுவணங்கி வந்தருளினார்.

பின்பு, மேற்றிசை நோக்கிச்செல்லத் திருவுளஞ் செய்து, திருவையாறுடையார் திருவருள்பெற்று, திருநெய்த்தானம், திருமழபாடி, வணங்கி, சிலநாள் இருந்து, திருக்கானூர், திருஅன்பி

லாலந்துறை(மீட்டும்)மாந்துறை முதலிய திருப்பதிகளைத் தொழு து, மழநாட்டுத் திருப்பாச்சிலாச் சிராமத்திற்கு எழுந்தருளினார். அங்கே, கொல்லிமழவனார், தமது திருமகள், முயலகநோயால் வருந்துவதற்கு சகியாதவராய் எவ்வகையாலும் தீராமல் பெருங் கவலைப்பட்டு, சிவபெருமான் திருவடிக்கு அடிமைசெய்யும் புண் ணியச் சைவமரபில் அவதரித்தவர் ஆதலால், அத்திருமகளை நம் பெருமான் மஹாசந்நிதானத்தில், இட்டுவைத்திருந்தார். அவ்வள வில் பிள்ளையார் எழுந்தருளிய சோபனவார்த்தை திருக்காளவொ லியாற் கேட்டு, அவ்வரசன் தம்மகளாரைவிட்டு நகரமலங்கரிப்பி த்து, பரிசனங்களோடும் விரைந்து பிள்ளையார் எதிர்சென்று, சிவி கைக்கீழ் அட்டாங்க பஞ்சாங்க முறையால் விழுந்து வணங்கினர். அஃதுணர்ந்தருளிய ஞானவள்ளலார், ஐய! எழுகஎன்று திருவாய் மலர்ந்தருளினார். அரசன் மகிழ்ந்து தலைமேற்குவித்த கையராய் உடன்சென்று, திருவீதி வலமாகக் கோயிலை அடைந்தவுடனே, பிள்ளையார் முத்துச்சிவிகையினின்றும் இழிந்தருளி, திருவாயிலைப் பணிந்து, உட்புகுந்து, பிரதக்ஷணம்வந்து, சந்நிதிக்குச் செல்லு கையில், அங்கு அரசகன்னிகை அறிவழிந்து நிலத்திற் கிடப்ப தைக்கண்டு, இது என்னை? என்று வினவியருளினார். அதுகேட்ட ரசன், இவள் என் பெண் முயலகநோயால் வருந்த எவ்விதத்தும் அது ஒழியாமையால் உடையவர் சந்நிதியிற் கொணர்வித்தேன் என்று விண்ணப்பித்தார். அதனைப் பிள்ளையார் கேட்டருளி, பெரு நகருணைக்கடல் ஆதலால் திருவுளமிரங்கி நின்ற நிலையில் "துணி வளர் திங்கடுளங்கி விளங்கச் சுடர்ச்சடை சுற்றிமுடித்துப், பணி வளர் கொள்கையர் பாரிடஞ்சூழ வாரிடமும் பலிதேர்வர், அணி வளர் கோலமெலாஞ் செய்து பாச்சிலாச்சிராமத் துறைகின்ற, மணிவளர்கண்டரோ மங்கையைவாட மயல்செய்வதோ விவர்மா ண்பே" என்ற திருப்பதிகம் பாடியருளினார். உடனே அக்கன்னி கையைப் பிடித்திருந்த அக்குமரகண்ட வலியானது ஒழிந்தது. ஒழியவே, அப்பெண்மணி துணுக்குற்று எழுந்து பிதாவாகிய அர சன் பக்கல்வரக்கண்டு பெரு மகிழ்ச்சியோடு திருமகளும், சுற்ற மும், தானுமாக எங்கள் சம்பந்தப் பெருமானை வணங்கினார். பிள் ளையார் பாச்சிலாச் சிராமமுடையாரைப் பணிந்து வாழ்த்தியருளி னார். அடியவர்கள், ஹர ஹர என்று ஆரவாரித்தார்கள். பின்பு பிள்ளைப்பிரான் அங்குசில நாளிருந்து, திருப்பைஞ்ஞீலி, திருஈங் கோய்மலை முதலிய திருப்பதிகளைச் சென்று தரிசித்துத் திருப்பதி கம்பாடி, மேற்கே கொங்குநாடு நோக்கி எழுந்தருளினார். இச்சரித் திரம், சற்குரு சந்நிதியில் அடுத்தவர்களது முன்னை வினையாகிய

பிராரத்தமும் அதன் விளைவாகிய பயனும் ஒழியும் முறைமையுணர்த்தியதென்று உணர்க.

பின் பிள்ளையார் கொங்கு நாட்டின்கணுள்ள திருப்பதிகளையெல்லாந் தரிசித்துச் சென்று திருக்கொடிமாடச்செங்குன்றூரை அடைந்து, பெருமான் திருக்கோயிலை வலம்வந்து பணிந்து, திருப்பதிகம்பாடி, அத்திருப்பதியில் திருமடஞ்செய்து அதன்மேற்கின்கணுள்ள திருநணாவுக்குஞ் சென்று தரிசித்து வந்து, அங்குதானே எழுந்தருளியிருந்தார். அந்நாளிலே, கார் கூதிர்ப் பருவங்களொழிந்து, வெயிலை வேண்டும்படி குளிர்வருத்துகின்ற பனிப்பருவம் வந்தது. அப்போது, திருக்கூட்டத்து அடியார்கள் அங்கு நெடுங்காலம் தங்கி இருந்தபடியால் நளிர்ச்சுரம் உண்டாயிற்று. அதனை உடனே பிள்ளையார்க்கு விண்ணப்பித்தனர் அதுகேட்டுப்பிள்ளையார், இது இந்நிலத்துக்கு இயற்கையாயினும் நமக்கு வரத்தக்கதல்ல என்று, "அவ்வினைக் கிவ்வினையாமென்று சொல்லுமதுவறிவீர், உய்வினை நாடாதிருப்பது முந்தமக்கூனமன்றே, கைவினைசெய் தெம்பிரான் கழல்போற்றுது நாமடியேம், செய்வினைவந்தெமைத் தீண்டப்பெறாத் திருநீலகண்டம்" என்னும் திருப்பதிகம்பாடித் திருவாணை சாத்திருளினார்.

உடனே, திருக்கூட்டத்து அடியார்களுக்கும் அத்திருப்பதிவாசிகளுக்குமேயன்றி அதுமுதல் அந்நாடு முழுவதினும் அக்கொடிய நோய் ஒழிந்தது; இது ஞானாசிரியன் சமுகத்தில் பிராரத்தமேயன்றி, நிகழ் வினையாகிய சஞ்சிதமும் வரும் வினையாகிய ஆகாமியமும் ஒழியுமுறைமையை உணர்த்திற்று. பின்பு சிலநாள் அங்கிருந்து புறப்பட்டு, திருப்பாண்டிக் கொடுமுடி, திருவெஞ்சமாக்கூடல், திருக்கருவூர் ஆனிலை, முதலிய திருப்பதிகளைத் தரிசித்துப் பதிகம் பாடியருளி, அங்ககன்று, சோழநாட்டில் திருப்பராய்த்துறை, திருவாலந்துறை, திருச்செந்துறை, திருக்கற்குடிமாமலை, திருமூக்கீச்சரம், திருசிராப்பள்ளி, திருவானைக்கா, அடைந்து பணிந்து பதிகம்பாடியிருந்து, பின்பு திருப்பாற்றுறை, திரு எறும்பியூர், திருநெடுங்களம், மேலைக்காட்டுப் பள்ளி, திருவாலம்பொழில், திருப்பூந்துருத்தி, திருக்கண்டியூர் வீரட்டானம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருவெண்ணி, திருச்சக்கரப்பள்ளி, திருப்புள்ளமங்கை, திருபாலைத்துறை, திருநல்லூர் முதலிய திருப்பதிகளை அடைந்து தரிசித்து, திருப்பதிகம்பாடிச் சிலநாளிருந்து, திருக்கருகாவூர், திரு அவளிவணல்லூர், திருப்பரிதிநியமம், திருப்பூவனூர், திரு ஆவூர் பசுபதீச்சரமுஞ் சென்று வணங்கித் திருப்பதிகம் பாடி, மீட்டும் திருநல்லூர்க்கு எழுந்தருளி அங்கிரு

ந்து புறப்பட்டுத் திருவலஞ்சுழிக்கு எழுந்தருளி, இறைவர் திருக்கோயிலை வலம்வந்து பணிந்து, திருப்பதிகம் பாடி வெளிவந்து, அங்கு திருமடஞ் செய்தருளினார்.

அப்போது, இளவேனிற் பருவம் கடந்து தாங்குதற்கரிய முதுவேனிற் பருவமும் வந்தது. அந்நாளில் ஆளுடைய பிள்ளையார், திருவலஞ் சுழி விட்டுத் திருப்பழையாறைக்குச் செல்லுகையில் திரு ஆறைமேற்றளி வணங்கி, அம்மை பூசித்தருளிய திருச்சத்தி முற்றத்தை யடைந்து தரிசித்து, திருப்பட் டீச்சரத்திற்கு எழுந்தருளுகையில், அப்பருவ வெப்பத்தை ஒழிப்பதற்கு, முத்தமிழ்நாயகர் திருமுடிமேல் முத்துப்பந்தர் ஒன்றை ஒருசிவ பூதம் கொடுவந்து நிழல்செய்து, திருப்பட்டீச்சர முடையார் எம்மை விடுத்தருளினார் என்றுகூற; அம்மொழியும் முத்துப்பந்தரும் ஆகாயத்தின் கண்ணே எழுந்தன. அதனை யுணர்ந்த பிள்ளையார், ஆளுடையார் திருவருள் இதுவாகில், யாமுடம்படக் கடவேம் என்று, உடல் புளகம் போர்ப்ப, நமஸ்காரம் செய்தருளினார். அம்முத்துப் பந்தரின் கால்களைப் பரிசனங்கள் கைக்கொண்டார்கள். பூமழை பொழிந்தது. ஓதாதுணர்ந்த போதமூர்த்தியும் அந்நிழல் அழகிய திருச்சிற்றம்பல முடையார் திருவடி நீழல்போலக் கொண்டு, திருப்பட்டீச்சரத்திற்கு எழுந்தருளினார். அங்கு திருவாயிலை வணங்கி, சந்நிதியை அடைந்து தரிசித்து, "பாடன்மறை சூடன்மதி" என்னும் திருப்பதிகம்பாடி, அருள்விடை பெற்று, புறத்தேவந்து, திருமடஞ்செய்து எழுந்தருளினார். இதன் கருத்து, தம்மை அடைந்தார் துன்பத்தை ஆளுடையார் தாமேவலிது ஒழித்தருளுவர் என்பது.

பின்பங்கிருந்து திருவாறைவடதளி, திருஇரும்பூளை, திருஅரதைப் பெரும்பாழி, திருச்சேறை, திருநாலூர், திருக்குடவாயில், திருநறையூர், அரிசிற்கரைத் திருப்புத்தூர், திருச்சிவபுரம், திருக்குடமூக்கு, திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம், திருக்குடந்தைக்காரோணம், திருநாகேச்சரம், திருவிடை மருதூர், அடைந்து தரிசித்துத் திருப்பதிகம்பாடி யருளி, அங்கிருந்து புறப்பட்டு, பல திருப்பதிகளையும் வணங்கி, திருத்தென்குரங்காடுதுறை பணிந்து, திருவாவடு துறைக்குச்சென்று, இறைவர் திருக்கோயிலை யடைந்து பணிந்து, பதிகம் பாடியருளிப் புறம்போந்து, திருமடஞ் செய்திருந்தார். அக்காலத்தில் யாகம்செய்ய விதித்த பருவம்வந்தது. வரவே, தவத்தாதையார், பிள்ளையாரிடஞ்சென்று வேள்விசெய்யப் பொருள் வேண்டுவதைக் குறிப்பித்தருளினார். அதுகேட்டுப் பிள்ளையார், முன்சொல்லி யிருந்ததைத் திருவுளத்து அடைத்து, நம

க்கு அழிவற்ற பொருளாவது, அப்பர் திருவடியன்றோ? என்று,
ஆலயத்துக்குச்சென்று, உடையவர் சந்நிதியில் நின்று, பொருள்
வேண்டினவருக்குக் கொடுப்பதற்குத் தேவரீர் திருவடியல்லது
மற்றொன்று காணேன் என்ற திருக்கருத்தால், "இடரினுந் தளரி
னுமெனதுறுநோய், தொடரினுமுனகழறொழுதெழுவேன், கட
லினிலமுதொடு கலந்த நஞ்சை, மிடறினிலடக்கிய வேதியனே,
இதுவோ வெம்மையாளு மாறீவதொன்றில்லையே, யதுவோ வுன
தின்னருளா வடுதுறையானே" என்னும் திருப்பதிகம்பாடி யருளி
னார். உடனே பெருமானருட் கட்டளையினால் ஒரு பூதம், சந்நிதிப்
பீடத்தின்மீது, ஆயிரம் பொன்னையுடைய உலவாக்கிழி யொன்றி
னைவைத்து, இவ்வுலவாக்கிழி, அப்பரால் உமக்கு அருள்செய்யப்
பட்டது என்று சொல்லி மறைந்தது. அப்போது, பிள்ளையார், ப
ணிந்தெழுந்து, அவ்வுலவாக்கிழியை யெடுத்துத் தலைமேற் சூடி,
தவத்தந்தையார் திருக்கரத்திற் கொடுத்து, இது நம்பெருமான்
கொடுத்தருளப்பெற்ற உலவாக்கிழி என்றும் எடுக்கவெடுக்கக் கு
றையாது. நீரும் அச்சீகாழியிலுள்ள வேதியர்களும், வேதவிதிப்
படி செய்யவேண்டும் வேள்வி முழுவதும் செய்யலாம். என்று
திருவாய் மலர்ந்தருளி, அவரைச்சீகாழிக்கு அனுப்பிவிட்டு, தாம்
அங்கிருந்தருளினார்.

இச்சரித்திரம், அன்பர் வேண்டியவாறு கொடுப்பவர் இறை
வராதலின், இம்மையையும்பற்றி யவரையே வேண்டுதல் மரபு எ
னஉணர்த்துகின்றது. அதன்பின், பிள்ளையார், திருக்கோழம்பம்,
திருவைகன் மாடக்கோயில், திருநல்லம், திரு அழுந்தூர் மாமடக்
கோயில், திருத்துருத்தி, திருமூவலூர், திருமயிலாடுதுறை, திருச்
செம்பொன் பள்ளி, திருவிளநகர், திருப்பறியலூர் வீரட்டானம்,
திருவேட்டக்குடி முதலிய திருப்பதிகளைத் தரிசித்து, தருமபுரத்
துக்கு எழுந்தருளினார். அது பாணர்பெருமான் திருத்தாயார் திரு
வவதாரம் செய்த திருப்பதி யாதலாலே, அவர் சுற்றத்தார், எதிர்
கொண்டு திருவடிகளில் வணங்கினார்கள். அப்போது, பாணத்திரு
வடிகள், பிள்ளைப்பெருமான் அருளிச்செய்த தமிழ் வேதத்தைத்
தாம்யாழில் ஓதப்பெற்ற பாக்கியத்தின் மிகுதியை அவர்களுக்குத்
தெரிவிக்க; அவர்கள், ஐயரே! நீர் அதை யாழிலமைத்துக் கானஞ்
செய்தலாலே இவ்வுலகத்தில் விளக்கமுற் றிருக்கின்றது என்று
கூறினார்கள். அதுகேட்டு, பெரும்பாணநாதர், நடுங்கி அச்சமுற்று,
சம்பந்தநாயகர் சந்நிதி அடைந்து, நமஸ்கரித்து, எல்லை கடந்த
இத்திருப்பதிக மறையின் பண்ணிசை, கருவி முதலியவைகளுக்கு
அளவுபடாததென்னும் துணிபு, இவர்களே யன்றி இவ்வுலகத்
துள்ளவர்களும் அறிந்து பிழைக்கும்படி, ஒரு திருப்பதிகம்பாடி

யருளப்பெற்றால், அதுயாழி லடங்காத தன்மையை அடியேன் காட்டக்கூடுமா யிருக்கும் என்று விண்ணப்பித் தருளினார். அப்போது வள்ளலும், திருவுள்ளஞ்செய்து, "மாதர் மடப்பிடியும், மட, வன்னமு மன்னதோர், நடையுடைம், மலைமக, டுணையென மகிழ்வர் - பூதவினப்படைநின், றிசை, பாடு ஆடவு மாடு, டுவரவர்படர், சடைநெடு, முடியதோர் புனலர்-வேதமோ டேழிசை, பா, டுவரா ஆழ்கடல்வெண்ண, டிரைமிரைந், நுரை கரை, பொருது விம்மி நின்றயலே - தாதவிழ் புன்னைதயங், கு, மலர்ச்சிறை வண்டறை, யெழில் பொழில், குயில்ல் பயி, றருமபுரம்பதியே." என்னும் திருப்பதிகத்தை அருளிச்செய்து கொடுத்தார்.

பாணர்பெருமான் அதனையாழில் முன்போல அமைத்து வாசிக்கத் தொடங்கவே அப்பண்ணிசை அவ்யாழ்நரம்பில் அடங்கிற்றில்லை. அது கண்டு, பாணத்திருவடிகள் அச்சமுற்று, நடுக்கத்தோடு பிள்ளையார் திருவடிகளில் வணங்கி, எம்பெருமான் அருள்செய்த திருப்பதிகத்தின இசையையாழிலே ஏற்பேன் என்று சொல்லும் படியான தருக்கு, இக்கருவியாலன்றோ? நேர்ந்தது என்று, அவ்யாழினைக் கெடுக்கும்படி ஓச்சினார். அப்போது, பிள்ளையார் தடுத்து, விதிப்படி வரம் பறுத்துச் செய்த அக்கருவியாழைத் தாருமென்று திருக்கரத்துவாங்கி, ஐயரோ! இதனை நீர்வீணாக முரித்து விடுவானேன? ஆளுடையாளோடு நம்பெருமான் திருவருட் பெருமை வெளிப்படும்படி நமது முன்னிலையாக வந்த அப்பதிகம் இக்கருவியாழளவினுக்கு அமையுமோ? அமையாது: ஆதலால், நம்மளவைக்குத் தக்கபடி, உலகத்தாருணர்ந்து கொள்வதற்கு அமைப்பதே முறைமையாம். ஆகவே, இவ்யாழினைக்கொண்டு, வந்தவாறு வாசித் தருளுவீரென்று கொடுத்தருளினார். பாணர்பெருந்தகையாரும், பிள்ளையார் திருக்கரம் சாத்திக் கொடுத்தருளப் பெற்ற யாழினை வணங்கி, வாங்கி, தொண்டு தலைமேற்கொண் டருளினார். பிள்ளையாரும், அவர்களுக்குத்தக்க சிறப்பருளி, அங்குசிலகால மிருந்து, மற்றைத்திருப்பதிகளைத் தரிசிக்கும்படி எழுந்தருளினார். இது, குருவருண் மொழியினது அளவுபடாப் பெருமையை விளக்குகின்றது.

அவ்வாறு, அடியார்திருக் கூட்டத்தோடும் பிள்ளையார், திருநள்ளாற்றை அடைந்து, கோயிற்குச்சென்று அன்புபெருக, விழி வெள்ளங் கொள்ளக்கரைந்துருகி, "போகமார்த்த பூண் முலையாடன்னோடும்" என்னுந் திருப்பதிகம்பாடி, வெளிவந்து, பாணர் பெருமானை யாழிலிட்டுப் பாடப்பணித்து! தாம் திருத்தாளம் கொண்டு பாடியருளினார். பின்பு அங்கு சிலநாளிருந்து, திருச்சாத்

தமங்கைக்கு எழுந்தருளினார். அச்சுபவார்த்தையை நீலநக்க திருவடிகள் கேள்வியுற்று, பெருமகிழ்ச்சி அடைந்து, நகரத்தை அலங்கரித்து, அஷ்டமங்கலம் மங்கல வாத்தியங்கள் புடைசூழ அடியார் கூட்டங்களோடும் எதிர்சென்று வணங்க! அவரோடும் பாலறாவாயர், ஆயவந்தி ஆலயத்திற்குச் சென்று, பெருமானைப் பணிந்து திருப்பதிகம்பாடி, புறம்பே வந்து நீலநக்க அடிகள் திருமனைத் திருமடத்தில் எழுந்தருளி, அவர் அமைத்த திருவிருந்தமுதுகொண்டு, திருநீலகண்டயாழ்ப் பாணத் திருவடிகளுடன் அன்றிரவு தங்கி, மறுநாளும ஆயவந்திக் கோயிலுக்குச் சென்று, ஆராவமுதனை இமயத் திருமகளோடும் பணிந்து, திருப்பதிகம் பாடி, திருக்கடைக காப்பில், "நிறையினார் நீலநக்கன் னெடுமாநகரென்று தொண்டரறையுமூர்சாதத மங்கையயவந்தி" என்று நீலநக்கர் திருப்புகழை அமைத்துப் பாடியருளி, சில நாள் கழித்து, மற்றைய திருப்பதிகளிக்குச் செல்லும்போது திருநீலநக்க அடிகள் பிரிவாற்றாது வருத்தமுற அவரைத்தேற்றி, அங்கே நிறுத்திவிட்டு, தாம் எழுந்தருளி பலதிருப்பதிகளையும் தரிசித்து, திருநாகைக் காரோணம், திருசகீழ்வேளூர், முதலியதிருப்பதிகளைப் பணிந்து வருகையில், திருச்செங்காட்டங் குடியினின்றும் சிறுத்தொண்டதேவர் வந்து, பிள்ளையாரைத் தரிசித்து, தந்திருப்பதிக்கு எழுந்தருளச்செய்தார். அங்கே பிள்ளையார் திருக்கணபதீச் சரத்தையடைந்து, கோயிலை வலமவந்து பணிந்து திருப்பதிகம் பாடி, அதில், "செங்காட்டங்குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய" என்று, திருத்தொண்டர் நாயகமாகிய சிறுத்தொண்ட தேவர் திருப்பணியைச் சிறப்பித்தருளி, புறம்பேவந்து, அவ்வாமாத்தி குலப்பெருமாள் திருமடத்தில எழுந்தருளி யிருந்தார்.

அதன்பின், திருமருகலுக்குச சென்று, ஆளுடையபெருமானை உமாதேவியாரோடுந் தரிசித்து, அங்கு திருமடஞ்செய் திருக்கும் நாளிலே, வழிப்போக்கனாகிய ஒரு வணிகன் ஒரு கன்னிகையை அழைத்துக் கொண்டுவந்து, திருக்கோயிலுககு அடுத்த ஒரு திருமடத்தின் கண்ணே, இரவில் நித்திரை செய்யும்போது, பாம்புகடித்து, விடந்தலைக்கேறி இறந்துவிட்டார். அது கண்டு, அக்கன்னிகை அதிகதுக்கங்கொண்டு, நிலைதளர்ந்து, சோர்ந்து, விழுந்து, அரவுகடித்து இறந்தவனையும் தொடாதவளாய் வேறோர்துணையாவாருமின்றித தனியே புலம்பும்போது, விஷசிகிச்சை செய்யத்தக்கவர்களால் எவ்வகை முயற்சி செய்யப்பட்டும் அவ்விஷந் தீராமலே யிருந்தது. உதயகாலமுமாயிற்று. அப்போது அக்கன்னிகை, ஓய்! வணிகக்குலோத்தமரோ! தாய்தந்தையர்களை விட்டு உம்மைச் சதமாக நம்பிவந்த என்னை இவ்வாறு விட்டுப்போதலழகோ? என்

னுடைய துன்பத்தை ஒழிப்பார் ஒருவருமில்லையே! என்செய்கேன்! இனி உயிர் வாழேன்! என்று சொல்லித் துயரப்படுகையில், பெருமான் திருக்கோயில் வாயில் எதிரே தோன்ற, அதை நோக்கி, அடிமையுலகம் பிழைக்க ஆலகால விஷத்தை அமுது செய்தருளிய அமுதமே! சர்ப்பாபரணா! சாம்பராயிறந்த மன்மதனை அவன்தேவி இரதி வேண்ட மீட்டும் வருவித்தளித்த அருட்கடலே! அடைக்கலம் புகுந்த மார்க்கண்டரைக் காப்பதற்காகக் கொடிய இயமனை உதைத்தருளிய வள்ளலே! இவர்க்கிவ்விஷத்துன்ப நீங்கவும் என் துக்கமொழியவும், திருவருள் செய்யாயோ? எம்பெருமானே! உமையவள பெருமானே! திருமருகற்பெருமானே என்று திருவருளையே சிந்தித்து, அழைத்து, முறையிடுகின்ற அம்முறைப் பாட்டோசை, அருண்மருந்தாகியபாலறுவாயர் சிவதரிசனத்திற்குச் செல்லும்போது திருச்செவியிற்படக் கேட்டுத்திருவுள்ளமிரங்கி, தம்மைச் சூழ்ந்த தவமுனிவர்களோடும் அங்குஎழுந்தருளி, அக்கன்னிகையை நோக்கி, நீர் பயப்பட வேண்டாம், உமக்குண்டாகிய துன்பம் யாது? உங்கள் வரலாறு என்னை? என்று வினவியருளினர்.

அதற்கு அக்கன்னிகை, இரண்டு கைகளையும் குவித்து (அஞ்சலியத்தளாய்) கண்ணீர் அருவிபோற் பொழிய, எம்பெருமான் திருவடிகளில் விழுந்து பணிந்து சொலலத்தொடங்கினாள். ஐய! வைப்பூரிலே வாழ்கின்ற தாமன் என்பவர், என் பிதா! அவர்க்கு நன்மருகன் இவர்; என்பிதாவுக்குப் பெண்கள் எழுவர்! அவருள் மூத்தவளை இவர்க்குக் கொடுப்பதாகச்சொல்லிப் பின் விசேடம் தனம் பெற்று அன்னியனொருவனுக்குக் கொடுத்துவிட்டார். இவ்வாறே என்னையொழிய ஏனைய ஆறு கன்னியர்களையும் கொடுத்தனர். அது கண்டு, வருத்தமுற்ற இவர் விடயத்தில் தயவின் மிகுதியால் அடியேன் அந்தமாதாபிதாக்களை மறந்து வந்துவிட்டேன். வந்தவிடத்தில் இவரைப்பாம்பு தீண்டியது. ஆகவே "கலங்கவிழ்ந்த மீகாமனைப்போல்" கலங்குகின்றேன்! எனையரே! கடைக்கணித்துக்காத்தருளவேண்டுமென்று விண்ணப்பித்தாள். அதனைக்கேட்டருளிய பிள்ளையார், கருணைகூர்ந்து, அக்கன்னிகை துன்பமொழியவும், வணிகர் விஷந்தீர்ந்து பிழைக்கவும், திருவுள்ளஞ்செய்து தமது அமுதவாக்கினாலே "சடையாயெனுமால் சரணீயெனுமால், விடையா யெனுமால் வெருவாவிழுமால், மடையார்குவளை மலரும்மருகல் உடையாய்தகுமோவிவளுண்மெலிவே" என்னும்திருப்பதிகம் பாடியருளினார். உடனே தலைக்கேறியவிஷம் தீர்ந்து உயிர்பெற்றெழுந்தார். அடியார்களெல்லாம் பெருமகிழ்ச்சிகொண்டு ஹர! ஹர! என்று முழக்கஞ்செய்தார்கள். அப்பொழுது அக்கன்னிகை, பிள்ளையார்

திருவடியில்வணங்க; அவ்விருவருக்கும் திருமணம்செய்து, விடை கொடுத்து, அவர்களிடத்திற்கு அனுப்பிவிட்டருளினார். இது, ஆசிரியன்சமூகம் பெறின் எவ்வகையிழவு மொழிந்து பெறுதற்கரிய பெரும்பேறு பெறப்படுமென்பதுணர்த்துகின்றது.

பின்பு, பிள்ளையார் திருமருகலில் எழுந்தருளி யிருக்கும்போது, சிறுத்தொண்டதேவர் அங்கு எழுந்தருளிப் பிள்ளையாரைச் செங்காட்டங்குடிக்கு வந்தருளும்படி விண்ணப்பித்தார். அதற்குப்பிள்ளையார் திருவுளமிசைந்து, திருமருகற் பெருமான் திருவுளப்பாங்கு பெறவேண்டித்திருக்கூட்டத்தோடும் கோயிலை அடைந்து, தரிசிக்குங்காலையில், திருமருகலுடையார், திருச்செங்காட்டங்குடித்திருக்கணபதீச்சரத்திலமர்ந்தருளிய திருக்கோலத்தைத் தரிசிப்பித்தருளினார். அதனைப்பிள்ளையார்உள்ளமுருகஅன்போடுதரிசித்து, திருப்பதிகள்தோறு மிருக்கும்பெருமானார்கோலம்அனைத்தும்ஒன்றேயென்னும் உபாசனைத் திறத்தை அநுக்கிரகிக்கும் காரணமாக! "அங்கமும் வேதமும்" என்றெடுத்து "மருகனிலாவியமைந்தசொல்லாய்" "கணபதியீச்சரங்காமுறவே" என்று திருவினுத்திருப்பதிகம்பாடிஅங்கேசிலநாள்தங்கியிருந்துபின்பு, அங்குநின்றும்புறப்பட்டு, மற்றைய திருப்பதிகளைத்தரிசிக்கும்படிஎழுந்தருளும்போது, சிறுத்தொண்டதேவரும் உடன்வர! அவரைத்திருச்செங்காட்டங்குடிக்குஎழுந்தருளும்படிவிடைகொடுத்து, அனுப்பியருளி, தாம்திருப்புகலூருக்கு எழுந்தருளினார். அப்போது, அங்கிருந்தமுருகனார் அடியார் திருக்கூட்டத்தோடு மெதிர்கொள்ளச்சென்று, திருக்கோயில்வலம்வந்து, பணிந்து பதிகம்பாடி, அங்கே எழுந்தருளியிருக்கையில், திருவர்த்தமானீச்சரமுடையாரை வணங்கி, "ஈசனேறமர் கடவுள்" என்றெடுத்து, "முருகன்முப்போது செய்முடிமேல் வாசமாமலருடையார்" என்றுமுருகனார் திருத்தொண்டினைச் சிறப்பித்துத்திருப்பதிகம்பாடி, அங்கேஎழுந்தருளியிருந்தார்

அந்நாளில், திருநாவுக்கரசு சுவாமிகள், திருவாரூருக்கு எழுந்தருளி, புற்றிடங் கொண்டாரைத் தரிசித்து, திருப்புகலூரைத் தரிசிக்கும்படி வந்தருளினார். இம்மங்கலத் திருவார்த்தை கேட்டபோதே, பிள்ளையார் அடங்காத அன்பும் களிப்பும் பெருக எதிர்கொள்ளும்படி, திருத்தொண்டர் திருக்கூட்டத்தோடும் எல்லையைக்கடந்து வருகையில், அரசுகளும் பிள்ளையாரும், ஒருவரையொருவர் வந்தனை வழிபாடுசெய்து, தம்முள்நல்வரவுவினுவி மகிழ்ந்துபிள்ளையார், அரசுகளைநோக்கி, அப்பரை இங்கு யாம் அடையும் திருவருட் பேறும் உடையோமாயினேம். இனித் திருவாரூரைத் தரிசித்த பெருமை எத்தன்மைத்து அருள்செய்ய வேண்டும் என்று குறிப்பித்தருளினார். அதற்கு அரசுகளும், "முத்துவிதான

ம்'' என்ற திருப்பதிகத்தமிழ்ச்சுருதியால் திருவாரூரின் சிறப்பைத் திருவாய்மலர்ந்தருளினார். அதுகேட்டு, பிள்ளையார், அப்பரே! அடியேன் திருவாரூருக்குச் சென்று வணங்கி, உடனே இங்குவந்து, தேவரீரோடு இருப்பேன் என்று, கற்றூணத் தோணி யாண்டாருக்கு விண்ணப்பித்து, அவர் திருவுள்ளத்து இசைவுபெற்று, திருவாரூர் நோக்கிப் புறப்பட்டருளினார். அரசுகளும் பிரிவாற்றாது பிரிந்து, திருப்புகலூர்க்குச் சென்றருளினார், பின் பிள்ளையார், திருவிற்குடி வீரட்டானம்தரிசித்து, "பாடலனான்மறை" என்னும் பதிகம்பாடிப் பின் திருவாரூருக்குச் சமீபத்தில் செல்லுகையில் "உள்ளமோரிச்சை" என்றெடுத்து "ஆரூரடைவோமே" என்ற திருப்பாட்டு அருளிச்செய்து அத்திருவாரூரைத் தரிசித்தவுடனே "பருக்கையானை" என்னும் தமிழ்மறை திருவாய்மலர்ந்து, அத்திருவெல்லையை அடைந்து முத்துச்சிவிகைவிட்டிழிந்து, "சித்தந்தெளிவீர்கள்" என்னும்திருவிருக்குக்குறள்சாத்தி, பணிந்தெழுந்தருளினர். அப்போது, வீதிவிடங்கப்பெருமானார்திருவருளாணையால அங்குள்ளஎமபெருமக்கள், அத்தெய்வ நகரத்தைப் பூம்பந்தர், வாழை, கமுகு, பூரணகும்பம், முளைப்பாலிகை, கண்ணாடி, கொடி, சித்திரப்பட முதலியவற்றால் அலங்கரித்து மங்கலவாத்திய முழங்க; வேதகோஷம் மலிய; எதிர்கொண்டுவந்து, வணங்கினார்கள். ஆளுடைய பிள்ளையாரும் அவர்களைவணங்கி "அந்தமாயுலகாதியும்" என்றெடுத்து "எந்தைதானெனையென்று கொள்ளுங்கொலோ" என்ற திருநெறித் தமிழினையோதி, திருப்பூங்கோயிற்றிருவாயிலைப் பணிந்து, உள்ளேசென்று, தேவாசிரியத் திருமண்டபத்தைத் தொழுது, திருமாளிகை வலம் வந்து, திருவிமானத்தை நமஸ்கரித்து, புற்றிடங்கொண்டார் மஹாசந்நிதியை அடைந்து பலகாலுந் தெண்டனிட்டெழுந்து, அன்பினால் திருமேனிபுளகமுண்டாகக் கண்களி லின்பவெள்ளம் பெருகத் துதித்துப்பாடி ஆடி, அருட்போகமுழ்கித்தெளிந்துபுறம்வந்து,ஓர்திருமடஞ்செய்து எழுந்தருளினார். அந்நாளிலே, அத்திருவாரூரிலிருக்கும் அரனெறியென்னுந் திருக்கோயிலை அடைந்து, அகிலநாயகரைத் தரிசித்து, திருவலிவலம், திருக்கோளிலி முதலியவாக அடுத்துள்ள பலதிருப்பதிகளையும் வணங்கி, சிலகாலம் அங்கிருந்து, அரசுகளின்ஞாபகமிகுதியால், புறப்பட்டு, திருவெல்லைப்புறம்வந்து,"பவனமாய்ச் சோடையாய்" என்ற தமிழ்வேதத்தைஅருளிச்செய்து, திருப்பனையூருக்குச்சென்று, தரிசித்து, திருப்புகலூருக்கு எழுந்தருளினார். அப்போது அரசுகளும் முருகனாரும் ஏனைய அடியவர்களும் எதிர்கொள்ள; அவர்களோடும் பெருமான் திருக்கோயிலை யடைந்து பணிந்து, புறத்தேவந்து, முருகனார்திருமடத்தில் அவர்உபசரிக்க

எழுந்தருளியிருந்தார். அங்கே, திருநீலநக்க திருவடிகளும், சிறுத்தொண்டதேவரும் எழுந்தருள; அப்பெரியவர்கள் எல்லாரும் ஒருங்குகூடி, உலகின்கணுள்ள ஆன்மாக்களெல்லாம் உறுதியுணர்ந்து உய்யும்படி, சத்தியத் திருத்தொண்டினது இரகசிய வுண்மைகளைப் பற்றிக்கேட்டல் சிந்தித்தல் தெளிதல் என்பவற்றின் மரபு விளங்கச் சாதுசங்க விலக்கணத்தை வெளிப்படுத்தும் பொருட்டுத் தம்முள் அளவளாவி யிருந்தனர். பின்பு பிள்ளையார் மற்றைய திருப்பதிகளைத் தரிசிக்கத் திருவுளங்கொண்டு "குறிகலந்தவிசைபாடலினான்" என்ற திருப் பதிகம்பாடிப் புகலூருடையார் திருவருள் பெற்று, அங்குநின்றும் புறப்பட்டு, அரசுகளைப்பிரிந்து செல்ல மாட்டாது, முத்துச்சிவிகை பின்வர நடந்தருளுகையில், அப்பர், பிள்ளையார் திருமுகத்தை நோக்கி, ஐயரே! பெருமான் தேவரீருக்கு அனுக்கிரகித் தருளிய நித்திலயானத்தின்மீது எழுந்தருள வேண்டும் என்ன; அதுகேட்டருளிய பிள்ளையார், இது நம்மையுடையவர் திருவுளப் பாங்கானால், தேவரீர், எங்கு முன்னெழுந்தருளுகின்றதோ? அங்கு பின் வருவேன் என்று திருவாய்மலர்ந்தருளினார். அதற்கு அரசுகளுடன்பட்டருளி, அன்றுமுதல் உடன் செல்லுநாளெல்லாம் அவ்வாறே செல்லத்துணிந்து திருவம்பர்க்கு முன்னே எழுந்தருளினா. உடனே பிள்ளையாரும், அம்முத்துச் சிவிகையைப் பணிந்து ஏறியருளி, அப்பர் எங்கு எழுந்தருளியது என்று வினவிப்போய்த் திருவம்பர் என்னுந்திருப்பதியைத் தாமும் அடைந்தருளினார். அங்கு அரசுகளோடு மாகாளம் என்னும் திருக்கோயிலை யடைந்து பணிந்து திருப்பதிகம்பாடி, புறம்போந்து, திருமடஞ்செய்து சிலநாளிருந்து, கோச்செங்கட் சோழர்பிரான் திருப்பணிசெய்து முற்றிய பெருந்திருக் கோயிலையடைந்து, தரிசித்து, அச்சோழர் பெருமான் திருத்தொண்டைச் சிறப்பித்துத் திருப்பதிகமருளி, அங்கிருந்தும் புறப்பட்டு, அரசுகளோடு திருக்கடவூருக்கு எழுந்தளினார். அங்கு குங்கிலியக்கலயனார் அடியார்களோடும் எதிர்கொள்ளச் சென்று, திருவீரட்டானம் திருமயானம் என்னுந் திருக்கோயிலை வணங்கிப் பதிகம்பாடியருளி, குங்கிலியக்கலயர் திருமடத்தில் எழுந்தருளியிருந்தனர். பின்பு, திருவாக்கூர், திருமீயச்சூர், திருப்பாம்புரம், என்னும் திருப்பதிகளையடைந்து, தரிசித்துத் திருவீழிமிழலைக்கு எழுந்தருளினார்.

அங்கே அந்தணரும் அடியவரும் எதிர்கொள்ள அரசுகளோடு "அரையார் விரிகோவணம்" என்னும் தமிழ்வேதமோதி, திருமால்செய்த விண்ணிழிவிமானத்தை யடைந்து, உடையவரை வலம்வந்துபணிந்து, "சடையார்புனலுடையான்" என்னும் திருத்தமிழ்பாடி அன்புபெருக உள்குழைந்து, துதித்து, அரிதுபுறம்

போந்து, அரசுகள் திருமதிற்புறத்துள்ளதோர் திருமடத்திலெழுந்
தருளினார். பிள்ளையார் திருக்கோபுரத்துக்கு வடதிசைக்கணுள்ள
தோர் திருமடத்தி லெழுந்தருளி யிருந்தார். அங்கே, திருப்பேணு
பெருந்துறை, திலதைப்பதி, முதலிய திருப்பதிகளைத் தரிசித்து
வந்திருக்கும் நாளில், சீகாழியி லுள்ளவர்கள், பிள்ளையாரை நெடுங்
காலம் பிரிந்தவாற்றாமையாலே தரிசிக்க வேண்டுமென்று, திருத்
தோணியப்பரை வணங்கி யருள் விடை பெற்றுத் திருவீழிமிழலை
க்கு வந்தார்கள். அதுகேட்டு, அங்குள்ள பெரியோர்கள் எதிர்
கொண்டு அழைத்துவர அவர்கள் விண்ணிழிவிமானஞ் சென்று
கும்பிட்டு, திருமடத்திற்குவந்து பிள்ளையாரைத் தரிசித்து, சீகா
ழிக்கு எழுந்தருள வேண்டுமென்று விண்ணப்பித்தார்கள். அது
கேட்டுப் பிள்ளையார் அவ்வாறே நாளைத்தினம் திருவீழிமிழலை
யுடையார் திருவாணை பெற்றுக்கொண்டு போகலாம் என்று உபசரி
த்து, விருந்தமைத் தருளினார். அன்றிரவு கனவின்கண்ணே பிள்ளை
யார்க்குத் திருத்தோணி யுடையார் தமது திருவருட் கோலம்
வெளிப்படவந்துகாட்டி, அங்கு திருத்தோணியில் அமர்ந்த காட்சி
யிங்கு விண்ணிழிவிமானத்துட் காட்டுவோம் காண்க என்று எழு
ந்தருளினார். உடனே பிள்ளையார் களிப்பும் ஆராமையும் பெருக
வுணர்ந்தருளி இருகரமும் உச்சிமேலேறக் குவித்து, விழிவெள்
ளங் கொள்ள, விண்ணிழி விமானஞ்சென்று, அங்கு கட்டளையா
னபடி, திருத்தோணிக்காட்சி வெளிப்பட | தரிசித்து, அவ்வரு
மைப்பாட்டை "மையமர் பூங்குழல்" என்றெடுத்து "மங்கை
யோடும்" "புகலிநிலாவிய புண்ணியனே," "எனதுரை தனதுரையாக"... "எனகொல் சொல்
லாய்," "மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே" என்ற தெய்வத்
தமிழ் திருவாய்மலர்ந்தருளி, வணங்கிப் புறத்தேவந்து, சீகாழிப்
பெரியோர்களை நோக்கி, எம்பெருமான் என்னம்மையோடுங் கூடி
யிருக்குந் திருப்பதிகளை யெல்லாம் தரிசிக்க வேண்டுமென்ற என்
சிறுவிண்ணப்பம் திருவுள்ளஞ்செய்து, இங்கேதானே அத்திருத்
தோணி வீற்றிருந்த திருக்கோலத்தைத் தரிசிப்பித்ததால், நீங்கள்
சீகாழிக்கே எழுந்தருளவேண்டும் என்று குறிப்பித் தருளினார்.
அதுகேட்டு, அப்பெருமக்கள் பிள்ளையாரை வணங்கி, சீகாழியடை
ந்தார்கள். அந்நாளில், மழையில்லாமல் நதிப்பிரவாகமுங் குறை
ந்து, சீவகோடிகள் பசியால் வருத்தப்பட, தேவர்களுக்கும் நித்த
நைமித்திகங்கள் நடவாமற்படி க்ஷாமகாலம் வந்தது. அதுகண்டு,
பிள்ளையாரும் அரசுகளும், இவ்வுலகத்திற் சிவனடியார்களுக்கும்
கவலை வருமோ? என்று திருவுள்ளத்திற் கொண்டருளினார்கள்.
அன்றிரவில், மண், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன்,
ஆன்மா, என்னும் அட்டமூர்த்தமும் திருமேனியாக வுடைய எம்

பெருமான், அவ்வாசிரிய மூர்த்திகளிருவர் திருக்கனவிலும் தனித்தனி தோன்றி, காலநடையின்படி இவ்வுலகில் வினை இயல்பினாலே வந்த பசிநோய் உங்களை வருத்தாவிட்டாலும் ஏனைய அடியார்களைத் துன்பஞ்செய்யாதபடி, நமது திருவிமான பீடத்துக் கிழக்கும் மேற்கும் நித்தம், ஒவ்வொரு காசு வைப்போம்; அதனைப்பெற்று மஹேசுவரபூசையைக் குறைவற நடத்துவீர்களாக. இப்பஞ்சகால மொழிந்தால் நின்றுவிடுமென்று அருளிச் செய்தார்.

உடனே பிள்ளையார் உணர்ந்தெழுந்தருளி, எம்மையுடையார் திருவருளிருந்தவாறு இதுவோ? எனறு திருவருளைச் சிந்தித்து அரசுகளோடும் திருக்கோயிலை அடைந்துவலம்வரும்போது, சந்நிதிக்கு எதிரிலுள்ள பலிபீடத்தில் படிக்காசு ஒன்று இருககக்கண்டார். உடனே அதைத்தொழுதுஎடுத்துக் களிப்போடுதிருமடஞ்சென்று, வேண்டும் உபகரணங்களைத் தருவித்து, அடியார்கள் யாவரும் விருந்துண்ண, எழுந்தருள்க என்று பறையறைவித்து, நெய்யாறு பாலாறாகப் பெருக அறுசுவையோடுங் கூடிய புனிதமாகிய திருவமுது ஊட்டி அருளினார். அரசுகள் மேற்றிசைப் பீடத்துப்பெற்று அங்ஙனம் செய்தருளினார். இவ்வாறு, அவ்விரண்டு ஆசிரிய மூர்த்திகளும் எழுந்தருளி யிருந்தார்கள். இதனால், உலகத்தில் தருமமாவது, சிவகாருணியம் ஒன்றே என்றும் அதற்கு முதல் அங்கமாயுள்ளது அன்னம் இடுதலேயென்றும், அதனைமுத்தியை விரும்பினார் யாவரும் கடைப்பிடித்துச் செய்யவேண்டும் என்றும், எல்லாம்வல்ல ஆசிரிய மூர்த்திகளே ஆயினும் அம்மஹேசுவர பூசையை ஒருதலையாக நடத்தவேண்டும் என்றும், இவ்வொழுக்கம் பூண்டார்க்கு யாதொரு குறையும்வராது, ஒருக்கால் வருவதுபோற் றோன்றினும், கடவுளேமுன்னின்று ஒழித்தருளுவர் என்றும் வெளிப்படுகின்றது. அங்ஙனமிருக்க வாகினுக்கு அரசாகிய அப்பர் திருமடத்தில், திருத்தொண்டர்கள், காலம் தாழ்க்காமல் அமுது செய்தருளக் கண்டு பிள்ளையார் தமது திருமடத்தில், திருவமுது சமைக்கின்ற அடியார்களை நோக்கி இத்திருமடத்தில் இவ்வாறு, காலம் அதிக்கிரமிக்கிறதற்குக் காரணம் யாது? என்று திருவாய் மலர்ந்தருளினார். அதுகேட்ட அப்பரிசனர்கள் வணங்கி, எம்பெருமானே அடியோங்கள் ஒன்றும் அறியோம்; உடையவரிடத்து, பெறும்படிக்காசுகொண்டு சென்றால் அதற்கு வாசி (வட்டம்) கேட்கின்றனர். அரசுகள் பெற்றருளும் படிக்காசைக் கண்டவுடனே விரும்பிக்கொள்ளுகின்றார்கள். இவ்வளவேகாலதாமசம் ஆவதற்கு இடமாகின்றது என்று விண்ணப்பித்தார்கள். அதுகேட்டுப் பிள்ளையார் நமது அப்பர் பெற்றரு

ளுங் காசுவாசியில்லாமற் செல்ல இக்காசுமாத்திரம் வாசிவேண்டுதலின் காரணம், அவர் மனமொழிமெய்யென்னும் மூன்று காரணத்தானும் ஒத்ததிருத்தொண்டு செய்தலே என்று திருவுள்ளத்து எண்ணி, இனியக்குறைவை நீக்கும்படி, எம்பெருமானுக்கு விண்ணப்பிப்பேன் என்று, மறுநாள் திருக்கோயிலுக்குச் சென்று, "வாசிதீரவே, காசுநல்கிடீர், மாசின்மிழலையீர், ஏசலில்லையே." என்னும் திருப்பதிகத்தைத் திருவாய்மலர்ந்தருளினார், அதுமுதல் பெருமானார் வாசியற்ற காசுகொடுத்தருளிவந்தார். அக்காசினைக் கடைவீதியிற் கொண்டுபோனவுடனே நல்லதென்று தலைமேற்கொண்டு, வேண்டுவனகொடுத்து வந்தார்கள். அடியார்கள் மகேசுவரபூசையும் தக்க காலத்தில் நடந்துவந்தது. இதனால், எத்துணைச்சிறந்தோராயினும் முயற்சியளவே பயன்பெறுவார்கள் என்பதும், இறைவர் நடுநிலைத்திறம் இது வென்பதும் பெறப்படுகின்றது.

இனி, அப்பரமாசிரியர்கள் இருவரும்பெற்றருளிய படிக்காசினால் சேகரிக்கப்பட்ட பண்டங்கள், ஆயிரவாயிரவராக வருந்திருத்தொண்டர் திருக்கூட்டம் அனைத்தினுக்கும் யாதொரு குறைவுமின்றி உபகரிக்கப் போதுமானதாகச் சிவானுக்கிரகத்தால் வளர்ந்து நின்றன. இவ்வாறு, உலகமுழுதும் மழைபெய்து சமஸ்த சீவகோடிகளும் க்ஷேமம் அடைகிறவரையில் இம்மகேசுவர பூசை மகோற்சவத்தை நடத்தியருளிப் பின்பு, பிள்ளையார் அரசுகளோடு தம்பெருமான் அருள்விடைபெற்று, மற்றைய திருப்பதிகளைத் தரிசிக்கும்படிச் சென்று, திருவாஞ்சியம், திருத்தலையாலங்காடு, திருப்பெருவேளூர், திருச்சாத்தங்குடி திருக்கரவீரம், திருவிளமர், திருவாரூர், திருக்காறாயில், திருத்தேவூர், திருநெல்லிக்கா, திருக்கைச்சினம், திருத்தெங்கூர், திருக்கொள்ளிக்காடு, திருக்கோட்டூர், திருவெண்டுறை, திருத்தண்டலை நீணெறி, திருக்களர், முதலிய திருப்பதிகளை எல்லாம்தரிசித்துத் தமிழ்வேதத்தை வெளிபெறவிரித்து, திருமறைக் காட்டிற்கு எழுந்தருளினார்கள். இச்சுபவார்த்தையை அங்குள்ள அடியவர்கள் கேள்வியுற்று, [illegible] திருநகரத்தைக் கோலம்செய்து, அட்டமங்கலம், வாத்தியகோஷத்தோடு வந்து, முன்னர் வாகீசத்திருவடிகளை வணங்கி எழுந்தருளப்பண்ணி, பின்னர் பிள்ளையாரை எதிர்கொண்டு வணங்கி அழைத்து வந்தார்கள். இவ்வாறு, அப்பரும், பிள்ளையாரும், அத்திருமறைக்காட்டுத் திருவீதியில் எழுந்தருளும்போது, வேதமுனிவரும் ஏனைய பெரியோர்களும், தம்மைமறந்த மகிழ்ச்சியால், ஹர! ஹர! வென்று பேரொலி செய்தார்கள். இத்தகைய சைவசாம்பிராச்சிய சம்பிரமத்தோடு திருவீதிகடந்து, திவ்வியாலயத்தை

அடைந்து, கோபுரத்தை வணங்கி, உட்புகுந்து, திருமுற்றத்தை வலம்வந்து, முன்னாளிலே, வேதங்கள் அருச்சித்து, திருக்காப்புச் செய்த திருவாயிலுக்குச் சமீபத்தில் எழுந்தருளினார்கள். அப்போது, அங்குள்ள பெரியோர்கள், அத்திருவாயிற் றிருக்கதவு வேதத்தாற் காப்புசெய்யப்பட்ட பின்பு, அன்புடைய அடியார்களால் காப்புநீக்கித் திறக்கக் கூடாமையால், இன்றளவும், வேறு ஒருதிருவாயில் அமைத்து, போக்குவரவு வழக்கஞ்செய்து வருந் தன்மை விண்ணப்பஞ் செய்யக் கேட்டருளி, பிள்ளையார் அரசுகளை நோக்கி, அப்பரே! வேதாரணியரை நாம் எவ்வகையாலும் எதிர்முகமாகிய திருவாயிலின் வழியறிந்து, புகுந்தே தரிசிக்கவேண்டுமாதலால், தேவரீரே! அத்திருக்காப்பு நீக்கித் திறக்கும்படி, மெய்த்தமிழ் வேதத்தை யருளிச்செய்ய வேண்டுமென்றார். அதற்கு அரசுகள், கட்டளையிட்டருளிய திருப்பணி அடியேன் செய்கின்றேன் என்று திருப்பதிகத்தைத் திருவாய்மலர்ந்தருள, அப்பதிகத் திருப்பாட்டுப் பத்துவரையினும் திருக்கதவு திறவாது இருக்கவே அரசுகள் திருவுள்ளம் நைந்து உருகி "இரக்கம் ஒன்றிலீர்" என்று திருக்கடைக்காப்பில் அரிது விண்ணப்பிக்கத் திருக்கதவு காப்பு நீங்கித் திறந்தது. தேவர் முனிவர் சிவனடியார்கள் பெருமகிழ்ச்சியால் ஆரவாரித்தார்கள். இது பூட்டப்பட்ட அறை, பேழை முதலியவற்றினைத் திறக்க விரும்பின் முன்பூட்டிய திறவுகோலன்றி வேறொன்றால் திறவாது போல, வேதத்தாற் காப்பிட்ட திருக்கதவு அதேவேதத்திறவுகோலன்றி திறவாமையின் தடைபட்டிருந்து, தமிழ்வேதத திறவுகோல் வந்தவழி முன்னெடுநாளடைபட்டிருந்த அருமைநமக்குத் தோற்றச்சிறிதுகாலந்தாழ்த்துத்திறந்தவாமென் றுணர்க. இதனால் வடமொழிக்கணுள்ள வேதமும் தமிழ்மொழிக்கணுள்ள வேதமும் சொல்லாலும் சுரத்தாலும்பொருளாலும் தம்முள்ளொத்தன வென் றுணர்த்தி, வேறென் றுணர்வார்மயக்கம்பற்றற வொழித்து நின்றவாறு காண்க.

அதன்பின்பு, அரசுகளைப் பிள்ளையார் பணிந்தருளினார். அரசுகளும் பிள்ளையாரை எதிர்பணிந் தருளினார். உடனே அவ்விருவரும் அவ்வழியாற் பெருமான் சந்நிதிகு எழுந்தருளி, தாயினுமினியானைத் தரிசித்து, கண்ணீருங் கம்பலையுமாக ஆடிப் பாடித் துதித்துவாழ்த்தி, வணங்கி, அருள்வெள்ளந் திளைத்து, ஆனந்த பரவசராய் நின்று தெளிந்து, அரிதிற் புறம்பே வந்தருளினார்கள். அப்போது, அரசுகள், பிள்ளையாரைநோக்கி, எம்மையரே! இங்கு திறந்தகதவு, மறுபடியும் அடைக்கவும் திறக்கவுமான வழக்கத்தின் கண்ணே வரும்படி, தேவரீர் அடைக்கப்பாடி யருளவேண்டுமென்று குறிப்பித்தருளினார். அதுகேட்டுப் பிள்ளையாரும் திரு

வுள்ளமிசைந்து, "சதுரம்மறைதான் றுதிசெய்து வணங்கும், மது
ரம்பொழில் சூழ்மறைக்காட்டுறைமைந்தா, விது நன்கிறைவைத்
தருள்செய்த வெனக்குன், கதவந்திருக்காப்புக்கொளுங் கருத்தா
லே." என்னும் திருப்பதிகம்பாடி யருளினார். அங்ஙனம் எடுத்த
திருப்பாட்டின் கண்ணே அத்திருக்கதவுமீட்டும் அடைபட்டது.
அதுகண்டு பிள்ளையார் தொழுது திருப்பதிகத்தை முடித்தருளி
னார். பூமழைபொழிந்தது. யாவரும் வேதவடிவாகிய அவ்விருவ
ரையும் வணங்கி வாழ்த்தினார்கள். அக்குருமணிகள் இருவரும் எதிர்
வணங்கி எல்லாரும் பெருந்திருவிழாக் கொண்டாடும்படி, திரும
டஞ்செய்து அங்கு எழுந்தருளியிருந்தார்கள். அரசுகள் திருமடத்
திற்கெழுந்தருளிய பின்பு, அங்குபெருமான் திருவருளைநாடி, அருள்
யோக நித்திரையி லிருக்கும்போது, நாதவடிவாகிய சிவபெரு
மான் ஓர் சைவவேடத்தராய் எழுந்தருளி திருவாய்மூரி லிருப்
போம் அங்குவாவென்று சொல்லி எழுந்தருளினார். உடனே அர
சுகள் உணர்ந்தெழுந்து இருகரங்களையுங் குவித்து அஞ்சலி அத்த
ராய் விரைவோடு தொழுது பின்சென்றருளினார். அப்போது, ஆளு
டையபெருமான் அரசுகளுக்குச் சமீபிப்பவர்போற் காட்டித் தூர
த்தே சென்றருளினார். உடனே பிள்ளையார் அப்பர் எங்கு எழுந்
தருளியதென்று கேட்டருள அருகிலிருந்த திருத்தொண்டர்கள்
திருவாய்மூருக்கு எழுந்தருளியது என்று கூறினார்கள். அதுகேட்
டுப் பிள்ளையார் எழுந்தருளியகாரணம் யாது? என்று திருவுள்ளத்
திற் சங்கித்து, தாமும் அங்கு எழுந்தருளினார். அங்கே பெருந்
தேவியாரோடு நம்பெருமான் திருமருளாடல் தரிசிப்பித் தருளப்
பிள்ளையார்தரிசித்து, "தளரிளவளரெனவுமைபாட" என்னும்திரு
ப்பதிகம்பாடி, அரசுகளோடுதிருவாய்மூருக்குஎழுந்தருளி வணங்
கினார். பின்பு சிலநாள் அங்கு அமர்ந்தருளிமீட்டும் பிள்ளையாரும்
அரசுகளும் திருமறைக்காட்டுக்கு எழுந்தருளி, தம்பெருமானைக்
காலங்கள்தோறும் கும்பிட்டு வீற்றிருந்தருளினார்கள்.

இங்ஙனம் எம்பெருமக்கள் இருவரும் எழுந்தருளியிருக்கும்
நாளில், தெற்கேபாண்டிதேசத்தில் நமதுவேதவொழுக்கத்திற்குப்
புறம்பாய்மாறுபட்டசமணசமயம் அதிகரித்து, அந்நாடுமுழுவதும்
கலக்கத்தைஅடைந்தது. அப்போது, அரசுசெலுத்திய கூன்பாண்
டியராஜனும் முன் வினைவசத்தால் அச்சமண வொழுக்கத்தைத்
தருமமென்றுநினைத்து, அவ்வழியில்நின்றார். அதனாலே, சைவத்
தினது உண்மைத் தன்மையை விளக்கும் வைதிகவொழுக்கவழக்
கம்மாறியொழிந்து, பழுதுவிளைகின்ற வேறுமார்க்கவழக்கம்தலைப்
பட்டது. அந்நாளில் அப்பாண்டியராஜன் கடைத்தேறும்படிவந்
த சோழமகாராஜன் செல்வத்திருமகள் பாண்டிமாதேவியாரும்,

அமைச்சர்கள் நாயகம் குலச்சிறையாரும், ஆகிய அவ்விருவர்மாத்திரம் அச்சைவநெறியை அரசனறியாதபடி, வழுவாதுகாத்து, தங்கள் தமிழ்நாடுஅடைந்த கெடுதிக்குமனம் புழுங்கிச் சிந்தித்திருக்கையில், உலகமெங்கும்வைதிகஉண்மையாகிய சைவசன்மார்க்கத்தைவிளக்கவந்த பிள்ளையார்திருமறைக்காட்டில் எழுந்தருளியிருக்கும் சுபசரித்திரத்தைத்தாங்கள் பூர்வஞ்செய்த புண்ணியபலத்தினால் கேள்விப்பட்டார்கள். உடனேபெறுதற்கரிய பேறுபெற்றவர்களைப்போல் அளவற்றமகிழ்ச்சியோடு, தாங்கள் தூரத்தேயிருந்தும், அருகுசென்று தரிசித்தவர்களையொத்து, அன்புமீதூரஅவ் வேதாரணியத்திற்குத் தக்க சிலபரிசனங்களை அனுப்பினார்கள். அவர்களும், திருமறைக்காடுவந்து, திருமடத்தையடைந்து, தங்கள்வரவைவாயில் காப்பாளர்க்குச்சொல்லிவிட்டார்கள். அவ்வடியவர்கள் பிள்ளையார்சந்நிதியில வணங்கிநின்று அவர்கள் வரவை விண்ணப்பித்தபோது, அழைத்துவரும்படி, கட்டளையிட்டருள, அவ்வாயில் காவலடியவர்கள் கூவினார்கள். அதுகேட்டு அம்மதுரைத் திருநகராரும்வந்து, பணிந்துநின்றபோது, பிள்ளையார் நோக்கி, நமது, மாதுஸ்ரீ-மானியாரும், குலச்சிறையடிகளும் சுகமோ? என்று வினவ, அவ்வரச பரிசனங்களும் க்ஷேமலாபங்கூறித் தொழுதுநின்று, எம்பெருமானே! எங்களன்னை மங்கையர்க் கரசியாரும், குலச்சிறையடிகளாரும் தங்கள் கன்னிநாடு முழுவதும் சமண்மூடி, சைவமருகி, அரசனும் அச்சமயமயக்கத்தில் அழுந்திக் கிடத்தலை, சந்நிதியில் விண்ணப்பிக்கவேண்டி எங்களையேவினர் என்று விண்ணப்பித்தார்கள். அப்போது, அங்கிருந்த அடியார்களும் பிள்ளையாரை வணங்கி, சிவநேசமறியாத சமணர்களை வாதில்வென்று, எங்கும் வேதவிதிவழக்கமுந் திருவெண்ணீற்றொளி விளக்கமுஞ் செய்தருளும்படித் திருவுள்ளஞ் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்.

அதுகேட்டுப் பிள்ளையார் திருவுளமுவந்து, அரசுகளோடும் ஆலயத்துக்குச்சென்று, பெருமானைவணங்கி யருள்விடைபெற்றுத் திருமுற்றத்தைஅடைந்து பாண்டிமாதேவியாரும் மந்திரியாரும் வரவிட்ட வார்த்தையைத் தெரிவித்து, தாம் அங்கு எழுந்தருளுவதற்கு நிச்சயித்தருளினார். அப்போது, அரசுகள் பிள்ளையாரை நோக்கி, அச்சமணர்கள் வஞ்சனைக்கு அஞ்சாதவர்கள்; அவர்கள் கொடுமைக்கும் எல்லையில்லை. இக்குழந்தைத் திருமேனி தாங்காதுமன்றி, தேவரீர்க்குக் கிரகபலனும் தீயவாயிருக்கின்றன; ஆதலால், எழுந்தருள உடன்படுவது அமையாது என்றருளினர். அதுகேட்டுப் பிள்ளையார், நம்பெருமான் திருவடியைத் தொழுமவர்களுக்கு யாதொருபழுதும் வாராதென்று "வேயுறுதோளிபங்கன் விடமுண்

டகண்டன் மிகநல்லவீணைதடவி; மாசறுதிங்கள் கங்கைமுடிமே
லணிந்தெனுளமே புகுந்தவதனால், ஞாயிறு திங்கள் செவ்வாய்
புதன் வியாழம் வெள்ளி சனி பாம்பிரண்டுமுடனே, யாசறு நல்ல
நல்லவவைநல்லநல்லவடியா ரவர்க்குமிகவே'' என்னும் திருப்பதி
கம்பாடி யருளினார். அதுகேட் டரசுகள், திருவுளஞ்செய்துதாமும்
முன்எழுந்தருள யத்தனப்பட்டார். அப்போது, பிள்ளையார், இரு
கரமும் குவித்து அஞ்சலிசெய்து, எம்முடையீர்! தேவரீர் இச்
சோழமண்டலத்திற்றானே இருந்தருளவேண்டுமென்று தடுத்தரு
ளினார். அரசுகளும் அதற்குமிகவும் அருமையாக இசைந்தருள;
உடனே பிள்ளையார்மீண்டும் வேதவனமுடையாரை அடைந்து,
தொழுதுபுறம்வந்து, வாகீசத்திருவடிகளைவணங்கி விடைபெற்று
எழுந்தருளினார். ஆளுடையரசுகள் அவ்விடத்திற் றானே இருந்
தருளினார். இப்பதிகம் வினைவடிவாய் நின்று அனைவரையும் ஆட்டு
விக்கும் கோளின்வலிதொலைகும் வகையும் உபாயமும் கூறிற்று.

பின்பு, பிள்ளையார், முத்துச்சிவிகைமீது ஸ்ரீபஞ்சாக்கரத்தை
யோதி, சிவபெருமானைதியானித்து, அடியார்கள் துதிக்க, வேதம்
முழங்க, மங்கலவாதத்தியம் ஆரவாரிக்க, கொடிகள்முதலியன நெ
ருங்கப்புறப்பட்டு, பலதிருப்பதிகளையும் தரிசித்து, திருஅகத்தி
யான்பள்ளி, திருக்கோடிகுழகர், திருக்கடிக்குளம், திருவிடும்பாவ
னம், திருவுசாத்தானம், முதலிபதலங்களை வணங்கிச் சென்று,
பாலை, நெய்தல் கடந்து, புனனாட்டுத்தென்மேற்றிசையின் மருத
முல்லைத்திணைதாண்டி பாண்டிநாட்டினை அடைந்து, திருக்கொடுங்
குன்றத்தைத் தரிசித்து, திருமதுரைக்குச்சமீபமாக எழுந்தருளி
னார். பிள்ளையார் இவ்வாறு எழுந்தருளும்போது "யானைமலை' முத
லிய எண்வகைக் குன்றத்தின்கண்ணுள்ள சமணாசிரியர் எண்ணா
யிரவர்க்கும் அழிவைமுன்னே தெரிவிக்கின்றகூகை ஆந்தைகலக
மிட்டுக் கூவுதல்முதலிய கெட்டசகுநங்களும், இடக்கண் இடத்
தோள்துடித்தல், கால்தவறல், வாய்புலாந்து குழறல், கைப்பீலி
குண்டிகை நழுவிவிழுதல், முதலியதீக்குறிகளும், தஞ்சமயத்திற்
கேமாறாகியகொலை, கோபம், பொறாமை, பொய், வஞ்சம், கொடு
மை, தயவில்லாமை முதலிய தீயவொழுக்கங்களும், தீயகுணங்
களும் உண்டாய், அடக்கம் கொல்லாமை சத்தியம்முதலிய தருமங்
களில் சிந்தையொழிய, அசோகமரமுறிதல், அருகன்மேல் விழு
தல், முக்குடை அற்றுவிழுதல், அடிகண்மார் கழுவேறுதல், தெ
ன்றிசைநோக்கிச் செல்லுதல், எண்ணெய்த் தலையோடுலாவுதல்,
அரசனுக்குத் தழல்நோய் தீண்டல்முதலிய பலதீக்குறிகளும்
உண்டாயின. அப்போது அவர்கள் அதிக அச்சத்தோடும் திரு
மதுராநகரத்திற்கு வந்துகூடி, ஒருவர்க்கொருவர் கண்டசகுனம்

குறிகள் முதலியவற்றைச்சொல்லித் துக்கித்துநின்றார்கள். வளவர்பெருமான் திருமகள்பாண்டிமா தேவியார்க்கும் மந்திரிகுலச்சிறைவள்ளலாருக்கும் மேலும்மேலும் நல்லசகுனமும் குறிகளும் களுக்களும் உண்டாயின. அவற்றைக்கண்டு அவர்கள் பெருங்களிகொண்டு பிள்ளையார் தங்கள் திருநகருக்கு அணித்தாகும் சோபனமொழிகேட்டவுடனே அவ்வார்த்தையை வந்து சொன்னவர்களுக்கெல்லாம் ஆடைஆபரணமுதலிய பலபரிசுகளைச்செய்து, தம்மைத்தாங்கள் அறியாதவர்களாயினார்கள். அப்போது, மந்திரியார் வந்து, மானியார்திருவடிகளில் வணங்கிநிற்க, அவரை அம்மை நோக்கி நீர் நம்பெருமான் ஞானபோனகரை எதிர்கொள்ளும் என்று கட்டளையிட்டருளினார். மந்திரியாரும், இக்காரியம் நமது அரசர்க்குநன்மை விளைப்பதேயென்று எண்ணி, அரசியாரைத் தொழுது எதிர்சென்றார். மங்கையர்க் கரசியாரும், திருவாலவாயுடையாரைவணங்கவென்று அரசனுக்குத் தெரிவித்து, தமதுபரிசனங்களோடுசென்று, ஸ்ரீமீனாக்ஷிமனோகரரைத் தரிசித்து, அங்குதானே பிள்ளையார் நல்வரவு எதிர்நோக்கி யிருந்தார்.

அப்போது சமஸ்தமங்களவாத்தியமும் முழங்கவும் வேதியர்கள் வேதபாராயணமலிவும், ஏனையடியவர்கள் ஹரா! ஹரா! முழக்கஞ்செய்யவும், இளந்தென்றல் வீசவும், திருவெண்ணீற்றின் பிரகாசம் திசைகளெல்லாம் விளங்கும்படி அன்பர்திருக்கூட்டம் திரண்டு உலகங்கள் செய்த புண்ணியங்கள் ஒன்றுகூடிப் பாவங்களையொழிக்கப் படையெடுத்து வந்ததுபோலும் வரவும், அமண் அஞ்சியோடவும், சைவம் தமிழ்நாடுமுழுவதும் பரவவும் திருச்சின்னம் தாரைகாளம் எல்லாம் "பரசமயகோளரிவந்தான்" என்று பணிமாறவும், முத்துச்சிவிகைமீது முத்துக்குடை நிழற்றப் பிள்ளையார் எழுந்தருளும்போது, அத்திருக்காள ஓசையை அமைச்சர் பெருமான் குலச்சிறையார் கேட்டு, தேவாமுதுண்ணப்பெற்றவரினும் மிகக்களித்து, அங்கிலேயிற்றானே நமஸ்காரம்செய்து அஞ்சலிசெய்தகைகள் தலைமேலேறவைத்தபடியே விரைவோடுஞ் சென்று, பிள்ளையாருடன் எழுந்தருளிய அடியார்களாகிய தவக்கடலைக்கண்டு, கண்டவிடத்திற்றானே தொழுது, அருகிற்சென்று நிலத்தின்மேற் பணிந்திருந்தார். அப்போது, அங்குள்ளார் பணிந்த குலச்சிறை யடிகள் மீண்டுமேலெழாததுகண்டு, பிள்ளைப்பெருமான் சந்நிதி அடைந்து தொழுது பாண்டியனார் அமைச்சர் குலச்சிறையார் எழுந்தருளினார்என்று விண்ணப்பித்தார்கள் அதுகேட்டவுடனே பிள்ளையார் சிவிகைவிட்டிழிந்து, குலச்சிறையார் பணிந்து கிடக்கும் இடத்தை அடைந்து, அவரது திருக்கரங்களைத் தமது அருமைக்குழந்தைத் திருக்காஞ்சாத்தி எடுத்தருளினார். அப்போ

து, குலச்சிறையார் கைதொழுது பணிவோடுநின்றருளினர். அங்
குபிள்ளையார் கருணையோடும் அவரை உற்றுநோக்கி, ஐயரே! சோ
ழர்பெருமான்திருமகளாருக்கும் உமக்கும் நம்பெருமான்திருவருள்
மேலும்மேலும் பெருகுவது தக்கவாறேயென்று திருவாய்மலர்ந்த
ருளினர். அதுகேட்டு குலச்சிறையடிகள், எம்பெருமானே! இப்
போது இங்குதிருவடிச்சந்நிதியைத் தரிசிக்கப்பெற்றுக் கொண்டதா
ஞல், முன்கழிந்த காலத்திலும் இனிவரும் காலத்திலும், எய்தற்
கரிய பெருந்திருவருளுடையராயினேம்:இந்நாடும் அரசரும்பிழை
த்துச் சைவம் விளங்கும் மேன்மையும் பெற்றனம். மங்கையர்க்
கரசியாரும், எம்பெருமான் எழுந்தருளப்பெற்ற பேற்றையடைந்
தவராய், நமதுபெருவாழ்வு இங்கு எழுந்தருளியபடியால் நீர்எதிர்
போய் வணங்குமென்று கட்டளையிட்டருளினர் என்று விண்ணப்
பித்துத் தொழுதுநின்றார். அதற்குப்பிள்ளைப்பெருமான் இனிய
மொழிகள் பலசொல்லி, தலையளிசெய்து, எழுந்தருளும்பொழுது,
திருமதுராநகரம் எதிரேதோன்றப், பிள்ளையார், நம்பெருமான்
றிருவாலவாய் எம்மருங்கு உள்ளது என்று வினவியருள, அருகிரு
ந்த பெரியோர்கள், அதுதானென்று சுட்டிக்காட்டினர்கள். உட
னே பிள்ளையார் இரண்டு திருக்கரமலரையுஞ்சேரக்குவித்து, நம
ஸ்காரஞ்செய்து, "மங்கையர்க்கரசி" என்றெடுத்து, இருபெருந்
தொண்டர்களாகிய மானியார் மந்திரியார் திருத் தொண்டினைச்
சிறப்பித்து, திருப்பதிகம் பாடியருளினர். பின்பு, திருக்கோயிலை
அடைந்து, செலவக் கோபுரத்தைவணங்கி, (திரணபத்திமாளிகை
யை)வலம்வந்து, மந்திரியாரோடும் சந்நிதிஅடைந்து ஆராவமு
தப் பேரழகரைத் தரிசித்து, அன்பிற்கண்ணீ ராருகப் பெருக
மெய்ம்மயிர் பொடிப்பக்கம்பித்து, உரைகுழற உதடு பதறக் குட
ந்தம்பட்டுக்கூத்தாடி "நீலமாமிடற் றாலவாயிலான்," என்னுந்
தமிழ்த் திருவிருக்குக்குறள்சாத்தி, தலைச்சங்கப் பெரும்புலவராகிய
எங்கள் சொக்கப்பெருமான் திருச்செவிக்கு ஏற்பித்துப் பரவசப்
பட்டு அருட்போகந் திளைத்துத் தெளிந்து, வணங்கிப் பின் திரு
முற்றத்திற்கு எழுந்தருளினர். அப்போது சோமசுந்தரப்பிரானை
வணங்குவதற்கு எதிர்போந்து ஒதுங்கிநின்ற கற்புக்கரசியாகிய
மானியென்னம்மை முன்வந்தனர். அத்தருணத்தில் அருகிருந்த
மந்திரியார் பிள்ளையாரைவணங்கி, உச்சிமேற்குவித்த பொற்றொ
டிக்கையையுடைய விவரே எங்கள் அன்னை வளவர்கோன் திருமக
ளார் என்று விண்ணப்பித்தார். அதுகேட்டுப் பிள்ளையார் விரை
ந்து எதிர் எழுந்தருளப் பாண்டிமாதேவியார் சிலக்கன்றின் செல்
வத் திருவடிக் கமலங்களிலே வணங்க, எம்பெருமானும் குழந்தை
த் திருக்கைமலரால் எடுத்தருளினர். அப்போது எம்பெருமாட்டி

யார் தங்கருத்து முற்றியதாகத் திருவுள்ளஞ்செய்து, அன்பினாற் றிருவிழி முத்தரும்ப, பவளத்திருவாய்மழலைகுழற, யானும்எனது நகரமும் செய்ததவம் யாதோ? என்று விண்ணப்பித்து வணங்கினார். காழியர்பெருமான், பரசமயச்சூழலிலேயிருந்துபற்றுவிடாத் தொண்டு நெறித்தலைப்பட்ட பத்திக்கடற்பேரெல்லையாகிய என்னம்மே! உம்மைக்காணவென்றே யிங்குவந்தனம் என்று அருளிச்செய்தனர். அப்போது, அவ்வருளப்பாட்டின் அருமையைப்பாராட்டி அம்மைமீட்டும்வணங்கினார். மந்திரியார் அங்குநிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகளையெல்லாம் முறையே கூறிக் குறையிரப்ப, ஐயர், திருவுளமேற்று, அப்பாண்டிப் பிராட்டிக்குத்திருவருள்செய்து, இராஜநகரிக்குச்செல்லவிடுத்து, அடியார்களோடுமெழுந்தருளும்போது அத்திருப்பதியிலுள்ள பெரியர்வந்துவணங்கி, இங்குஇனிச்சைவசுத்தசன்மார்க்கம் விளங்கும்படியானதவமும்தவப்பயனும் ஒருங்குபெற்றேமென்று விண்ணப்பஞ்செய்து தொழுதார்கள். அப்போது அவர்களுக்குஎல்லாந் தக்கமுகமன் அருளி அவர்களோடும்பரிசனங்களோடும், மந்திரர் பெருமான் அமைத்துவைத்திருந்த திருமடத்திலிருந்தருளினார்.

பின்பு, பாண்டிமாதேவியார் கட்டளைப்படி, குலச்சிறையடிகள், விருந்து அமைக்க; பிள்ளையார் திருவமுதுகொண்டருளியிருந்தார். சூரியன் அத்தமித்தவுடனே இரவும்வந்தது. அப்போது, சமணர்கள், அப்பகலிற் பிள்ளையார் திருக்கூட்டத்தோடும் வரக் கண்டு மனக்கிலேசத்தை யடைந்து, அவ்விரவில் அனைவரும் ஓரிடத்திற்கூடி, பிள்ளையார் திருமடத்தில் அடியவர்கள், செய்யும் தெய்வத் தமிழ்வேத பாராயண வோசையைக் காதினாற்கேட்கச் சகிக்கமாட்டாது, இதை அரசனுக்கு அறிவிப்போம் என்றோருபாயத்தை நினைத்து, அரண்மனை அடைந்து, வாயில் காப்பாளரை நோக்கி, எம்வரவை அரசனுக்குத் தெரிவிக்கவேண்டுமென அவர்கள்சென்று, இறைமகனை வணங்கி, அடிகண்மார் வந்திருக்கின்றனர் என்று விண்ணப்பித்தார்கள். அரசன் அப்போது அவர்களைத் தரும்படி கட்டளையிட; அவ்வமணாசிரியர்கள் அனைவரும் சென்று மனங்குலைய முகம்புலர நின்றார்கள். அதுகண்டரசன் சிந்தித்து, வந்தகாரணம் என்னை? யெனறு வினவ, அடுத்ததை வாயினாற் சொல்லத்தக்க தல்லவென்றார்கள். பாண்டிவேந்தன், ஆயினும் உமக்குநேர்ந்த தென்னென்று பரிவோடு வினவினார். அதற்கவர்கள் உமது மதுரைப் பெருநகரின் கண்ணே இன்று சைவவேதியர்கள் வந்தபடியால் யாங்கள் "கண்டுமுட்டு" ஆயினோம் என்றார்கள். அதுகேட்ட மன்னவன், யான் "கேட்டுமுட்டு" என்றுசொல்லி, தருமம்காத்தது அழகாயிற்று! நல்லது! அச்சிவ

னடியார்கள் யார்? வந்தகாரணம் யாது? என்று மனவருத்தத்தோடு வினவினர். அதற்கு, அவர்கள், ஐயா! சோழதேசத்தில் சீகாழிப்பதியில், "சூலபாணியிடத்தில் ஞானம்பெற்றாரென்று" ஒரு வேதியச்சிறுவர், அன்பர்கூட்டத்தோடும் எங்களை வாதில்வெல்ல முத்துச்சிவிகையேறி வந்தனர் என்று அறிந்தபடி சொன்னார்கள். அதுகேட்ட அத்தென்னவர்கோமான், வெகுண்டு, அங்ஙனம் வந்தாரானால், செய்யத்தக்கது யாது! என்று வினவினார். அப்போது அவ்வடிகண்மார், அரசர் பெருமானே! வந்த பிராமணனை பலவற்காரஞ்செய்து போக்கும்படி யோசிக்கலாகாது; பழிக்கு இடமாம் அவர் இருக்கும் மடம் தீப்படும்படி மஹாவித்தையாகிய மந்திரப் பிரயோகம் செய்தால், அதற்கு அஞ்சி இந்தவூரிலும் இல்லாமல்தானே போய்விடுவார் என்றார்கள். அதுகேட்ட வழுதியர் வேந்து, ஆனால் அதனையே செய்ய விரைந்து செல்லும் என்று அவர்களை அனுப்பிவிட்டு, தாம் ஒருவருடனும் பேசாமல், கவலையோடு புட்பசயனத்தை யடைந்து படுத்திருந்தார்.

அப்போது அவருடைய திருமனைவியார் வந்து மன்னர் மன்னன் வாய்பேசா திருப்பக்கண்டு ஓ! பிராணநாதரே! தேவரீர் திருவுள்ளத்திற் களிப்பற நேர்ந்த சோர்வுயாது? திருமுகம் மலர்ச்சியின்றி இருப்பானேன்? திருவுளம் பற்றவேண்டுமென்று குறையிரந்து நின்றார். அதற்கு அக்கொற்றை*மன்னன், தேவியார் திருமுகநோக்கி, ஓய்! பெண்ணரசே! கேளும். காவிரிநாட்டுச் சீகாழிக்கண், சிவானுக்கிரகம பெற்றவ ரொருவர், நமது அடிகண்மாரை வாதில் வெல்ல இன்றுவந்தனராம. அவரைக் "கண்டுமுட்டு" ஆயினர் அடிகண்மார்கள். யான் "கேட்டுமுட்டு" ஆயினேன். ஓய்! மானியே! இதுதவிரப்பிறிதில்லை என்று கூறினார். அதுகேட்ட அக்கற்பினுக்கு அரசியாரும், தேவரீர்கருத்து இதுவானால், இதற்காக நீர்சிந்திக்கவேண்டா. நிலைபெற்ற தெய்வத்தன்மையைப்பற்றி அவ்விருதிறத்தாரும் வாதுசெய்யின், யார் வெற்றி அடைகின்றார்களோ? அந்தப்பக்ஷத்தை நாம் அடைவதே துணிவுஎன்று கூறி, பின்பு கழுமலத்து அரசு, எங்களை அடிமைகொள்ளும் பொருட்டு அன்றோ? எழுந்தருளியபடி என்று திருவுள்ளத்தில், அடங்காத பெருமகிழ்வோடும் அந்தப்புரத்திற்கு எழுந்தருளினார். அங்கே, குலச்சிறையடிகள் எழுந்தருளி என்னம்மையை வணங்க; அம்மை, அரசசமுகத்தில் நடந்தவிடயங்களைத் திருவுளம்பற்றினார். அமைச்சர் பெருவாழ்வு, இரண்டுகைகளும் தலைமேலேறக் குவித்து, என்னம்மே! பிள்ளைப்பெருமான் இங்கு எழுந்தருளும்படியான பெருந்தவம் பெற்றோம் ஆதலால், இன்று நம்பெருமக்களைக் கண்ணாரக்கண்டு, வாயாரவாழ்த்தி, கையாரத்தொழும் பே

றுற்றது. இனி இச்சமணர்கள் என்ன வஞ்சனைசெய்வார்களோ? அதனை அறியோம் என்று கூறினர். அதுகேட்டு, அத்திரு பாண்டி அரசியாரும் திருவுளமஞ்சி, இப்போது அச்சமணர்கள் தமது சமயவொழுக்கத்திற்கே மாறாய்த் தவஞ்செய்வார்போலிருத்தலால், என்செய்வார்களோ? இனி யாதுசெய்யவல்லோம? ஏதேனும் பிள்ளையார் விஷயத்தில் நன்மையல்லாது, குறைவுவருமேயாயின், நமது இனிய உயிர்துறப்பதே, துணிவு என்றுசிந்தித்து இருந்தார்கள். அங்கே, அரசன் யாதொன்றுந்தோற்றாது கலக்கமுற்று இருந்தார். இத்தருணத்தில் அவ்வாருகதர் "தவமறைந்து அல்ல" செய்வார்களாய்த் தங்கள் மந்திரத்தால், சிவசன்மார்க்க காவலராகிய பிள்ளையார்திருமடத்தில், அக்கினியைச் செலுத்தினார்கள்.

ஆனால், அம்மந்திரப் பிரயோகத் தீயானது ஐயர்திருமடத்தை யாதொரு சிறுதீங்கினையும் செய்ததில்லை. ஏனெனில்? மஹாமந்திர நாயகமாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைப் பராமுகமாக வோதுகின்ற சாதாரணர்கள் கண்ணுற்பார்க்கும் திசையிலேதானும், மற்றைய மந்திரப் பிரயோக விதிசெல்லாதாமாயின், அத்திருமந்திர வடிவாகிய பிள்ளையார் திருவடிப்பற்றுடையவர்களாய் அம்மந்திராஜத்தின் உண்மை யழுத்துப்பற்றுமுடைய மெய்யடியார்களிருக்கும் திருமடத்தில், முறைபிறழ்ந்து செலுத்தப்பட்ட அச்சிறுமந்திர விதி செல்லுமோ? இதனால் சிவஞானிகள் மந்திரயோகத்தைக் கடந்தவர்களாதலால் அவர்களை யடுத்தவரையும் மந்திரயோக வலிசென்று வருத்தமாட்டாது என்பது விளங்குகின்றது. மேல், அதுகண்ட அச்சமணர் மனந்தளர்ந்து, என்செய்வோம், இதனை அரசன் அறிந்தால்நம்மை இனிமதிக்கவும் மாட்டான். நம மவர்களுக்குள்ள ஜீவன விருத்திமானிய முதலியவற்றையும் நீக்கிவிடுவானே. என்று அஞ்சி, நெடுநேரம் சிந்தித்து, ஒருவாறு தெளிந்து, சாதாரணமான சடத்தீயைக் கொண்டுபோய், சீவகாருணியர்களாகிய சைவமுநிவர்கள் கிரம்பிய அத்திருமடத்தில், ஒருசிறிதும் அஞ்சாது வைத்துவிட்டார்கள்.

உடனே, அத்தீயானது பற்றிக்கொண்டுவெளிப்பட, அங்கிருந்த பரிசனங்கள் பதைத்தெழுந்து அத்தீயை அணைத்து ஒழித்துவிட்டு இது செய்தவர்சமணரோஎனத்தெரிந்து பிள்ளையார்சந்நிதானத்தில்விண்ணப்பித்தார்கள். அதுகேட்டுஇரங்கி, அந்தோ! பாவிகாள்! சாதுக்களாகிய பெரியோர்கள் நித்திரைசெய்கையில் திருமடத்திற்கும் இவ்வாறு பழுது செய்யலாமோ? என்று பச்சாத்தாபப்பட்டு, என்பெருட்டு, இவ்வடாத காரியத்தை அவர்கள் செய்தார்களானாலும், அது பெருமான் திருவடிநேயர்க்கும்வருமோ?

என்று, விருப்பு, வெறுப்பு இல்லாச்சமூகாயினும் உலகினரை உய்விக்கவந்த, ஆசிரியர் தாமாதலால், சிவனடியார்களை எண்ணுந்தோறும் அறக்கருணையால் உண்டாகும் அச்சமும், அருகரை நோக்குங்கால் மறக்கருணையால் உண்டாகும் சிறுசினமுமாக, இது அரசநீதி தவறினமையால் அடுத்தகுற்றமென்று திருவுளஞ்செய்து, அவ்வரசனை யுணர்த்தவேண்டிப் பாண்டிமாதேவியார் திருமங்கல நாண்பாதுகாப்பாகப் "பைய" எனவிதித்து, திருவாலவாயுடையாய இச்சமணரிட்ட தீத்தழலபாண்டியனாரிடம் செல்லக்கடவது என்று, "செய்யனே திருவாலவாய்மேவிய, ஐயனே யஞ்சலென்றருள் செய்யெனைப், பொய்யராமமணர் கொளுவுஞ்சுடர், பையவேசென்று பாண்டியற்காகவே." என்னும் திருப்பதிகம்பாடியருளினார். இது அப்பாண்டியனை முன்னைத் தவப்பயனாலுய்யச் செய்தவாறாம். பின்பு அத்தீயின வெப்பஞ்சென்று பாண்டிமாராஜனை அடைந்து சுரநோயாகப்பற்றிக்கொண்டது.

சூரியனும் உதயமானான். பாண்டிமாதேவியாரும் மந்திரியாரும் அன்றிரவிற்சமணர்கள்செய்தகொடுமைகேள்விப்பட்டு, மெய்நடுநடுங்கி உளமபதைப்பச் சோர்வுற்று இக்கொடுமைக்கு ஏதுவாகியநாம் இறப்பதே துணிவு எனறு வருந்தும்போது, தக்கவர்களால், அத்திருமடத்திற்கு யாதொருபழுதும் நேர்ந்ததில்லை என்ற வார்த்தைகேட்டு, உண்மைதெளிந்து, மனந்தேறினார்கள். ஆயினும், இவ்வபாதம் முடிவில் ஏதாய் விளையுமோ? என்னும் அச்சமிகுதி அவர்களைவிட்டு ஒழிந்ததல்ல, அச்சமயத்தில் கஞ்சுகிமாக்கள், நமது அரசர் பெருமானுக்கு வெப்புநோய் அடுத்ததென்று விண்ணப்பித்தார்கள். அதுகேட்டு, உளநடுங்கி மெய்பதைப்பத் துணுகுற்று விரைவோடும் தேவியார், மன்னவனிடஞ்சென்றார். மந்திரியாருமவந்தார். அப்போது, சுரநோயதழம் குழம்பையூற்றியதுபோல அவருடம்பை எல்லாங் கவர்ந்துகொண்டு, அருகுநின்றவரன்றி ஏனையரையும் கொளுத்தும்படி எழுந்தது; ஆகவே, மேனிவாடி, அறிவுமயங்கி, உயிர்சோர, அடுத்தவர்கள் அஞ்சித் தூரத்தேசெல்ல, வாழைக்குருத்துங் கரிந்து சாம்பராய்விடவந்த அக்கொடிய சுரத்திற்கு, ஆயுள்வேதத்தைப் பழுதறக்கற்ற மூதியோர்கள் தாங்கள் கைகண்ட சிகிச்சைகள் முழுவதும் செய்தும் அது குணம்பெறாது அதிகரித்து நின்றது; ஆதலால் அரசன் கருத்தொன்றும் இன்றி, சொல்லும் மறந்து சோர்வுற்றிருந்தான். இச்செய்தியை அச்சமணாசிரியர்கள் கேட்டு நெஞ்சுபுழுங்கி, பெருமூச்சு எறிந்து, நேற்று இராத்திரி நடந்த காரியத்தினால் விளைந்த கொடுமையோ? இது என்று ஞாபகம் உள்ளுறுத்தவும், பாராட்டாமல் அரசனிடத்திற்கு வந்து, அவரது நிலைமையை நோக்கி,

நிறையழிந்து, என்செய்வோமென்று ஏங்கி, நோய்வந்த மூலம் தோன்றாமல்மயங்கி, தங்கள் தெய்வமந்திரத்தைச்செபித்து, முன்னும் பின்னுமாகத் தடவும்படி, பீலியைக் கையில் எடுத்தார்கள். உடனே அப்பீலியும் பிரம்புந்தீந்து, மேலெரியெழும்பிப்பொரிந்து பொறிசிதறி விழக்கண்டு வெப்பமிகுதிக்கு அஞ்சிக் கையிற்றாங்கிய உறிக்கரக நீரையெடுத்து, அபிமந்திரித்துத் தெளித்து, எம் அருகனே! அருகனே! காத்தருளாய்! காத்தருளாய்! என்று பல படப்பன்னி நின்றனர். அம்மந்திரநீர், அரசனமீது பட்டமாத்திரத்தில், எரிநெருப்பின்மீது இழுது நெய்விட்டாற்போலாய், அவ்வெப்பநோய் அதிகரித்துச்சுட்டது. அரசன் அக்குருக்கண்மாரைப்பார்த்து, நீங்கள் ஒருவரும் என்னிருமருங்கிலும் இருக்க வேண்டாம் என்று சீற்றத்தோடுங்கூறி அறிவுசோர்ந்தார். இவ்வநர்த்தத்தைப் பாண்டிமா தேவியார்கண்டு, அமைச்சியற் பாரம்பூண்ட குலச்சிறை யடிகளைநோக்கி, ஐயா! இக்கொடுமை, நம்மையாளுடைய பிள்ளையார்க்கு இச்சமணர்கள் நேற்றிரவிற்செய்த தீங்கின் விளைவுதானோ? என்று வினவினார். அதற்கு, அவரும், ஆம்: இதற்கு ஐயம் ஏன்? இனி யிவர்கள் தீர்க்கச்சிறிது முயலுவார்களாயினும் அதிகமே யாம் என்று கூறினார். பின்பு சிந்தித்து, அவ்விருவரும் அரசர்பெருமானை வணங்கி, யெம்பெருமானே! நேற்றுச் சீகாழியினின்றும் நமது மதுரையை வந்தடைந்த அநதணர் தலைவரை, இவ்வருக குருக்கண்மார்செயத அநுசிதமானகாரியம் இவ்வாறு தேவரீர்க்கு வெப்புநோயாக விளைந்ததுபோலும், இனி இந்நோயைத் தீர்க்கத்தக்க மருந்தாவது அவர்திருவருளேதான. இவர்கள் செய்கைமுழுவதும், இந்நோயை வளர்ப்பதாகவே யிருக்கின்றது. ஆதலால், அச்சிவஞானபோதகர் திருவருள் செய்யப்பெற்றால், அக்கணமே தேவரீரால் தாஙகுதற்கரியதாயிருக்கும் இக்கொடிய வெப்பநோய் ஒழிவது ஒன்றோ? வருத்தும் பலபிறவிநோயும் ஒருங்கேயொழிந்துவிடும். ஆகையால் இதனை நீர் திருச்செவிசாத்தித் திருவுளங்கொள்ள வேண்டுமென்று இதமபடமெல்ல விண்ணப்பித்தார்கள். அப்போது, அவ்வுண்மைப் போதகர்களுடைய சொல்லமிழ்தமானது பாண்டியர் பெருமான் செவிவாயிற்குளிர விழுந்த அளவிலே, சில்லென்று குளிர்ந்து,சிறிது வெப்பந்தணிந்தாற்போன்று, இளைப்பு நீங்கவே, அச் சமணர்கூட்டத்தைப் பார்த்துவிட்டு, திரும்பி அவ்விருவரையுநோக்கி, இச் சமண வடிகண்மார் செய்கைமுழுவதும் நோய்க்கே ஏதுவாயிற்று என்பது உண்மையேயென்று சிந்தித்து, நல்லது! அந்நிலைபெற்ற சுத்தசைவ சன்மார்க்க வேதபாலகர், இவ்விடம் எழுந்தருளி அவ ரருளால் இவ்வெப்பநோய் திருமாறுல் நானே சாக்ஷியாக அறிவேன். இந்

நோயைத் தீர்த்து வெற்றியடைந்தவர்கள் யாரோ? அவர்கள் பக்கம் நானும் சேர்வேன். வல்லமையுண்டானால் அழைப்பீர்களாக என்றுசொன்னார். அப்போது அவ்விருவரும் பெருங்களிப்பை யடைந்து, அணையை முறித்துச் செல்லும் வெள்ளம்போல அன்பு பெருகச் செல்லுகையில், சமணர்கள் செய்த கொடுமை எண்ணுந்தோறும் மனம்புழுங்க ஒருவாறு தேற்றிக்கொண்டு, பிள்ளையாரை அப்போதே தரிசிக்கவேண்டு மென்னும் காதல் பிடித்துத் தள்ளப்புறப்பட்டு, பாண்டித் திருவரசி சிவிகைமீதுசெல்ல, மந்திரர் பெருமான் பரிசனங்களோடு குதிரையேறி உடன் சென்று, ஐயர் திருமடத்தை அடைந்து, குதிரையை விட்டிழிந்து, பிள்ளையார்க்கு விண்ணப்பிக்கும்படி பரிசனங்களோடு சொல்லிவிட்டார். அவர்கள் போய், எங்குருமணியை வணங்கி நின்று, இராஜ மஹாபத்தினியாரும், அமைச்சர் பிரானும் வந்திருக்கின்றனர் என்று விண்ணப்பித்தார்கள். அதுகேட்டுப் பிள்ளையார்இங்கே அழையும் என்று திருவாய் மலர்ந்தருள, அவ்வடியவர்கள் அவ்விருவரையும் அழைத்துச் சென்றார்கள். அங்ஙனம் சென்ற அவ்விருபெருமக்களும், என்னுள்ளப் பெருங்கோயிலொருவனும், சிவமெய்ஞ்ஞானத் திருவனும், வேதத்தின் றுணையானவனும், மண்ணில் விளங்கும் மதிக்கொழுந்தானுனும், சிவநாமஸங்கீர்த்தன சுவாமயனும், குரவர் பிரானுமாகிய ஐயனை முன்பலகால் செய்த பெருந்தவப்பயன் எதிர்நின்று காட்டப் புதிது கண்டார்களாய், முன்னையதினத்திலும் பெருவியப்பும் அச்சமும் அன்பும் மேலிடத் தம்மை மறந்து, தெளிந்து, அன்றிரவு நடந்ததை எண்ணி இத்தெய்வக்குழந்தைத் திருமேனியைக் காணுவிடினும் சொல்லக்கேட்டுமில்லையோ? அவர்கள் எவ்வாறு அக்கொடிய செய்கைசெய்யச் சம்மதித்தனரோ அந்தோ ! அந்தோ ! என்று, உள்ளம்புழுங்கி, உரைதடுமாறி, தேகம்படபடவென்று பதறக், கண்ணீர்பெருகத் துயரக்கடலுக்குக் கரைகாணுதவர்களாய்க் கலங்கி உணர்வழிந்து, திருவடிகளில் விழுந்து கவலைக்கடலுக்கோர் புணைபற்றினுர் போன்று பற்றிப் பற்றுவிடாது, தேம்பித் தேம்பி அழுது அயர்ந்துவிட்டவர்களைப் பிள்ளையார், தண்ணென்ற தமது திருநோக்கத்தாற் கடைக் கணித்து, சோடையெல்லாம் அறும்படி, குளிர்ந்த திருக்காமலராற்றீண்டியெடுத்தருளித் தேற்றினார். அங்ஙனம் தேற்றியும் தேறாது அடிக்கடி பிரமித்து விம்மியழுது வெருள, நோக்கி, பெருங்கருணைசெய்து எமது சிவஞானச் செல்வர்களே ! ஏன் வருந்துகின்றீர்கள்? உங்களிடத்தில் ஏதேனும் தவறுண்டோ ? என்று திருவாய்மலர்ந்தருளினார். அதுகேட்டு, அவர்கள், எம்பெருமானே ! முதலில், சந்நிதிக்கு நேர்ந்த கொடுமைக்கே பயந்து, சிந்தித்திருந்தோம். அது

ஒழிந்தது. உடனே அதன்பயன்சென்று, கெடாதவெப்பநோயாய் அரசனைப் பற்றிக்கொண்டது. அது, அச்சமணர்கள் செய்யும் தந்திர வுபாயங்களால் அதிகரிப்பதன்றித் தணிவதில்லை. ஆகவே அரசன் தம்மை மறந்து, சோர்கின்றார். ஆதலால், எம்பெருமான் அவ்வேந்தன் முன்னிலையில் அச்சமணர்களை ஜயித்தருளினாற்றான், எங்களுயிரும் இறைமகனுயிரும் தரிப்பதாக இருக்கின்றன, என்று விண்ணப்பித்து வணங்கி நின்றார்கள்.

அதுகேட்ட ஆசிரியர் பெருமான் திருவருள் சுரந்து திருவுள்ளங்கனிந்து, ஒன்றற்கும் இனி அஞ்சவேண்டுவதில்லை, நீங்கள் களிப்படையும்படி யாவருங்காண அரச சமுகத்தில் அச்சமணர்களை வாதில்வென்று அவ்வேந்தர் வேந்தனை வெண்ணீறணிவிக்கும்படி நம்பெருமான் திருவருள் செய்யுமென்று திருவாய் மலர்ந்தருளினார். அம்மருந்து மொழிகேட்ட அளவிலே அவ்விருவரும், பெரும்பெரும் பேறுபெற்றவர்களாய், அகமகிழ்ந்து முகமலர்ந்து எம்பெருமானிங்கெழுந்தருளப் பெற்ற தவமுடைய இந்நாடும் யாங்களும் இனி என்பெற மாட்டோம்? என்று மீட்டும் வணங்கினார்கள். உடனேபிள்ளையார் திருவருளைச்சிந்தித்து, உலகத்தவர்கள் செய்தவினைக் கீடாகச் சமயம் ஒழுக்கம் அறிவு அநுபவம் சித்தி முதலியன யெல்லாமும் சிலகாலத்தில் வளர்ந்தோங்கி "ஆவதும்" சிலகாலத்தில் சுருங்கி ஒழிந்து "அழிவதும்," எம்மை ஆளுடையார் திருவருட் "செயலாம்" ஆதலால் அமணரை நோக்கவும், வெல்லவும், தரும மூர்த்தியையே கொடியாகவும் ஊர்தியாகவும்உடையவராய், உலகத்துள் அவ்வவரும் தந்தந் தெய்வமென்று வேறு வேறு நாமரூபங்களைத் தரித்து, வழிபடும் எல்லாமுடைய வொரு பெருந்தலைவராய், எம்மை வலிதாண்டவருமாகிய சிவபெருமான் திருவுள்ளப் பாங்கை முன் அறியவேண்டும் என்று திருவுளத்தில் எண்ணி, திருமடம்விட்டுப் புறப்பட்டு, திருக்கோயிலை அடைந்து சந்நிதிக்கணின்று, வாதுசெய்வதற்குக காரணம்பட "காட்டுமாவதுரித்துரி போர்த்துடல், ஞட்டமூன்றுடையா யுரைசெய்வனோன், வேட்டு வேள்வி செயாவமண்கையரை, யோட்டிவாது செயத்திருவுள்ளமே." என்னும் திருப்பதிகம்பாடி, அங்ஙனம் வென்றதன் பயன், உயிர்கள் உண்மையுணர்ந்து உறுதியடைதலே என்பது தோன்ற, "வேதவேள்வியை நிந்தனைசெய் துழ, லாதமில்லியமணொடுதேரரை, வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே, பாதிமாதுடனாயபரமனே, ஞாலநின்புகழே மிகவேண்டுந்தென், னாலவாயி லுறையுமெம்மாதியே." என்ற திருப்பதிகம்பாடி விண்ணப்பித்துத் திருவருள்பெற்று வலம்வந்து பணிந்து தலைவாயிலை அடைந்தருளினார். இங்கே, புராணம், "ஆவதும்" "அழிவதும்" "அவர்செயல்" எ

ன்றதனால், சமயங்களெல்லாம் கடவுளாணையால் அவரவர் வினையளவுக்கே அமைக்கப்பட்டன வென்பதும், அவ்வச்சமயத்தேவரேயாய் அவரவர்க்கேற்ற பயன்றருவார் ஒரேகடவுள் என்பதும், "வாதுசெயத் திருவுள்ளமே" என்றதனால் அச்சமயவாதம் நமது போதசேட்டையாற் செய்வது மரபல்லவென்பதும், மேற்பட்ட பக்குவரை யுணர்த்துவது மரபேயாயினும் கடவுளரு ளாணையின்றி ஆசிரியரும் செய்யலாகாதென்பதும், "வாதுசெய" என்றொழியாது "வாதிலழிக்கத் திருவுள்ளமே" என்றதனால், அதுவாதமன்று மேற்பருவத்தை யடைந்தவர்க்கு அறியாமை யொழித்துமல சங்காரமாகிய தீக்ஷை என்பதும் "திருவுள்ளமே" என இரண்டு திருப்பதிகங்களின் மிகுத்துக் கூறியதனால் அந்த தீக்ஷாபேதங்கள் அடங்கலும் வெளிப்படுத்தப் பட்டனவென்பதும், "ஞாலநின்புகழே மிகவேண்டும்" என்றதனால், உலகுணர்ந்துய்தலேபயனென்றும் பெற்றாம். இன்னும் பிறவகலம் பெரியபுராண உரையிற்காண்க.

பின்பு, பிள்ளையார், ஸ்ரீ மானியாருக்கும் மந்திரியாருக்கும், அநுக்கிரகிக்கவேண்டி, முத்துச்சிவிகைமேல் எழுந்தருளினார். அப்போது, சிவனடியார்கள் ஹர ஹர முழக்கஞ்செய்தார்கள். அம்முழக்கத்தால் திசைகள் செவிடுபட்டன. பலவாத்தியங்களும் கோஷித்தன. முத்துக்குடை நிழற்றியது. சின்னம், தாரை, காளங்கள் பெருமான்றிருநாமம் பலவாறெடுத்துக் கூறிக்குறித்தன. கண்டவர்கள், எம்மையனைப்பெற இந்நாடு என்னதவஞ் செய்ததோ? என்று துதித்தார்கள். மந்திரியர் பெருமான் அடியார் திருக்கூட்டத்தோடு முன்னெழுந்தருளினார். ஸ்ரீமங்கையர்க்கரசி யென்னம்மை சிவிகைமீது பின்னெழுந்தருளினார். இவ்வளவு சம்பிரமத்தோடு அம்மதுரைத் திருவீதிகளைக் கடந்து, கன்னிநாடுடைய பாண்டியர் பெருமான் கோயிலைக்காழிநாடுடைய பிள்ளைப் பெருமான் அடைந்தருளினார். அவ்வளவில், குலச்சிறையடிகள் முன்சென்று எம்பெருமான் றிருவரவை, அச்செழியர் கோமானுக்குக் கூற, அவ்விறை மகன் தனக்கு முன்னிருந்த துன்பம்சிறிதுநீங்கிக் காட்டவே ஒரு அரதன பீடத்தைத் தமது தலைப்பக்கத்திலிடும்படி, சொல்லி, மறுபடியும் எதிர்கொள்ளும்படி மந்திரியாரைச் செலுத்தினர். அவரும் அரசன் பணிமேற் கொண்டு களித்துச்சென்றார். அது கண்டு, அவ்வருகசமயாசிரியர்கள், அரசனைநோக்கி, ஓய்! அரசசூடாமணியே! இதுதானோ? உண்மைச்சமயத்தை உலகத்தில் நிலைநாட்டுவது. ஆயினும், உமது தருமமார்க்கத்தை நீர் காப்பது உண்மையானால், இப்போது, ஒன்றுசெய்யவேண்டுவது. அதாவது, அவர்களை இங்கேவரவழைக்கலாகாது. அதவா, வரவழைத்தால், யாங்களும் ஒக்கவிருந்து அந்நோயைத் தீர்க்கச்சொல்லவேண்

MAHAMAHOPADHYAYA
DR U.V. SWAMINATHA IYER LIBRARY

டுது, அவ்வாறு, இருதிறத்தாருமாகத் தீர்க்கும்போது, அவர்களாற் றீர்ந்ததானாலும், நாங்களும் இருந்து தீர்த்ததாக நீர்சம்மதிக்கவேண்டும். இதுதான் எங்கள் கருத்து என்றார்கள். அதுகேட்டு, அம்மன்னவர்பெருமான், "செய்தவப்பயன்வந்து எய்தும் செவ்வி முன்னுறுதலாலே" தந்திரவஞ்சகங்களுக்கு உடன்படாது, நீங்கள். 'எய்திய தெய்வச் சார்வால் இருதிறத்தீரும்தீரும்" அவ்வாறு தீர்ந்தால் யாவராற் றீர்ந்ததோ? அதனை உள்ளவாறு கூறுவேனன்றி "கைதவம் பேசமாட்டேன் என்று கைதவனும் சொன்னான்." அதுகேட்டவர்கள் என்செய்வார்கள். எண்ணந்தடுமாறி ஏங்கி நின்றார்கள்.

அப்போது, தமிழ்நாடுசெய்த தவப்பயனாகிய ஞானசம்பந்த வள்ளல், அரண்மனை ஆசாரவாயிலை அடைந்து, முத்துப் பல்லக்கைவிட்டு இறங்கி அவ்விறைமகன் திருக்கோயில் உட்புகுந்தருளினார். குலச்சிறைப்பெருமான் முன்சென்றார். அரசபத்தினியாகிய என்னம்மை சிவிகைவிட்டிழிந்து பின்சென்றார். அத்திருக்காட்சி சிறந்த திருவெழுச்சியால், பாண்டிவேந்து, தங்கள் குல முதலாகிய சந்திரன் நிலவுலகத்திற்கு வரக்கண்டாற்போலும், பெருமகிழ்ச்சியோடு, குழந்தைப்பெருமானைக் கண்டு, அச்சமும் அன்பும் தானே தோன்றத் தன்னையும அறியாது, கைகள் தலைமேலேறக் கண்டு அற்புத சித்தனாய், தன் தலைப்பக்கத்திலிட்டு வைத்திருக்கும், உயர்ந்த பீடத்தின்மேல் எழுந்தருளும்படிக் கையாற் காட்டினர். முத்தமிழரசும் அப்பீடத்தில் வீற்றிருந்தார். அதைக்கண்ட சமணர் கருத்தில் அச்சததை அடைந்தனர். பாண்டித்தலைமகனும் எம்பெருமானது தெய்வக்கோலத்தைத் தரிசிக்கப்பெற்று, திருக்கடைக் கண்ணோக்கமும் பட்டதனாலே, அடுத்தவெப்பம் சிறிதடங்கி, சோர்ந்து அலையும் நெஞ்சமும் நேரோ ஒருவழிப்பட்டு நிற்க, எம்பெருவாழ்வை நோக்கி ஐயரோ; எப்பொழுதும் விரும்பி இருக்கும் திருப்பதியாது? என்று ஆவலோடு கேட்டபோது, என் அண்ணல், "பிரமனூர் வேணுபுரம்புகலி வெங்குருப் பெருநீர்த் தோணி, புரமன்னு பூந்தராய் பொன்னஞ்சிரபுரம் புறவஞ்சண்பை, அரன் மன்னுதண் காழிகொச்சை வயமுள்ளிட்டங் காதியாய, பரமனூர் பன்னிரண்டாய் நின்ற திருக்கழுமல நாம் பரவுமூரே."

என்னும் திருப்பதிகம் திருவாய்மலர்ந்தருளியது. அத்தருணத்தில், அங்கிருந்த சமணர் எம்பெருமான் திருவோலக்கங்கண்டு, பொறாது அச்சத்தை உள்ளேமறைத்து, முகம்கோபத்தீயாற்சொலிக்க, கண்கள்சிவக்க இளஞ்சூரியனை மேகக்கூட்டம் சூழ்வதுபோலச் சூழ்ந்து, வாதிட்டு வெற்றியடைய வேண்டுமென்னும் கருத்

திறலே தங்கள் மதசித்தாந்த நூலையெடுத்துப்பிரசங்கித்தார்கள். அதைக்கேட்டுப் பிள்ளையார் திருவுளஞ்செய்து, உங்கள் சமயத்துட் கூறப்பட்ட "பதார்த்தங்களையும், அளவைகளையும்" "உத்தேசம் இலக்கணம் சோதனை" என்னும் கிரமப்படி பேசுங்கள் என்றார். அப்போது, அவர்கள் தலைத்தலை நின்று பேசத்தொடங்கினார்கள். அதுகண்டு, மானியார் திருவுளம் பொறுக்காது, பாண்டிவேந்தரை நோக்கி, வேந்தர்வேந்தே! பிள்ளையாரோ? ஒருவர், குழந்தைத்திருமேனி யுடையவர். அவர்களோ? கணக்கில்லாத பெருங்கூட்டத்தார். ஆதலால், முதலில் தேவரீருக்கு அடுத்தநோய்மயக்கத்தை அவர் சிவானுக்கிரகத்தால் தீர்த்தபின்பு, இச்சமணர்கள் வல்லமை யிருந்தால், பேசத்தொடங்கலாம் என்றார். அதுகேட்டு, நெடுமாறரும், பெண்ணே! நீர்வருந்தவேண்டாம் என்று, சமணர்களைக் கையமர்த்தி, வேறே தருக்கவாதங்கள் என்செய்வதற்கு? ஒன்றும் வேண்டாம். அருகராகிய நீங்களும் சைவராகிய இவரும், தேறியறிந்துள்ள தெய்வ நிச்சயத்தை இப்போது, எனது உடம்பின்மேல் உண்டாகிய வெபபத்தை யொழித்து, எனக்குத்தெரிவிக்க என்று சொன்னார். பிள்ளையார், மங்கையர்க் கரசியாரைநோக்கி, அம்மே! அஞ்சற்க என்று, "மானினேர்விழி மாதராய் வழுதிக்குமா பெருந்தேவிகேள், பானல்வாயொரு பாலனீங்கிவ னென்றுநீபரி வெய்திடேல், ஆனைமாமலை யாதியாயவிடங்களிற்பல வல்லல்சேர், ஈனருக்கெளி யேனலேன்றிரு வாலவாயர னிற்கவே." என்னும் திருப்பதிகம் திருவாய்மலர்ந் தருளினார். அப்போது, அரசன், மீட்டும், இன்று நான் அடைந்த இந்நோயைநீக்கினவர்களே வாதில் வெற்றி யடைந்தவர்களாம் என்றார்.

அதுகேட்ட அருகர்கள், ஒய்! மன்னவரேறே! உமது இடது பாகத்திலுள்ள வெப்பநோயை முன்பாகமந்திரித்து, எங்கள் தெய்வ வல்லபத்தினால் தீர்த்துவிடுவோம் என்று அரசன் அநுமதிப்படி, சென்று, அவரது வாமபாகத்தைத் தங்கள் பீலியால் தடவினார்கள். தடவுந்தோறும் மேலும்மேலும் வெப்பம் மிகுந்து கொடுமைசெய்யவே, பாண்டிமன்னன் பொறுக்க மாட்டாது, துடிதுடித்து, பிள்ளையாரைப் பார்த்தார். அதனை எம்பெருமான் திருவுளத்திற்கொண்டு, உடனே, அவரது வலதுபாகத்திலுள்ள வெப்பம் ஒழியும்படி "மந்திரமாவது நீறு வானவர்மேலது நீறு, சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு, தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு, செந்துவர்வாயுமை பங்கன் றிருவாலவாயான் றிருநீறே." என்னும் தெய்வமறையோதி புண்ணிய வெண்ணீற்றால் தடவியருளினார். அந்தக்கணமே, பஞ்சவரிறைவன் மேனிவலப்பக்க வெப்பமானது, இளவேனிற் பருவப் பூந்தடம்போல, தண்ணென்று

குளிர்ந்துவிட்டது. அப்பால், அவரது தேகத்தின் மற்றொருபாக த்தில் சுவாலைகளோடும் கூடிய பெருந்தீ மூண்டாற்போல, இருப க்கவெப்பமும் ஒன்றாகச்சேர்ந்து, அவ்விடம்போதாது மேலெழு ந்தது. அதுகண்டு, சமணர்கள், அஞ்சி, கையிலிருந்த பீலியுங்கரு கிப்போக வெப்பெழுந்து தங்களையும் சுடுதலால் அருகு நிற்கமா ட்டாது அகலப்போயினர். இதுகண்டவுலகர் பெருவியப்பை அடைந்து சூழ்ந்தார்கள். அரசன் திருமேனியும், ஒரேகாலத்தில், குளிர்ச்சியும் சுடுகையும் ஒவ்வொருபக்கமேயாக வொதுங்கிநின்று லொத்தது. ஆகவே, அரசர்பெருமான் அற்புதமடைந்து, என் னே! என்னே! ஒரே காலத்தில், ஒரேயிடத்தில், நரகமும வீடும் பிரிந்து நின்றாற்போலும், விடமும அமுதமும் அமைந்தாற்போ லும், எனது ஒரு உடம்பிலே அவ்விரண்டு தன்மையும் பொருந் தப்பெற்றேன். என்றுசொல்லி சமணர்களைநோக்கி, நீங்கள்தோற் றீர்கள் தூரப்போவீர்களாக, என்றுகூறி, பிள்ளையாரைநோக்கி, உய்ய அடிமைகொண்ட உயர்குணக்குன்றமே! உறுதுணையே! ஒளிமணிவிளக்கே! அடியேனை உருத்தெழுந்த, உறுகண்செய்யு ம் மற்றையொருபாற் பெருவெப்பத்தையும, தேவரீரே! ஒழித்து, உயிர்ப்பிக்ைக்ஷ கொடுத்தருள வேண்டுமென்று விண்ணப்பித்து, சத்தியவெண்ணத்தால் வணங்கிச் சரணாகதன ஆனார். அப்போது பெருங்கருணை வள்ளலாரும் திருக்கண்சாத்தி, திருக்கைமலரினா லெடுத்த திருவெண்ணீற்றினை அந்தப்பக்கத்திலும் ஒருமுறை தட வியருளினார். உடனே அக்கொடுமையுள்ள தீப்பிணியானது சேட மின்றி முற்றும் ஒழிந்தது. பாண்டிப் பெருமானும் முழுவதும் பிழைத்தெழுந்தார். அதுகண்ட இராஜபத்தினியாரும் மந்திரியா ரும், ஐயர் திருவடிக்கமலங்களில அட்டாங்க பஞ்சாங்கமுறைப்ப டி, நமஸ்காரம்செய்து, எம்மையுடையாய்! நாங்கள் பிறந்ததும் இன்றுதான். அறியும் இன்றுதான பிறந்தபேறும் பயனும்பெற் றோம். எங்கள் காவல்வேந்தரும், இன்றுதான், இனி என்றும் பிற வாமென்மைபெற்றனர் என்று பெருமகிழ்ச்சியோடும் துதித்தார் கள். அப்போது, மீனக்கொடியுடைய பாண்டிமன்னனும், தம் முடம்பினுற்ற தீப்பிணி ஆறியவுடனே, பேரின்பமடைந்தவராய், உச்சிமேற்கைகுவித்து, அச்சமணர்ளெதிரே, என்கொடுநோயை நீக்கும்படி, இங்கு எழுந்தருளிய இச்சிவஞான சம்பந்தப்பெருமா ன் திருவடிக்கு நான் அடிமையாக இன்று அடைக்கலம் புகுந்து பிழைத்தேன்! பிழைத்தேன்! பிழைத்தேன்! என்று களித்துக் கூறினார்.

இது, ஆசிரியனுக்குச்செய்த அபராதம் அவ் வாசிரியனாலே யே ஒழியவேண்டுமென்பது குறித்தது. பின் அரசன்கருத்தை அச்சமணர்கள், அறிந்துகொண்டு, சிந்தித்து, தாங்கள் முன் கை

கண்டிருந்த மந்திரவித்தை முழுவதும் பலியாதுகெட்டுப்போன
தையுநோக்கி, அச்சத்தோடு இனி, என்னசெய்வோம், என்று
வருத்தத்தை அடைந்து மேல் நடக்கவேண்டும் உபாயங்களைத்
தேடுவாராய் இனி, இப்பிள்ளையாரோடு சொற்பெருகும் தருக்கவா
தத்தால் வெல்லுவோம் என்பது கூடாது. இப்போது, அரசனுக்கு
வந்த சுரநோய் அவர்சொல்லிய பாடலாற்றானே ஒழிந்துபோய்
விட்டதாகலின் சொற்றிறமுற்றும் உணர்ந்த இவரோடு வாக்குவா
தத்தாற் பயனில்லை மேற்பொருட்டிறம்பற்றிய காட்சி அளவை
யையுடைய அனல்வாதம் புனல்வாதம்செய்து வெல்வதேதுணிவு
என்று தம்முள் நிச்சயித்துக்கொண்டு நின்றார்கள். அப்போது
பிள்ளையார், அச்சமணர்களை, இனி உங்கள் சமயவுண்மையைப்பற்
றிப்பேசலாமே ? என்று வினவினார். அதற்கவர்கள், இனி வேறு
தருக்கவாதம் வேண்டுவதில்லை. அவரவர்கள், சமயத்தின் சத்திய
நிலைமையை யாவரும் காணக்காட்சி யளவிலேகாட்டுவது தான்
முடிவு என்று ஒட்டினார்கள். அதுகேட்டுப் பாண்டிமாராஜன்,
அந்தோ! என்னுடம்பு கன்றியொடுங்கிப் போகும்படி வெப்பு
நோய்பற்றிக்கொண்டபோது, அதை ஒருசிறிதும் ஒழிக்கமாட்டா
மற்போனீர்கள், இனி உங்களுக்கு என்னவாது இருக்கின்றது
என்று, ஒன்றுமில்லை யென்னுங்கருத்தாற் கூறினார்.

அப்போது சமணர்கள் அக்கருத்தை அறியாதவர்களைப்போல
“என்னவாது’’ என்று சொன்னதை வினாவாக்கிக்கொண்டு, அவ
ரவர்களும் தங்கள் தங்கள் சமயத்துட் கூறப்பட்ட பொருளுண்
மையை ஓலையில் எழுதி நெருப்பில் இட்டால், அந்நெருப்பில்
வேகாது இருப்பதே வெற்றி என்று கூறினார்கள். அதற்கு அர
சன், எதனையோ ஒன்றனையெண்ணிச் சொல்லத்தொடங்கினார்.
அப்போது அச்சொல்வெளிப்படுவதற்குமுன், பிள்ளைப்பெருமான்
அவர்களை நோக்கி, நல்லது, நீங்கள் கூறியது மெய்யானால் அர
சன்முன் வருவீர்களாக என்றருளிச் செய்தார். அவ்வாறே அவர்
கள் உடன்பட்டு வந்தார்கள். அப்போது, பிள்ளையார் ஆணையின்
படி அரசன் தனது சபையின்முன் அக்கினியை அமைக்க ஏவலர்
களை யேவினார். அவர்களும் அவ்வாறே விறகுகளை யடுக்கித் தீய
மைத்து வைத்தார்கள். அதில் சர்வசாக்ஷியாகிய அக்கினிதேவனும்
களிப்போடுபிரகாசித்து நின்றார். அவ்விடத்து. முத்தமிழ் நாயகர்
எழுந்தருளி “செங்கணேற்றவரே பொருளென்று தாந்தெரிந்த,
பொங்கிசைத்திருப்பதிக நன்முறையினைப்போற்றி, எங்களுதனை
பரம்பொருளெனத் தொழுதெடுத்தே, யங்கையான் முடிமிசைக்
கொண்டு காப்புநாணவிழ்த்தார்’’ மலபாகமின்றி சனனமரணவஸ்
தையில் இளைத்த ஆன்மகோடிகள் அவ்விளைப்பாறும் படிக்குத்

தனது சத்தியாற் செய்வித்தருளும் சர்வசங்கார காலத்தின் கண்ணே, ஒடுங்கிநின்று, மீட்டும் தனுகரணபுவனபோகங்களைப் பெற்று பரிபாகமடைந்து தனது திருவடியினிழலில் சேரக்கருணை செய்து என்றும் செங்கண்ணினராகிய தருமவிடைத் தேவரையுடைய சிவபெருமானே உண்மைப் பொருளென்ற திருவருத்தந் ததும்பிய பண்ணிசையோடு கூடியதும், தாம் ஓதாது உணர்ந்ததுமாகிய திருநெறித்தமிழ் என்னும் திருமறையெழுதிய திருமுறையை விதிப்படி வணங்கி, எங்களையெல்லா முடையானே துணிவார் துணிந்த பொருள்கள் பலவற்றுள்ளுஞ் சிறந்தபொருளென்று, திருவுளஞ்செய்து அத்திருமுறையை எடுத்துத் திருமுடிமேற்றாங்கி, திருக்காப்பிட்டுச் சாத்தியிருந்த சூத்திரத்தை அவிழ்த்தருளினார். என்க.

அங்ஙனம் அவிழ்த்து அத்திருமுறையைத் தமது தெய்வத் திருக்கரமலர்சாத்தி மறித்தருளியபோது, "போகமார்த்த பூண்முலையாடன்னோடும் பொன்னகலம், பாகமார்த்த பைங்கண் வெள்ளேற்றண்ணல் பரமேட்டி, ஆகமார்த்த தோலுடையான் கோவணவாடையின்மேல், நாகமார்த்த நம்பெருமான்மேயது நள்ளாறே." என்னும் தெய்வமொழி எழுந்தருளியது. உடனே அத்திருப்பதிகத்தை அன்போடுபெற்று திருநள்ளாறுடையாரை வணங்கி, களிப்போடும் அத்திருவேட்டினைக் கழற்றிக் கையிலேந்தி, சிவனே என்று நிலைபெற்ற வுண்மைப்பொருள் என்பதை யாவர்க்கும் பிரத்தியக்ஷமாகக் காட்டி உபதேசித்தருளுவதற்கு, "போகமார்த்த பூண்முலை" கூடுதலால் தீக்கணிட்டாற் பழுதில்லை என்று "தளிரிளவளரொளி தனதெழிற்றருதிகழ் மலைமகள், குளிரிளவளரொளி வனமுலையிணையவை குலவலில், நளிரிளவளரொளி மருவு நள்ளாறர்த நாமமே, மிளிரிளவளரெரி யிடிலிவைபழுதிலைமெய்ம்மையே." எனுந் திருப்பதிகம்பாடி திருவேட்டினை அந்த இராஜசபைக் கெதிரிலே யாவரும் காணும்படி, அப்பெருந்தீயில் உலகம் பிழைக்க, இட்டருளினார். இவ்வாறு, இட்ட திருவேடானது, உலகமாதாவோடு கூடிய பாகத்தினையுடைய அட்டமூர்த்தி யழகப்பெருமானையே பொருள் என்று குறித்திருத்த லுடைமையால், அப்பெருந்தீயில் வேகாது பச்சையாய் விளங்கிநின்றது. அவ்வருக சமயத்தவர்களும் தங்கள் சித்தாந்தத்திற் கூறியுள்ள பொருளையெழுதிய ஏட்டையும் அந்தநெருப்பிலே, யிவ்வேடுதப்பிப் பிழைக்குமோ? சுட்டொழிந்து போமோ? என்னும் சந்தேகத்தோடு கவலைப்பட்டுக் கொண்டே யிட்டார்கள். உடனே அந்த ஏடு, பஞ்சுதீப் பட்டவாறுபோல எரிந்து சாம்பராய்விட்டது. அதுகண்டு பயந்து நெஞ்சுசோர்ந்து நின்றார்கள். பின்பு, அரசசபை முன்வ

ளர்த்த தீயிலே பிள்ளைப்பிரான் இட்ட திருவேடு, குறித்த கணக்கையுடைய நாழிகை வரையிலும் யாதொரு பழுதும் இல்லாமல் முன்னையிலும் சிறந்த பசுமையும் புதுமையும் பெற்றிருந்த அத்திருவேட்டினை அந்தச்சபையிலுள்ளவர்கள் அனைவருக்கும் எடுத்துக்காட்டிப் பின்பு திருமுறையில் கோத்துவிட்டார்கள்.

அதுகண்டு, பாண்டிமன்னவன் அதிக அற்புதத்தை யடைந்தவராய், பின்சமணர்களை நோக்கி, நீங்கள் இட்ட ஏட்டைக் காண்பிக்கவென்றார். சமணர்கள் ஏட்டை யெடுக்கும்படி அத்தீயருகே செல்ல அது நெருங்க வொட்டாது சுவாலைவீசிப் பிரகாசித்தது. அதனால் அவர்கள் அஞ்சிப் பின்னடைந்துவர, அரசன் நோக்கி, ஏவலரால் சலத்தைக்கொண்டு அந்த அக்கினியைத் தணிப்பித்தார். பின்பு சமணர்கள் அங்குசென்று தேடிப்பார்த்து, கரியும் சாம்பலுந் தவிர ஏடுகாணாமல், ஏக்கங்கொண்டு திகைத்து நின்று, அச்சாம்பலை எல்லாம் கையாற்பிசைந்து தூற்றிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அதுகண்டு அரசன், பெருநகைசெய்து, நீங்கள் இட்ட ஏடு எங்கே? இன்னம் அரித்துப் பார்க்கின்றீர்களோ? நல்லகாரியம்! நல்லகாரியம்! இந்த அபிநயத்தினால் தான், உங்கள்கருத்தை மெய்ப்பிக்க முயற்சிக்கின்றீர்கள் போலும். போதும்! போதும்! அப்புறம் போவீர்களாக. அச்சோ! முன்னே நான் கொடிய வெப்பநோயில் வதைந்தபோது, விடுவிககமாட்டாமல், தேற்றீர்கள்; இப்போது, இட்ட ஏடோ? வெந்தொழிந்த தல்லாமல், காணப்பட்டதில்லை; ஆகவே நீங்கள் இன்னமும் தோல்வியடைய வில்லைபோலும் என்றுசொன்னார். இவ்வாறு அரசர் பெருமான் நகையை உள்ளிட்டுக்கூறிய வார்த்தைக் கருத்தைக கொள்ளாது, ஐயா! வேந்தர்வேந்தே! முன்னிரண்டுவிசை செய்தோம், ஆனால், யாதொரு காரியத்தையும் முக்காலும் சோதிக்கவேண்டுவது; ஆகையால், இன்னும் ஒருதரம் பார்த்தால், அதில்வெற்றியுண்டாகுமேயானாலும் ஒத்ததுதான் என்று சொன்னார்கள். அது கேட்டு, அரசன, இது முறையல்ல வென்று மறுத்துவிட்டார். பிள்ளையார் கருணையால், உங்கள் கருத்தின்படிக்கு இனி என்னை செய்யவேண்டும் என்று வினவினார். அதற்கு, அவ்வருகர்கள், கொள்பொருளின் உண்மையை ஓர் ஏட்டில் எழுதி நாமிருதிறத்தரும், ஓடுகின்றயாற்று நீரில் இட்டால், அவ்வெள்ளநீருக்கு எதிராக ஏறிநின்ற ஏட்டின்கருத்தே சத்தியமான பொருளென்று சொன்னார்கள். அதற்கு பிள்ளையார் திருவுளமிசைந் தருளினார். அப்போது, அருகிலிருந்த மந்திரர் பெருமான், நல்லது! அவ்வாறெ செய்யும் இந்தவாது ஒன்றிற்றானும் தோற்றால், என்னவாகின்றது, என்பது, ஓட்டம் ஓட்டிச்செய்வதே தகுதியென்றுசொன்

ஞர். அதுகேட்டு, சமணர்கள் அவர்மேலிருந்த கோபத்தினால், இவ்வாதில் தோற்றால் எங்களைக்கொடிய கழுமரத்தில் இவ்வரசனே யேற்றித் தண்டிக்கக் கடவர் என்று வாய்சோர்ந்த வகையாற் றாமே உடன்பட்டுச் சொன்னார்கள். அச்சபதத்தினை அரசர்பிரான்கேட்டு, இவ்வார்த்தையைக் கோபத்தாற் சொன்னீர்கள்; உங்கள் செய்கைகளை மறந்துவிட்டீர்கள் போலும். நாம் என்செய்வது? ஆனால், ஏடு விடுவதற்கு வைகை யாற்றங்கரைக்குப் போவோம் என்று கூறினார். உடனே பிள்ளையார் முத்துச்சிவிகையேறி எழுந்தருளினார். அரசன் குதிரையேறிச் சென்றார். சமணர்களும் சிந்தனையோடு உடன்போயினார்கள். அச்செலவின் காட்சியைத் தரிசித்தார் யாவரும் பிள்ளைப்பெருமானிடத்து அன்பும் அற்புதமும் அடைந்து, வாயில்வந்தவாறெல்லாம் வாழ்த்தினார்கள். சின்ன முதலியன புகழ்முழங்கின. மங்கலவாத்தியங் கோஷித்தன. இவ்வளவு சம்பிரமங்க ளுடனே பாண்டிமா தேவியாரும் பஞ்சவர் பெருமானும் தொடர்ந்துவர, என்னையன, பெருவைகைத் திருக்கரைக்கண் வந்தருளினார். சமணர்களும் அங்கு ஒரு பக்கமாகத் திரண்டார்கள்.

அப்போது, அரசன், யாற்றுவெள்ள வேகமறிந்து இனி இருதிறத்தவரும்கொண்ட சித்தாந்த நிச்சய ஏட்டையிடலாம் என்று கூறினார். உடனே அவ்வமணாசிரியர்கள் "தோற்றவர் தோலார்" என்னும் பழமொழிமேற்கொண்டு முன்னதாக, "அத்திநாத்தி"= உண்டு இல்லை, என்று எழுதிய தங்களேட்டினை விரைந்தோடும் யாற்றில் துணிந்து இட்டார்கள். இட்டவுடனே அவ்வேடு அதிகவேகத்தோடு அவ்வெள்ளநீர் சென்றவழியே, கூலியாளர் தந்தந்தாரத்திற் குரியவேலைமேற்செல்வதுபோல, கடலாகிய வேலைமேற்சென்றது. அது கண்டு எதிரோடி அணைத்துத் தடுப்பவர்போலக் கரையோரமாகச் சிலதூரம் அதன்பின் பார்த்துக்கொண்டே ஓடினார்கள். பின்பு அவ்வேடு கண்ணுக்கும் அகப்படாதபடி அவர்களை நட்டாற்றிற் கைவிட்டுத் தான் நடுக்கடலை நோக்கிச் செல்லவே சென்றது. அவர்களும் பின்சென்று திகைத்து நின்று அரசனாணையைக் கடக்கமுடியாது மீண்டும், விட்டவிடம் வந்து சேர்ந்து, பயந்து நடுங்கி முடிவுகாலம் வந்துவிட்டதென்றே துணிந்துகொண்டு, அரசனை நோக்கி, இனி இப்பிள்ளையாரும் இட்டால் பார்க்கலாம் என்று சொன்னார்கள். அதுகேட்டு, அரசன் அவர்களை விட்டுவிட்டுப் பிள்ளையார் திருக்குறிப்பை எதிர்பார்த்து நின்றார். அதனையுணர்ந்து, பிள்ளைப்பெருமான், திருப்பாசுரம் திருவாய்மலர்ந்து, அரசர் பெருமான் திருவெண்ணீறு தரிக்கப்பெற்று முன்வினை முழுவதும் ஒழிந்து, இருவினையொப்பு மலபரிபாக

முடைமையால் அவரையும் ஏனையரையும் தேற்றும்படி உண்மை விளங்க எழுதிய அத்திருவேட்டினை அந்த ஆற்றிலே விட்டருளினார். (திருப்பாசுரம்) “வாழ்கவந்தணர் வானவரானினம் - வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக-ஆழ்கதீயதெலாமரனாமமே-சூழ்க வையகமுந்துயர் தீர்கவே.” என்றது. உலகுயிர்கள் துணிந்தறிந்து இன்பமடையச் சிவார்ச்சனை நிலைமைவிளக்கம்பெற அதன் அங்கமாகிய வேள்வியும், பயனும், காப்பவன்றிறமும் கூறி, அறியாமையொழிந்து மெய்ஞ்ஞான முண்டாய், இம்மைமறுமைத்துன்பம் நீங்குமுறைமையுங் கூறியது. “அரியகாட்சியராய்” என்றது, அப்பயன்றருந்தலைவரது பெருமையு மிலக்கணமுங்கூறி அவரையறிந்தடையும் உபாயமும் அடையாளமும் உணர்த்தியது. “வெந்த சாம்பல் விரையென” என்றது, ஆன்மாக்களது துன்ப ஏதுவாகிய மலங்களை நாசம்செய்யும் முறைமையும் பிறவும் கூறியது. “ஆட்பாலவர்க்கருளும் வண்ணமு” என்றது, அடையும்பக்குவரிலக்கணம் கூறியது. “ஏதுக்களாலுமெடுத்த மொழியாலும்” என்றது, அப்பரிபாகிகள் அத்தலைவனை இனிதிலடையும் சாதனமும் இடமும் துணையும் கூறியது. “ஆடும்மெனவும் மருங்கூற்றமுதைத்து” என்றது, “ஆடும், உதைத்துப்பாடும், அறுக்கும்” என்ற மூன்றும் உயர்வொப்பில்லாத அத்தலைவன் றன்பொருட்டுச்செய்ததன்று. பிறர்பொருட்டுத் தயவாலென்று கூறியது. “கடிசேர்ந்த போது மலரான்” என்றது, அத்தலைவன் அருச்சனை மறந்தார் தண்டிக்கப் படுவரொன்று கூறியது. “வேதம்முதல்வன் முதலாக” என்றது, அத்தலைவன் தன்னடைந்தார்க் கருளும் ஞானவெற்றி அருளப்பாட்டைக் கூறுமிட மிதுவென் றுணர்த்தி யதனைப்பற்ற விதித்தது. “ஒலிமாலை”=புராணம். “கலிகோவை”=ஞானவொழுக்கமுறைமை யுணர்த்துந்தொடர். “கலிகாமதேனு” என்பதனாற் பலபொருளொரு சொல்லாகிய கலியென்பது ஈண்டுஞானமென்னும் பொருளைக் குறித்து நின்றது, “பாராழிவட்டம் பகையானலிந்தாட்ட” என்றது, அத்தலைவரது திருவருளாற்றல் கூறியது. “மாலாயவனும் மறைவல்ல நான்முகனும்” என்றது, அத்திருவருட்டிறமிது வென்று கூறியது. “அற்றன்றியந்தண்மதுரை” என்றது, அத்தலைவனை முறையே காண்பவர்க்கு அனுமானமும் ஆகமமும் வேண்டா காட்சியளவையே போதுமெனத் துணிவு கூறியது. “நல்லார்கள் சேர்புகலி” என்றது, பலசுருதி கூறியவாறும்.

இங்ஙனம் இத்திருப்பாசுரச் சுருதிமொழிக்குக்கூறும்கருத்து, சேக்கிழார் “வெறியார்பொழிற் சண்பையர்வேந்தர் மெய்ப்பாசுரத்தைக், குறியேறியவெல்லையறிந்து கும்பிட்டேனல்லேன், சிறியே

ணறிவுக் கவர்தந் திருப்பாதந்தந்த, நெறியேசெறிதியா னறிநீர்மை கும்பிட்டேனன்பால்." என்று திருவுளம் பற்றியருளினார். ஆகவே யானும் அதுவென்க. இது நால்வகைச் சத்திநிபாதர்களுக்கும் தத்துவமுதலிய சங்காரம் உணர்த்து முபதேச முறைமை கூறியது ஏனைய குருமுகத்தால் அறிக. பின்பு பிள்ளையார் வெள்ளத்திலிட்ட திருவேடானது, பிறவிப்பெரு வெள்ளத்திலே தவவொழுககப் பெரியோர் மனம் பாசநீரவழியே போகாமல் எதிர்த்துச்செல்லுமாறு, மோதிவருகின்ற வெள்ளநீரை எதிர்த்துக் கிழித்துக்கொண்டு, அவ்வகையிலே, யாவர்க்கும் இதுவேபொருள், இதுவே வழியென்று காட்டி ஏறிச்சென்றது. அதுவுமன்றி, அத்திருப் பாசுரத்தில், பிள்ளைநாயகம், பெருந்தயவாலே "வேந்தனுமோங்குக,"என அநுக்கிரகம்வைத்ததால் அவ்வேந்தனுக்கு முன்னூழ்வலியால் நேர்ந்திருந்த பிறவிககூனும் நிமிர்ந்து "நெடுமாறன்" என்னும் புகழும்பெற்றார். அப்பொழுது தேவர் பூமழை பொழிந்தனர். முனிவர் வேதமொழியாற பல்லாண்டு கூறினர். அரசர்கோமான் அற்புதமும் ஆநந்தமும பெறறார். அருகர் அஞ்சித் தோற்றோமென றுடன்பட்டு நின்றார்கள். பின்பு எதிரேறிச் சென்ற திருவேடு தடைபடாது, மேல்நோககிக் கொண்டேபோக; அதனையெடுத்து வரும்படி, மந்திரியர் சூடாமணியார் குதிரையேறி யிருந்த விரைவோடும் பின்சென்றார். அதுகண்டு, பிள்ளைக்கோலங் கொண்டருளிய பெருமுதலிகள திருவருள் சுரந்து, "வன்னியுமத்தமு மதிபொதிசடையினன் பொன்னியதிருவடி புதுமலரதுகொடு, மன்னியமறையவர் வழிபடவடியவ, ரின்னிசைபாடலரேடகத்தொருவனே." என்னும திருப்பதிகத்தைப் பாடியருளினார். உடனே அத்திருவேடு வேகமடங்கிநிற்க, அங்கோர் சிவாலயத்தின் அருகு, மந்திரர் நாயகம் நீர்நடுச்சென்று, அத்திருவேட்டினை எடுத்துத், திருமுடிமேற்றாங்கி, அக்கரைக்கண்ணே திருககோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் பெருமானை வணங்கிப், பிள்ளையாரிருந்த திருத்துறையடைந்து, எங்குருமணியைப் பணிந்து, அரசன்முதலிய யாவருங்காண அத்திருவேட்டைக் காட்டினார். எம்பெருமக்களனைவரும் ஹர! ஹர! முழக்கஞ்செய்தனர். பின்பு, நீதிக்கிழவராகிய அரசர் பெருமான், குலச்சிறைப்பிரானை நோக்கி, இச்சமணாகள் முன்னமே பிள்ளையார் விடயத்தில் அபராதம் செய்திருத்தலால், அவர்கள் உடன்பாட்டின்படி, முறைசெய்க என்று கட்டளையிட்டார். அப்போது பிள்ளையார், பகை, நட்பு, இல்லாத ஜீவகாருணிய வடிவராகவே, அவர்கள் அறக்கருணைக்குத் தக்கபரிபாக மடையாது, திரிபுராதியர், சூரபன்மாதியர், இராவணன், இயமன் முதலியோர்களைப்போலும் மறக்கருணைக்கே யே

ற்ற பக்குவிகளாய்ச் சைவத்திருமடத்திற் றீங்குசெய்தபடியால் இவர் பக்குவத்திற் கிதுவே தக்கதென்று, வினையொப்பளந்து, அரசர் பெருந்தகை செய்யவிட்ட கருமத்தைத் தடுக்காது விட்டருளினர். உடனே மந்திரியார் அவர்கள் கூறியபடி யுலகறியக்கழுமா வரிசையிலேற்றினர். அக்கழுமுனையில் அவ்வெண் பெருங்குன்றத்து எண்ணாயிரவரும் ஏறினார்கள்.

அதன்பின்பு, பாண்டியர் பிரானுக்கு ஐயர், திருவெண்ணீறளித்தருளினார். அவரும் வணங்கி வாழ்த்திவெண்ணீறணிந்து சைவநிலைநின்றார். அந்நகரவாசிகளும் திருவெண்ணீறணிந்து சுத்தசைவராயினர். "அரசன் எவ்வழி அவ்வழி அக்குடி" என்னும் பழமொழி விளக்கமாயிற்று. வேதவழக்கும் எங்கும் நிரம்பியது. சைவந்தழைத்தது வேள்விகள் மலிந்தன. மழை குறைவறப்பொழிந்தது. எல்லாவளங்களும் வெறுக்கும்படி மிகவும் பலித்தன. இம்மை மறுமையின்பப் பயன்களோயாறிப் பிறவித்துன்பமொழிய வீட்டின்பமும் விளைந்தது. அஃதங்ஙனமாக; குழந்தைக்குருநாதன், உலகம்மையாகிய அங்கயற் கண்ணியாரோடும் அழகப்பெருமானைத் தரிசிக்கவேண்டி முத்துச்சிவிகைமே லெழுந்தருளினார். மங்கையர்க்கரசியும், மாறனும் சேவித்துச்சென்றார்கள். அடியார்களனைவரும் துதித்துப் பெருங்களியோடு மகிழ்ந்து உடன் எழுந்தருளினார்கள். யாவரும் கண்ணினாலடையும் பயனை யடைந்தார்கள். இவ்வாறுசென்று திருக்கோயிலைக்கண்டு தொழுது திருவாயிற் றிருமுற்றத்தில் சிவிகையை விட்டிழிந்து, திருப்பாண்டித் திருவரசி, அரசன், அமைச்சருமாகிய மூவருந் தொடர்ந்துசெல்லச் சந்நிதியையடைந்து, தொழுத கைதலைமேலேறத்துளும்பிய கண்களிலாநந்தவெள்ளம் பொழிய "வீடலாலவாயிலாய் விழுமியார்கணின்கழல், பாடலாலவாயிலாய் பரவநின்றபண்பனே, காடலாலவாயிலாய் கவாலிநீள்கடிமதிற், கூடலாலவாயிலாய் குலாயதென்ன கொள்கையே." என்னுந் தெய்வமறைமொழி பாடியருளினார். அரசவள்ளலும், வணங்கி "அமணர் மாயையான்மயங்கி யானும் உன்னை அறிந்திலேன் என் உறுபிணிதீர்த்து ஆட்கொள்ளப் பிள்ளையாரைத் தந்தனை இறைவ!" என்று துதித்தார். பின்பு, பிள்ளையார், சந்நிதிவிட்டு அரிதாக நீங்கிப்புறம்வந்து, திருமடம் புக்கருளினார். அரசனும் அரசபத்தினியும் வணங்கி விடைபெற்று அரண்மனைக்குச் சென்றார்கள். பின்பு ஐயர் "ஆலநீழலுகந்ததிருக்கையே" என்னும் திருயமகம்பாடி, அப்பதிகத்துள், "தாரமுய்த்தது பாணர்க்கருளொடே" என்று பாணத்திருவடிகளுக்குச்செய்த அருளப்பாட்டையும் சிறப்பித்து, அவரோடும் அளவளாவி யிருந்தார். பாண்டிநாடு முழுவதும் சைவமங்கலத்தாற் பொலிந்தோங்கி

யது. மன்னர் மன்னனும், மங்கையர்க்கரசியும், மந்திரிகள் வாழ்வும், நித்த மஹோத்சவங்கொண்டாடி வணங்க வள்ளலார் காலங்கடோறும் சென்று, சொக்கப்பிரானை வணங்கி வீற்றிருந்தருளினார்.

அக்காலத்தில், சிவபாதவிரதயர், சீகாழியில் எழுந்தருளியிருந்த காலமெல்லாம், மாதவப்பயனும் வள்ளலை எண்ணியெண்ணிப் பிரிவாற்றாமையால் பெரிதும் திருவுள்ளம் அலசுற்றிருக்கையில், அண்ணல், சமண் வாது முடிக்கப் பாண்டிநாட்டுக்கு எழுந்தருளியவாறு கேள்விப்பட்டு, ஆளுடையரசுகள் விடயத்தில் அஞ்சாது பல அபராதம் விளைத்த அவர்களோடு வாதுக்குச்சென்றபின், நடந்தன அறிவேனென்று எண்ணிப்போய், திருத்தோணிப் பெருங்கோயிலிருந்த பெருந்தேவியோடு பெருந்தகையை வணங்கி, வழிக்கொண்டு நேர்ந்த ஆலயங்களையெல்லாம் கும்பிட்டு, சோணாடுகடந்து, திருப்பாண்டித் திருவாலவாய்சேர்ந்து, சொக்கப்பெருமானையும் மண்ணரசாண்ட தெய்வப் பெண்ணரசியையுந் தரிசித்துக் குடந்தப்பட்டுக் கூத்தாடிப் பெருவாழ்வு பெற்றாராய்ப் புறம்போந்து, அங்கிருந்த பெரியோர்களை, மன்னவர் புண்ணியம் இருக்கும் திருமடம் எதுவென்று வினவினார். அதற்கவர்கள், மெய்யன்புடையார் தம் திருவுள்ளத் தாமரைக் கோயில்போலும் விளங்கும் இதுதான் என்று தெரிவிக்க, அங்கே தவக்கொழுந்தாகிய சிவபாதவிரதயர் சென்றார். அதுகண்டு அங்கிருந்த அன்பர்கள் அவரை வணங்கி, எம்பெருமான் சந்நிதி பணிந்து, அப்பர் சீகாழியினின்றும் எழுந்தருளினார் என்று விண்ணப்பித்தார்கள். அதுகேட்டு, எம்பந்த மறுக்குஞ் சம்பந்தநாதனும், "எப்பொழுது எழுந்தருளிற்று என்று எதிர்கொள்ளச் சிவபாதவிரதயமுனிவரும் தொழுது முன்அடைய, பிள்ளைப் பெருந்தகையும் தொழுது, பெருவெள்ளத் திருத்தோணியிருந்த இருமுது குரவரையும் எண்ணிக்கரைந்துருகி ஐயரோ! "என்னை அறியாப்பருவத்தே யெடுத்து ஆண்டபெருந்தகை எம்பெருமாட்டியுடன்" இனிது "இருந்ததே" என்று "மண்ணினல்லவண்ணம் வாழலாம்" என்னுந் திருப்பதிகத்தால் வினவியருளியபின், அவர்க்கு விருந்தமுது செய்வித்திருக்குநாளில், மற்றைய திருப்பதி வணங்கவேண்டிப், பொய்யடிமையில்லாத புலவர்களுக்கு அருந்தமிழ்ப் பொருள்முழுவதும் பாடியளித்த அந்தணனை வணங்கியருள்விடைபெற்று, அப்பாண்டியரசும், அரிவையர்க்கரசும், அமைச்சரசும், பிரிவு அஞ்சிஅயர்ந்து, ஆணைபெற்று, பின்செல்லச்சென்று, திருப்பரங்குன்றம், திருஆப்பனூர், திருப்புத்தூர், திருப்பூவணம், திருக்கானப்பேர், திருக்குற்றாலம், திருக்குறும்பலா, திருநெல்வேலி முதலியதிருப்பதிகளை அடைந்து பதிகம்பாடித் திருவிராமீச்சரஞ்சேர்ந்து, பணிந்து, தமிழ்மறைபா

டி. அங்கிருக்கையில், ஈழநாட்டின்கணுள்ள, திருக்கோணமாமலை, மாதோட்டத் திருக்கேதீச்சரமும் பாடிப்பின், திருவாடானை, திருப்புனவாயில் முதலிய பல திருப்பதிகளையுஞ்சென்று வணங்கி குலச்சிறை எந்தை திருவவதாரத் தெய்வத்தலமாகிய திருமணமேற்குடியிற் சிலநாளிருந்து, திருவாலவாய்க்குவந்து, பரகதி பாண்டியர்க்கருளிய பால்வண்ணப் பேரழகனைப் பணிந்து வீற்றிருந்தருளினார். பின் காவிரிநாட்டிற்கு எழுந்தருளத் திருவுள்ளஞ் செய்தபோது, மாதேவியாரும், மதிகுலத்தரசும், மந்திரரேறும், பிரியமாட்டாது அஞ்சி வருத்தமுற்றார்கள் அதுகண்டு காழிப்பிரான் நமது சொல்லைக் கடவாதீர்கள். சைவசன்மார்க்கவொழுக்கத்தைப்பாதுகாத்து வரக்கடவீர்களாக என்று திருவாய் மலர்ந்தருளினார். அதனைமறுக்க அஞ்சி, தங்கள் திருநகரத்திற்கு மீண்டுசெல்ல உடன்பட்டு, பணிந்துநின்றார்கள். பின், பிள்ளையார், பாண்டிமாநாடுவிடுச் சோழநாடடைந்து, திருக்களர், திருப்பாதாளீச்சரம், பணிந்து, திருமுள்ளிவாய்க்கரைக்கு எழுந்தருளினார். அங்கு வெள்ளம்பெருகி ஆறு அடைத்தலால், ஓடத்தைச் செலுத்துவோர்கள் கோல்நிலையாததுபற்றி இக்கரையில் நிறுத்திப்போயிருந்தார்கள். ஆகவே பிள்ளையார், திருக்கொள்ளம்பூதூர் எதிர்தோன்ற, அப்போதே தரிசிக்கவேண்டுமென்னும் தீவிரத்தால் ஓடக்கட்டை அவிழ்த்து, திருக்கூட்டங்களையெல்லாமேற்றித் தாமுமேறி, திருநாமேகோலாக, "கொட்டமேகமழுங் கொள்ளம்பூதூர், நட்டமாடிய நம்பனையுள்கச், செல்லவுந்துக சிந்தையார்தொழ, நல்குமாறருணம்பனே." என்னும திருப்பதிகம்பாடிய உடனே அவ்வோடம், இனிது நடந்து, அக்கரைசேர்ந்தது. ஒழியாத பிறவிக்கடலைக் கடக்கும்படி, அடைந்த பக்குவாத உடம்பாகிய வோடத்தை முத்திக்கரைக்குச்செலுத்த வல்ல, அம்மறைமொழிக்கு இஃதோர் அரியசெய்கை அல்லவாயினும், யாம் துன்பவெள்ளக்கரையேறுவதற்குக்கொண்ட மனமென்னுந் தோணிக்கு ஒத்த மந்திரக்கோலிதுவென்பது, விளக்கியவாறு என்றுணர்க.

பின் ஐயர் ஓடம்விட்டிழிந்து, திருக்கோயிலையடைந்து பெருமானைப் பணிந்துபாடி, வலம்வந்து, புறம்போந்து, அங்கு திருமடஞ் செய்திருந்தார். அந்நாளில், முன் சமணவாதிலே தீயில் வேகாதிருந்த மறைமொழிப் பொருளாகிய திருநள்ளாறுடையாரைத் தரிசிக்கத் திருவுள்ளஞ்செல்ல, திருநள்ளாற்றையடைந்து போகமார்த்த பூண்முலையாள் மணாளர் திருச்சந்நிதியடைந்து, வலம்வந்துபணிந்து, ஆராமையுடன். "பாடகமெல்லடிப் பாவையோடும்" என்னும் திருப்பதிகம்பாடித் திருவாலவாயிற்செய்த அருளப்பாட்டினைத் துதித்து புறம்வந்து, திருமடஞ்செய்திருந்து, அங்கிருந்து

திருத்தெளிச்சேரி முதலிய திருப்பதிகளை வணங்கி, அப்புறஞ்சென்று, புத்தர் வாழ்கின்ற போதிமங்கை, என்னும் ஊரைச் சமீபித்தபோது சிவனடியார்கள்செய்த ஹர, ஹர, முழக்கமும், சின்னந்தாரைகாளத்தினெழுந்த "பரசமயகோளரி" என்னும் தெய்வப்பேரொலியும் கேட்டு, அங்கிருந்த புத்தர்கள் மனம்பொறாமல், கொதித்து எழுந்து, தங்களில் மிகவும் கல்விவல்ல புத்தநந்தி முதலியவர்களோடுசென்று, தங்களூர்எல்லையில் வரும்போது எதிரடைந்தார்கள். அப்போது, புததநந்தியானவன், கோபித்து, எங்களை வாதிட்டு வெற்றிகொண்ட பின்பு அல்லவோ? உங்கள் ஜய சின்னம் பிடிக்கவேண்டும் என்று மறுத்தான்.

அதுகேட்டு, அத்திருக்கூட்டத்தி லிருந்த அடியவர்கள், இவர்களை யிங்கு தண்டிக்காவிட்டால், முறைதவறிச் செல்வார்கள் என்று எண்ணி, பெருமான் முன்சென்று வணஙகி விண்ணப்பித்தார்கள். அவ்வருளாளன் அவ்விண்ணப்பத்தைத் திருச்செவி சாத்தி, நலலகாரியமே அப்புத்த நந்திசெய்யும் தருக்கவாத நிலைமையையும் அச்சமய முடிபையும் அறிவோம் என்று திருவாய் மலர்ந்தருளினார். அத்தருணத்தில், திருப்பதிகத் திருமறையைத் திருமுறைசெய்து எழுதியாளுகின்ற பெருந்தொண்டராகிய சம்பந்த சரணாலயர், அப்புத்தநந்தியின் பரிபாகஅளவு நோக்கி, ஆளுடைய பிள்ளையார் திருவாய்மலர்ந்த திருப்பதிக மந்திரத்துள்ள, 'புத்தர்சமண் கழுக்கையர் பொய்கொளாச், சித்தத் தவர்கடெளிந்துதேறின, வித்தகநீறணி வார்வினைப்பகைக், கத்திரமாவன வஞ்செழுத்துமே" என்னும், "அத்திரமந்திரத் திருவாக்கை" யோதி, இப்புத்த நந்தியின தலை யிடியிடித்து விழ உருண்டுவீழ்ந்தொழிக என்று சாபவுரையை, விட்டருளினார். இச்சைவத் திருவாணையை யேவி யருளிய மாத்திரத்தில், அது ஆன்மகோடிகளுக்கு நேரிடும் பகை, கவலை, நோய், மரணமுதலிய இடையூறுகளை நீக்குந் திருமந்திரமாதலால், சத்தியவாககிய விரதசீலராகிய அப்பெரியவர் திருவாக்கில் நின்றும் புறப்பட்டு, பெரிய இடியேறுபோற் சென்று, வீண்சொற்போர் செய்யவந்த அப்புத்தநந்திதலையையும் உடலையும் பிளந்து அழித்துவிட்டது. இச்செய்கை அடியார்களுக்கு நேரிடும் எவ்வகைப்பட்ட இடையூறுகளையு நீக்குங் கருணைவல்லபத்தை விளக்கியவாறாயிற்று. ஆகவே, இதனைக்கண்ட ஏனையபுத்தர்கள் கூட்டம் துணுக்குற்று அஞ்சிக் குலைந்து திசைகெட்டோடி விட்டது. அவ்வற்புதத்தை அருகிருந்தவர்கள் பிள்ளைப்பெருமான் சந்நிதியில விண்ணப்பித்தார்கள். பிள்ளையாரும், "எதிர்ந்த விலக்கு நீங்க உற்றவிதி அதுவேயாம்." ஆதலால் ஹர! ஹர! முழக்கம் யாவருஞ்செய்கவென, அத்தெய்வப்பேரொலி சிற

ந்தது. பின்பு அஞ்சியோடிய புத்தர்களெல்லாம் பெரிய ஆச்சரியத்தோடு மறுபடியும் திரண்டுவந்து, இது ஏதேனும் வஞ்சனையோ? அல்லது, அச்சைவ சித்தாந்தத்தின் உண்மையோ? என்று மருண்டு சிந்தித்து,பின்பு,தங்களிற் சிறந்த தேர்ச்சியுடைய சாரிப்புத்தனை முன்னிட்டுவந்து, இனி மந்திரவாதம் வேண்டுவதில்லை; அவரவர்களது பொருட் கொள்கை பற்றிப்பேசும் தருக்கவாதமே தக்கது என்று கூறினார்கள். அதனைக்கேட்டருளிய பிள்ளையார், நல்லது என்று, உடனே சிவிகைவிட்டிழிந்து அங்கொரு சத்திர மண்டபத்திற்குச் சென்று வீற்றிருந்தருளி, வாதுவிரும்பிய புத்தனை அழைக்கும்படி கட்டளையிட்டார். பரிசனங்களும் சென்று, அவர்களை அழைத்தார்கள். அப்போது சாரிப்புத்தன மற்ற புத்தர்களோடுசென்று, தமிழ்நாயகன் சந்நிதியில் நின்றான்.

அங்கே புத்தநந்தி தலை பொடிபடச்செய்த புனிதத்தொண்டர் எழுந்தருளிச் சைவாசிரியனை வணங்கி, அருள்பெற்று, அச்சாரிப்புத்தன்முகமாய், இனி உங்கள் தெய்வத்தையும் பொருளின் திறத்தையும் சொல்வாயாக என்று வினவினார். (அதற்குச்சாரிப்புத்தன்)"தோன்றியழிகின்ற கணபங்கவியாயத்தால், தானம்தவம் யோகம இவற்றைச் செய்ய இடையறாது தோன்றிவரும் ஞானத்தினாலே பேரின்பமுத்தி அடைந்தவன் யாரோ? அவனே முன் தருமங்கள் எல்லாம் விளங்கக்கூறிய பிடகநூற்சொன்ன எங்கள் கடவுள்" என்றான். அதுகேட்ட (அச்சைவமணி) உங்கள் தலைவன்பெற்ற முத்தியாது என்று வினவினார். (அதற்குப்புத்தன்,) "உருவம், வேதனை, குறிப்பு, செய்கை, விஞ்ஞானம், என்னும் பஞ்சஸ்கந்தமும் கெடுதலேமுத்தி" என்று விடைகூறினான்.மேல்; (ஐயர்)"இவ்வாறு,பஞ்சஸ்கந்தமுங்கெட்டபோது,உங்கள்கடவுள் எங்கேயிருககின்றான்,பூசைகொள்ளுவார்யார்."என்றார் (புத்தன்) "ஸ்கந்தத்தாலாகிய வினையுடம்பு நீங்கிப்போக முத்தியிற் கலந்திருககின்றான் என்றான். (மேல்வினா,) "மெய் வாய் கண் மூக்குச் செவியெனனும் பொறிகளும்,மனம் என்னும் கரணமும் அழிந்துவிட்டதேல அவன் எவ்வாறு அறிவான்." என்றார். (புத்தன) "அறிவிலலாமல் உறங்கினவனை வைதவனுக்குப் பாவம் வருவதுபோலும், வந்தனைவழிபாடு முதலிய நன்மைசெய்தவனுக்கு நன்மையும் வரும் என்றான்." (மேல்மறுப்பு) "உறங்கினவன் வைதலாலும் வழிபாட்டாலும் வரும்பயனடைத லில்லை என்று மறுத்தார்." (புத்தன்) "அவ்வுறங்கினவனைக் கொன்றவனுக்குக் கொலைப்பாதகம் வந்தாற்போலும், எங்கள் கடவுளுக்கு யாம்செய்யும் வழிபாடு சென்றடையும் என்றான்." (மேல்மறுப்பு) "நீ இங்கே உறங்கினவனை எடுத்துக் காட்டாகக் காட்டியதனால் உங்

கள் கடவுளுக்கு உடலில் அடங்கிய காரணமும் உயிரும்வேறு இருக்கவேண்டுவதாயிற்று. ஆகவே, அவன் முத்தியிற்கலந்தவன் அல்லன். அன்றியும் அந்தஸ்கந்தங்கள் கெட்டாலும் வீட்டின்பமும் கூடாது" என்று மறுத்தார். அதுகேட்ட புத்தன்வேறு சொல்ல வகையில்லாமல், முத்தியென்பதுவும் பாழாயிற்றே என்று கவலை கொண்டு நின்றான். அப்போது (ஐயர்) "உங்கள் தலைவனாகிய கடவுள், முத்தியடைவதற்குமுன்பே, எல்லாம் அறிந்து "பிடகநூலைக்" கூறிப்போயினான் என்று கூறினையன்றோ? அவன் எவ்வாறு எல்லாம் உணர்ந்தது. இது, இல்லாததைக்கூறிய வாறாமே, என்றார். (புத்தன்) "உணர்ச்சியானது, பொது வுணர்ச்சி எனவும், சிறப்புணர்ச்சி எனவும் இருவகைப்படும்; அவற்றுள், பொது வுணர்ச்சி யாவது, மரங்கள் எனப்பொதுவாக அறிதலாம். சிறப்புணர்ச்சியாவது, இதுமா, இதுபலா, இதுதெங்கு, இது கமுகு, இது தேக்கு, எனப்பிரித்து அறிதலாம். இவ்வாறு, பொருள்கள் எல்லாம் வரம்பின்றிக் கிடக்கும். இனி அங்ஙனம் பொதுவாக அவ்விறகைக் கொண்டுவந்து ஓரே குவியலாகச் சேர்த்தாலும், சிறப்பு வகையால் வேறுவேறாகச் சேர்த்தாலும், தீயானது ஓரே தன்மையாய்ச் சுட்டுவிடும். அதுபோல எங்கள் தலைவனும் அப்பொருளைத் தொகுத்தும் விரித்தும், உணர்வான் என்று கூறினான். (மேல் மறுப்பு) நீ இங்கே, அக்கினியை அறிவுக்கு எடுத்துக் காட்டாகச் சொன்னாய். ஆனால், அக்கினிக்குக் கண்ணாற்காணும் உருவம் இருக்கின்றது. அறிவுக்கு அவ்வுருவமில்லை. அதுவுமன்றி, அவ்வறிவையுடைய உங்கள் தலைவன் நிகழ்காலத்தின் கணுள்ள பொருள் செய்திகளையறிவதுமே யல்லாமல், இறந்தகாலம் எதிர்காலம் இவற்றின் கணுள்ளவற்றையும் அறிவான் என்று சொன்னாய். அந்தபக்ஷத்தில், அக்கினிநிகழ்காலத்தின கண்ணே யுள்ளபொருளை மாத்திரம் பற்றுமன்றிக் காணப்படாத இறந்தகாலம் எதிர்காலத்திலுள்ளனவற்றைப் பற்றாது. ஆகவே இது திஷ்டாந்தாபாசம். ஆதலால், உங்கள் கடவுள் எல்லாம் உணர்ந்ததுவும் உங்கள் முத்தி எவ்வாறு பொய்யாயிற்றோ? அவ்வாறு பொய்யா யொழிந்தது. இங்ஙனம் அறிந்தது பொய்யாய்விடவே, அவன் பொய்யறிவாலுரைத்த நூலும் குற்றமுடையதே யாம். என்று அச்சாரிப்புத்தனது உள்ளம் பொருந்த மறுத்தருளினார்.

அப்போது, அச்சாரிப்புத்தன் முதலிய புத்தர்கள் வேறு தருக்கம்பேச வகையில்லாமல் தோல்வி அடைந்தார்கள். சம்பந்த சரணாலயசுவாமிகள்வெற்றியோடும் ஆசிரியர்பெருமான முன்சென்று பணிந்தார். புத்தர்களும், சென்று தோற்றோமென்று வணங்கி நின்றார்கள். அது கண்டு, குருசிகாமணியும் அவர்களுக்குக் கருணை

யோடும் முன்னே பார்த்தலாகிய சக்ஷுதீக்ஷை செய்து, வாசக தீக்ஷையாலே சைவமொன்றே முடிவான வுண்மைப்பொருளதாவ தன்றி வேறொன்றுமில்லை என்னும் நிச்சயஞானமானது, ஐயம் திரிபு அறியாமை என்னு முக்குற்றங்களுமற வேதாகமாதியாலும், சற்பாவமாகிய பாவனாதீக்ஷையாலும் அனுபவசித்தமாகும்படி உப தேசித்தருளினர். உடனே அங்ஙனம், அகண்ட சிவஞானயோகச் செல்வச் சுத்த சைவர்களாய் ஆராமையோடும் கண்களி னின்றும் பொழிந்த "அன்புநீரால்" அவ்வாசிரியநாதன் திருவடிக்கு அபி டேகம்செய்து வாடாத "சொன்மலர்"சாத்தி, யாம் உண்மை யுணர்ந்தோமென்று எழுந்திருக்கும் "தற்போத" நிவேதனஞ் செய்து, "தம்மையிழந்துமிழவாத" தூபதீபங்கொடுத்து, "உடல் பொருள் ஆவி" என்னு மூன்றினையும் முழுவதும் தமது உரிமை யறக்கொடுத்தலாகிய காணிக்கை செலுத்தி நின்றார்கள். பூமழை பொழிந்தது. இவ்வண்ணம், எம்பெருமான் முன் சமணர்கள் விட யத்தில் மறக்கருணையான தீக்ஷைசெய்தருளிய தான், இச்சா ரிப்புத்தன் முதலிய புத்தர்களின் பரிபாகநோக்கி அறக்கருணை யான தீக்ஷைசெய்தருளி, நிற்பனவும் நடப்பனவுமாகிய வுயிர்கள் முழுவதும் சிவமயமான சைவமே என்னும் அநுபவநிலைமையை அனுக்கிரகஞ்செய்து, மற்றைத் திருப்பதிகளை வணங்கும்படி திருக் கடவூர் அடைந்து பணிந்து, அங்கு வீற்றிருந்தார். அக்காலத்தில் அப்பர் திருப்பூந்துருத்தியுளிருந்தவாறு கேள்விப்பட்டு, அவரைத் தரிசிக்கவேண்டும் என்னும் அன்புமிகுதியின் திருக்கூட்டத்தோ டும், காவேரித் தென்கரையின் பல திருப்பதிகளையும் தரிசித்துக் கொண்டு திருப்பூந்துருத்திக்குச் சமீபமாக எழுந்தருளினர்.

அதனை அரசுகள், கேள்விப்பட்டு, பேரானந்தமடைந்து, எதிர் சென்று வணங்கும்படி வந்து, திருச்சின்ன வொலி கேட்டுச் சென்று தரிசிக்கநெருங்கிய திருக்கூட்டத்தின் நெருக்கத்திலே ஒரு வரும் காணாத வகைபுகுந்து, திருமேனி எல்லாம் பூமியிலேபடும் படி நமஸ்காரம்செய்து, எழுந்து, ஆராமைமேலிட்டால் பிள்ளை யார் முத்துச்சிவிகைக் கணையைத் தாங்குமவர்களோடு தாமும் தாங்கி, களித்துச்செல்லும்போது சிவஞான சம்பந்த வள்ளலா ரது திருவுள்ளத்தில், துணுக்கென வேறொரு தோற்றம் உண்டா கவே அருகிருந்தவர்களைநோக்கி, எம்மப்பர் இப்பொழுது எங்கு எழுந்தருளி யிருக்கின்றார் என்று வினவினர். அதுகேட்டு, ஆளு டைய அரசுகள், பெருந்தவம் முன்செய்துடையே னாதலால், இதோ! திருவடியைத்தாங்கி வரப்பெற்றுள்ளேன் என்றார். பிள்ளை யார் அதுகேட்டஞ்சி உடனே சிவிகை விட்டிழிந்து, இவ்வாறும் என்னுடையீர்! செய்தருளலாமோ? என்று நமஸ்காரம்செய்தார்.

அதற்கு அரசுகள், ஐயரே ! எங்கள் சிவஞான சம்பந்தர்க்கு யான் மற்று எவ்வாறு செய்யத்தக்கது என்று பிரதி நமஸ்காரம் செய்தார். அப்போது, சூழவந்திருந்த அடியவர்கள், அவ்விருபெருங் குரவர் அளவளாவுதலைத் தரிசித்து, பேரானந்தம் அடைந்து ஒருமுகமாகப் பணிந்து ஹர! ஹர! முழக்கஞ் செய்தார்கள். ஒருவரையொருவர் தழுவி யுடன்சென்று, திருப்பூந் துருத்தியை யடைந்து, திருக்கோயிலை வலம்வந்துபொய்யிலியப்பரைபபணிந்து, துதித்து, புறம்வந்து, திருமடஞ்செய் திருந்தார்கள். அப்போது, அரசுகள், கவுணியர்நாயகரைநோக்கித்திருப்பாண்டிக்குச்சென்றுவந்தவாறு கேட்கப்பிள்ளையார்நடந்தவிபவங்களைத்திருவாய்மலர்ந்தனர். அது கேட்டு, என்னையரே! சைவ சன்மார்க்கப் பயிருக் கொருவேலியே ஆயினீர் என்று தொழுதருளினார். பிள்ளையாரும் எதிர் தொழுது அப்பாண்டித் திருநகரத்தின் விளக்கமாகி யிருக்கும மாதரரசி மானியார பெருமையையும், மந்திரர் பெருந்தகை குலச்சிறையார் திருத்தொண்டின் சிறப்பையும், விரித்துரைத்தருளினார். இங்ஙனம் அம்மெய்யன் புடையார் அருமைபெருமைகளையும, அரசனும்நாடும்ஆருயிரும் அருட்செல்வமும் பெற்றவாறும்கேட்டுநாவுககரசுகள் திருவுள்ளரு சாலவு மகிழ்ந்து, தாம் தெய்வதன்மை பொருந்திய ஸ்ரீ தொண்ட மண்டலத்தை யடைந்து, திருவேகாம்பரத்தை வணங்கப் பெற்ற மஹாவைபவங்களை யெல்லாம் திருவாய் மலர்ந்தருளக் கேட்டுப் பிள்ளையார் தாமும் திருவேகாம்பரம் வணங்கத் திருவுளஞ்செய்திருந்தார். பின் அரசுகள தாம் முன இருந்த திருமடஞ்சென்று வீற்றிருந்தருளினார். அந்நாளில, ஆளுடைய அரசுகளுக்கு ஆலவாயுடையாரை வணங்கப் பெருங்காதலுண்டாக,பிள்ளையாரும் சீகாழிக்கு எழுந்தருளுந் திருவுளளமாக இருவருஞ் சென்று, பூந்துருத்திப் பொய்யிலியப்பரை வணங்கி விடைபெற்றுப் புறம்வந்தணைந்தார்கள். அங்கே, அரசுகள் திருப்பாண்டிநோக்கி எழுநதருளினார். பின்பு பிள்ளையார காவேரி வடகரை யோரமாகச்சென்று, திருநெய்த்தானம், திருவையாறு,திருப்பழனம், முதலிய திருப்பதிகளைத் தரிசித்து வணங்கி ஸ்ரீ காழிககு எழுந்தருளினார். அப்போது அங்கிருந்த பெரியர்கள், பிள்ளையார திருப்பாண்டியில் சைவப்பயிர் தழையச் செய்து, எழுந்தருளிய மங்கலங் கேட்டுப் பெருங்களிப்போடும் எதிர்கொள்ளப் பிள்ளையாரும் சிவிகைவிட்டிழிந்து, அவர்களோடு தோணிப் பெருங்கோயில்வலம் வந்து, சிகரம்பணிந்து, உட்புகுந்து, திருமுலைசுரந்த வொருபெருந்தாயையும் உலகுய்ய வருளிய உயர்பெருந் தந்தையையும் பலகாலும்பணிந்து அன்புபெருகக் கண்ணீர் ததும்ப, மொழிகுழறத், தொழுதுநின்று, "உற்றுமை சேர்வது மெய்யி

னையே" என்ற திருயமகத் திருமறைபாடியருளித் திருவருட்போகமூழ்கி அரிதுதெளிந்து புறம்போந்து, தலத்தந்தையாரும் அடியார்களும் புடைசூழ, கற்புடைமாதர் மங்கல ஆசிகூறத் திருவீதி கோலநிரம்பச் சென்று, திருமாளிகைத் திருமடத்தைச் சார்ந்தருளினார்.

அப்போது திருநீலகண்டயாழ்ப்பாணத்திருவடிகள்திருமனைக்குச் செல்லவிடைகொடுத்து, தாம் திருமாளிகைககு உள்ளெழுந்தருள, தவத்தாயாராகிய பகவதியார் அட்டமங்கலமேந்திய சுமங்கலிகளோடும் எதிர்சென்று தொழுதார். பிள்ளைப்பெருந்தகையாரும பெருந்தோணித் திருத்தாயை யெண்ணித் தொழுதுசென்று வீற்றிருந்தருளினார். அந்நாளில திருக்கச்சித்திருவேகாம்பரத்தைத் தரிசிக்கத் திருவுளங்கொண்டு, கூடவிருந்த அடியார்களுக்குத் தெரிவித்து, திருத்தோணிநாதர் திருவருள்பெற்று, தொண்டமண்டலத்தைநோககி புறப்படக்கண்ட தவத்தாதையார் பின்தொடர; அவரை அபபரே! நீர் இஙகுதானே வேதவேள்வியோடு, சிவதரிசனம்செய்து இருத்தல வேண்டுமென்று நிறுத்தி, மற்றையர்க்குமீள விடைகொடுத்தெழுந்தருளி, சிதம்பரம், திருத்தினைநகர், திருமாணிகுழி, திருப்பாதிரிப்புலியூர், திருவடுகூர், திருவக்கரை, திருஇரும்பைமாகாளம், திரு அதிகை வீரட்டானம், திருவாமாத்தூர், திருக்கோவலூர் வீரட்டானம், திரு அறையணி நல்லூர், முதலிய தலங்களையும் திருவண்ணாமலையையும் பணிந்து தொண்டமண்டலத்துள்ள திருவோத்தூரில் அடியார்கள் எதிர்கொள்ளத் திருக்கோயிலையடைந்து வணங்கிப் பதிகம்பாடித் திருமடஞ் செய்திருககும நாளில், ஒரு சிவனடியவர் வந்து நமஸ்காரம்செய்து அழுதுதொழுது, எம்முடையீர்! அடியேன் இங்கு திருப்பணிக்காகவைதத பனைமரமுழுவதும் ஆண்பனை யாகவே, சமணர்கண்டு, "அரனுக்கு இடுபனை ஆண்பனை ஆயிற்றே" என்று இழிவுகூறுகின்றார்கள். ஆதலால அதனை ஒழித்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ்செயதார். அதுகேட்டுப் பிள்ளைப்பிரான், அவரது பரிவைநோககி, கருணையோடும் ஆலயத்திற்குச் சென்று, ஆளுடையானை வணங்கி, "பூத்தொத்தாயின" என்னும் திருமறையுள், "குரும்பையாண்பனையீன் குலையோத்தூர்-அரும்புகொன்றையடிகளைப் பெரும்புலியுண் ஞானசம்பந்தன் சொல், விரும்டவார் வினைவீடே" என்றருளிச்செய்தனர். உடனே, அவ்வாண்பனை, பெண்பனையாய்க் குலையிட்டுக் காய்த்தமைகண்டு யாவரும் பெருவியப்படைந்தனர். அசதியுரையாடிய சமணரிற் சிலர் அவ்விடம்விட்டுப் போயினர். சிலர்சைவராயினர்கள். பனைமரங்களெல்லாம் ஓரறிவுயிரே யாயினும் பிள்ளையார் திருவாக்கிற் றோன்றிய

படியால் முன் பாசங்கழன்று, இனிவரும் பிறப்பையெல்லாம் ஒழித்து முத்திபெற்றன. இது ஆசிரியர் வாசகதீக்ஷையின் மகிமையையுணர்த்திற்று. பின்பு பிள்ளையார் திருமாகறல், திருக்குரங்கணின் முட்டம்சென்று தரிசித்து, ஸ்ரீகாஞ்சித் தெய்வப்பதிக்குச் சமீபமாகச்செல்ல அங்குள்ள அடியார்கள் வீதிகளைப்பூம்பந்தர் வாழை கமுகு தோரணம் அட்டமங்கல முதலியவற்றால் அலங்கரித்து, வேதகீதமும் மங்களவாத்தியமும் முழங்க எதிர்கொண்டு சென்று வணங்கினார்கள். பிள்ளையாரும் திருவெல்லை தொழுது, ஆலயமடைந்து, கோபுரம்வணங்கி, அறம்வளர்த்த ஆளுடைநாயகி தழுவக்குழைந்த தத்துவனைத் தரிசித்துப் பேரானந்தப் பெருவாழ்வுற்று, "மறையானை" என்னும் திருப்பதிகமோதி அருள்பெறறுபுறத்தணைந்து, திருமடஞ்செய்திருந்து, திருவேகாம்பரத்தையும், அம்மை திருக்காம கோட்டத்தையும பணிந்து, பலபதிகம்பாடித் திருக்கச்சிநெறிக்காரைக்காடு, திருமேற்றளி, திருஅனேகதங்காவதம், திருவோணகாந்தன்றளி, திருக்கச்சிமயானம், திருககசசிப்பலதளியும் வணங்கி, சிலநாளங்கிருந்து புறப்பட்டு, திருமாற்பேறு, திருவல்லம், திரு இலம்பயங்கோட்டூர், திருவிற்கோலம், திருவூறல், முதலிய திருப்பதிகளைத் தரிசித்துத் திருப்பழையனூர் ஆலங்காட்டிற்குச் சமீபத்தில் எழுந்தருளியபோது, அது முன் காரைக்காற் பெரியவம்மையார் தலையால நடந்தருளப் பெற்றதென்று மிதிக்க அஞ்சி, பக்கத்துள்ளதோர் திருப்பதியை யடைந்து, அன்றிரவு திருப்பள்ளி செய்திருந்தபோது கனவிலே திருவாலங்காட்டப்பர் எழுந்தருளி ஐய! நம்மைப்பாடுதற்கு மறந்தனையோ? என்று அருளிச்செய்ய; உடனே பிள்ளையார் உணர்ந்தெழுந்து, "துஞ்சவருவார்" என்னும் திருப்பதிகமபாடியருளினார். மறுநாள் காலையில் அவ்விபவத்தை யடியார்களுக்குச் சொல்லித் திருப்பாசூர், திருவெண்பாக்கம், திருக்காரிகரை, முதலிய திருப்பதிகளை வணங்கித் திருக்காளத்திக்குச் சமீபமாக எழுந்தருள அடியார்கள் எதிர்கொண்டனர். பிள்ளையார் சிவிகைவிட்டிழிந்து, எந்தை திருக்காளத்திமலை எது, என்று வினவினார். அருகிருந்தார் இதுதான் என்று குறிப்பிக்க; பிள்ளையார் ஆராமையும் அன்பும் பெருக "வானவர்கடானவர்கள்" என்ற திருப்பதிகத்திற் கண்ணப்பதேவர்திருத்தொண்டைப் புகழ்ந்துபாடி, திருபொன்முகலிக்கரை யடைந்து தொழுது, திருமலை யடிவாரஞ்சேர்ந்து வணங்கி அஞ்சலியஸ்தராய் சோபானமார்க்கமாகத் திருமலையேறி திருவாயில்பணிந்து, வலம்வந்து, மலைகொழுந்தைத் தரிசித்துப் பலமுறை நமஸ்காரஞ்செய்து, துதித்து அருள் வெள்ளமூழ்கி ஆனந்த பரவசரானார். பின்பு அரிது நீங்கி அடிவாரஞ்சார்ந்து, திருமலையை வணங்கி, அ

ங்குள்ள அடியவர்கள் அமைத்த திருமடத்தில் எழுந்தருளி யிரு ந்து, காலங்கடோறும் காளத்திபாண்டாரைத் தரிசித்திருந்தார். அக்காலத்தில், வடதிசையும் மேற்றிசையும் கடவுட்டமிழ் வழங் காத திசையாமாதலின் அவ்விடஞ்செல்லாது, இருந்தவாறே அங் குள்ள ஸ்ரீ கைலாயம், திருக்கேதாரம், திருப்பருப்பதம், திரு இந் திரநீலப் பருப்பதம், திருஅனேகதங்காபதம், திருக்கோகரணம் முதலிய திருப்பதிகளை யெல்லாம் பாடித் துதித்து, திருவொற்றி யூருடையாரைத் தரிசிக்கும் ஆசை திருவுளத்திலெழ, காளத்தி நாதனை "சந்தமாரகில்" என்றெடுத்து, "எங்கையாரிணையடி என் மனத்துள்ளவே" என்றுபாடி அருள்பெற்றுப்புறப்பட்டு, திருப் பாலியாற்றின் கரையேவந்து, திருவேற்காடு, திருவலிதாயம், முத லிய திருப்பதிகளைத் தரிசித்து திருவொற்றியூருக்கு வந்தருள அங் குள்ள அடியார்கள எதிர்கொண்டு தொழுகார்கள். பிள்ளையாரும் சிவிகைவிட்டிழிந்து தொழுதுசென்று, திருக்கோயிற் றிருவாயிலை ப்பணிந்து, உளளேசென்று, படம்பக்கவாணரைத் தரிசித்துப்பர வசராய், "விடையவன விண்ணும் மண்ணும்" என்னும் பதிகம் பாடி ஆநந்த வெள்ளமூழ்கி அங்கே யிருந்தார்.

அங்ஙனம் இருக்க; அடுத்த திருமயிலாபுரியில், வைசியகுல திலகராகிய "சிவநேசர்" என்பவர் மரக்கலத்தாற் றும் பொருட் செல்வத்தை எல்லையின்றி வளர்ப்பதுபோல; உடற்கலத்தால் அ ருட்செல்வத்தையும் வளர்ப்பவராய், தமது உடல், பொருள், ஆவி மூன்றினையும், குருபத்தி, ஈசுரபத்தி, அடியார்பத்தி என்னும் மூ ன்றற்கும் ஒப்புக்கொடுத்துப் பரசமயக் கொள்கைகளை ஒழிக்குஞ் சித்தத்தோடு இல்லறதருமம் வழுவாது நடத்திவரும்நாளில், கவு ணியர் பெருமான், சிவஞானபோனக முண்டருளியது முதலிய சுபசரிதங் கேள்விப்பட்டு, அன்புசெலுத்தித் தொண்டுசெய்துவ ருங்கையில், இல்வாழ்க்கைப் பயனாகிய புதல்வரில்லாமையால் வரு த்தமுற்று, அரிய பலதவமும் விரதமும் அடியார் பூசையும் செ ய்துவந்தாராகத், திருவருளால் அவர் மனைவியார் திருவயிற்றில், பூ மகளுக்கு ஒப்பாகிய ஒருபெண்குழந்தையார் சுபலக்கினத்தில் பிற ந்தார். அதுகண்டு பெருமகிழ்ச்சிகொண்டு, யாவர்க்கும் பொன்ம ணி முதலியதானம் வழங்கி, சிவபெருமானுக்குப் பூசைவிழா வி சேடமாகச்செய்து, பிள்ளைவிழாக்கொண்டாடி, "பூம்பாவை" என று நாமகரணமுஞ்செய்து அருமையோடும் வளர்த்துவந்தார். அ ப்பெண்மகளாரும வளர்ந்து தளர்நடைப்பருவம் கடந்து, முறை யே மாணிக்க விளக்குப்போல ஒளிநிரம்பி ஏழாம்வயதை அடை ந்து பெண்கள் கூட்டத்தோடும் சென்று, சிற்றில் இழைத்தல் மு தலிய விளையாட்டுகளைச் செய்துவரக்கண்ட தந்தை சிவநேசர், க

ளிசிறந்து, இவள் திருமணத்திற்குரியவனே என்பெருநிதிக்கு முரி
யவனாவான் என்றுசொன்னார். அக்காலத்தில் பிள்ளையார் பாண்டி
த்திருநாடுசென்று, சமணரைவென்று, அரசனை யடிமைகொண்ட
வாறு கேள்விப்பட்டு, சொன்னவர்க்கெல்லாம் வேண்டுவன கொ
டுத்து, திக்குநோக்கிப் பிள்ளையாரைவணங்கி, சுற்றத்தார் அறிய,
இன்று என்னையும், என்மகளையும், என்பொருளையும் சீகாழிவந்த
சிவஞான சம்பந்தப் பெருமானுக்குக் கொடுத்துவிட்டேன். இனி
எம்மை உடையவர் பிள்ளையார்தாம் என்று களிப்புடனிருந்தார்.
அங்கொருநாள், அப்பூம்பாவையார் கன்னிமாடத்தை யடுத்த பூந்
தோட்டத்திற்குத் தோழிமாரோடுசென்று பூப்பறிக்கும்போது,பி
ள்ளையார்க்கிது பொருந்தாது என்னும் ஊழ்வினைபோல ஒருகொ
டியபாம்பு முல்லைமாதவி படர்ந்த பந்தரின் மறைந்துவந்து, அப்
பூம்பாவையாரது திருவிரலைப்பற்றி,காளி, காளாத்திரி, யமன், யம
தூதி, என்னும் நான்குபற்களும் எலும்பில் அழுந்தக்கடித்து, வி
ஷத்தையுமிழ்ந்து, படமெடுத்தாடி அடங்கிச்சென்றது. உடனே
அக்கன்னியாரசு, தீயிற்பட்ட பூமாலைபோல் உடல்கருகி அறிவு
சோர்ந்து பூமியில் விழுந்தாள். அதுகண்டு பாங்கியர் பயந்து அவ
ரைத்தாங்கிப்போய் கன்னிமாடத்திற்சேர்க்க, அங்கு பிதா சுற்றத்
தாரோடும் அடைந்து பெருந்துன்பங்கொண்டு, விஷந்தீர்க்கத்தக்
கவர் பலரையும் தருவித்தார். அவர்களும் தாங்களறிந்துள்ள சிற
ந்த மணிமந்திர அவிழ்தசிகிச்சைகளெல்லாம் ஒன்றொழியாமற்
செய்தும் எத்துணையும் பலியாது முடிவில் விஷந்தலைக்கேறி மர
ணஞ்சம்பவித்தது. உயிர்க்குறிகளும் இல்லையாய்விட்டது. சுற்றத்
தார் அதுகண்டு மேல்விழுந்து கதறியழுதார்கள். சிவநேசர் அப்
போது அடங்காத பெருந்துயர்க்கடலில அழுந்திக் கரைகாணாது
திகைத்துப் பின்பு ஒருவாறு தெளிந்து தேறி, இவ்விடத்தை யொ
ழிப்பவர்க்கு எனது அளவிறந்தபொருள் அடங்கலுமகொடுத்து
விடுகின்றேன் என்று பறையறைவித்தார். அதுமுதல் மூன்றுநா
ள்வரையிலும் உலகத்தில் விஷவைத்திய நன்குணர்ந்தவர் எல்
லாரும்வந்து தங்களாலியன்றமட்டும பார்த்து, கைகூடாமற்ப
டி மனஞ்சோர்ந்து, போகவே போனார்கள்.

அதனைக்கண்ட சிவநேசர் உள்ளம் மயங்கிப் பின்தெளிந்து,
பிள்ளைப்பெருமானெழுந்தருளுகின்றவரையில்இவ்வுடம்பினைச்சே
மித்து வைக்கின்றேன். இவளை முன்னமே பிள்ளையார்க்குக் கொடு
த்துவிட்டபடியால் இனி நாம் துன்பப்படக் கடனில்லை என்றுஅ
வ்வுடம்பைத் தீயிலிட்டு அடக்கியபின்பு, வெந்தசாம்பரையும் எ
லும்பையும் ஒருகுடத்திற்சேர்த்து முன்போலக் கன்னிமாடத்தில்

இருத்தி ஆடை ஆபரணங்களாலும் சந்தனம் பூமாலைகளாலும் அலங்கரித்துப் பஞ்சசயனத்தின் மேலிட்டு உபசாரத்தோடு போற்றிவரச்செய்து வைத்திருந்தார். அப்போது, பிள்ளையார் திருவொற்றிமாநகரி லெழுந்தருளியதை அங்குள்ளவர்வந்து கூறக்கேட்டு, பொன்மணியாடை முதலிய பரிசளித்து, கரைகாணாத பெருமகிழ்ச்சியோடு திருமயிலை மாநகரந்தொட்டு அவ்வொற்றிச் சிவபுரம்வரையில் நடைக்காவணமிடுவித்து வாழைகமுகு நாட்டி அட்டமங்கலம் அமைத்து, தாமும் அடியார்களோடு அங்குசென்றார். பிள்ளையாரும் தெய்வவொற்றியை விட்டுத திருமயிலாப்பூருக்கு அடியார்களோடும் எதிர்வரக்கண்ட வைசியர் பெருந்தகையார் பேராநந்தமடைந்து தூரத்தே தானே பலகாலு நிலம்பொருந்தப்பணிந்து அருகுசென்று வணங்கிநிற்க; காழிப்பிரான் முத்துச்சிவிகைவிட்டிழிந்து எதிர்வந்த அடியாரகளைத்தொழுது செல்லுகையில் சிவநேசரது வரலாறு முழுவதையும அங்குநின்ற பெரியோர்கள் கூறக்கேட்டு முன்னிகழ்ச்சியைத் திருவுளத்தடைத்து, சமண்சாக்கியர் அசதியுரை யொழியுமபடி, திருமயிலைமாநகரமுஞ்சேர்ந்து பெருமான் திருக்கபாலீச்சரத்தை யடைந்து, வலம்வந்து பணிந்து, துதித்து, அருள்வசத்தாராய்ப் புறம்வந்து, அவ்வணிகசூடாமணியாரை நோக்கி உலகறிய நீர் அருந்தவஞ்செய்து பெற்றதிருமகள் எலும்பு நிறைத்துவைத்த குடத்தை நம்பெருமான் திருக்கோயிலின் மதிற்புறத்துக் தருவியும் என்றருளினார். அது கேட்டுப் பெருங்களிப்போடு பணிந்து சென்று கன்னிமாடத்திருந்த அக்குடத்தைச் சேடியர் புடைசூழச் சிவிகைமீதேற்றிவந்து, சிவசந்நிதானத்தின் கண்வைதது விண்ணப்பித்தார். பிள்ளைப்பெருமான் இவ்வுலகர்க்கு உத்தம சன்மார்க்கத்தின் உண்மைநிலைமையைத்திருவருளசெய்யும்படித் திருவுளங்கொண்டனர். அப்போது அத்திருநகரவாசிகளும் புறச்சமயததவரும் பிறரும் மண்ணிடமுழுவதும் வந்து நிரம்பினார்கள். தேவர் முதலிய கணங்களனைவரும் விண்ணிடம் அடஙகத்திரண்டார்கள். பின்பு அக்குடத்தைப் பிள்ளையார் திருக்கண்சாத்திச் சிவபெருமானார் திருவருளைச் சிந்தித்து, அவ்வெலும்போடும் சம்பந்த முடைமைகுறித்து, கருணையாக நோக்கி, பூம்பாவையை முன்னிலையாக்கி, இந்த நிலவுலகத்திற் பிறந்தவர்கள் பெறத்தக்க பெரும்பேறுவது, சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்தலும் பெருமான் திருவிழாவைக் காணுவதுமே உண்மைப்பொருளாயிருந்தால், இவ்வுலகரெல்லாம் காணும்படி உயிர்பெற்று எழுந்து வருவாயாக வென்னுந் திருக்கருத்தால் "மட்டிட்ட புன்னையங்கானல் மடமயிலை, கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரமமர்ந்தான், ஒட்டிட்டபண்பி னுருத்திரப்

பல்கணத்தார்க், கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.''
என்னும் திருப்பதிகத்தைத் திருவாய்மலர்ந் தருளினார்.

அங்ஙனம் அருளிச்செய்த திருப்பாட்டினுள் ''போதியோ'' என்னும் அமுதச்சொல்லால் எடுத்த திருப்பாட்டில் எலும்பு எல்லா அவயவங்களையும் பெற்றது. ஏனைய எட்டுத்திருப்பாட்டினால், பேரழகோடு அதுவரையும் சென்ற பன்னிருபிராயத்து அளவும் நிரம்பியது. பத்தாவது திருப்பாட்டில் சமணர் புத்தர் இச்செய்கை தகாதென அசதியாடுவர் என்று சொல்லியருளியபோது, தாமரை முகைமலர்ந்து திருமகள் வெளிப்பட்டாற்போலும் குடத்தை யுடைத்துக்கொண்டு அப்பூம்பாவையார் எழுந்தார். உடனே தேவாரமுதத் திருத்தமிழாளியார் திருக்கடைக்காப்பருளினார். அடியவர்கள் ஹர! ஹர! முழக்கஞ் செய்தார்கள். தேவர் முனிவர் திருவருளைத் துதித்துப் பூமழைபொழிந்தார்கள். உலகு முழுவதும் அருள்வயப்பட்டு நின்றன. புறச்சமயத்தவரும் கண்டு இது எங்குள்ள அருமையான செய்கை அற்புதம்! அற்புதம்! என்று தம்மைமறந்தார்கள். அவ்வங்கம் பூம்பாவையாரைக் கண்டவருள் மேனிமுழுவதும் கண்டாரில்லை. முன்னர் எவ்வுறுப்பை யார் கண்டனரோ? அவ்வுறுப்பினழகிலே தானே அவரவரும் அழுந்திக்கிடக்க, அணியிலக்கணத்திற் கிலக்கியமாயும் அழகுக்கழகாயும் அத்திருமகளார் விளங்கினார். இங்ஙனம், பலயுகங்கடந்த பெருவாழ்நாளையுடைய பிரமன் முன்தான்படைத்த திலோத்தமை யழகைத் தன்னொரு நான்குமுகத்தாலே கண்டான்; இன்று பதினாறாண்டாகிய வரம்பிட்ட திருநாளையுடைய பிள்ளைப் பெருமான், இப்பூம்பாவையாரிடமாக ஆளுடையார திருவருளை ஆயிரமுகத்தாலும் கண்டார். எனவே சிவஞான முகமென்ற வாறு. இது, சிவஞானசித்தித்திறத்தையும், உலகுகடைப்பிடிக்கத்தகும் சன்மார்கக வொழுக்கத்தையு முணர்த்திற்று.

உடனே, இவ்வற்புதப் பேறுபெற்ற அப்பூம்பாவையாரது தந்தையார் சம்பந்தப்பிரான் திருவடிகளில்வணங்கித் தமதுதிருக்கன்னியாரைக் கொண்டு சென்று, கபாலீச்சர முடையாரைப் பணிவித்துப் பிள்ளைப்பெருமான் சீபாதங்களில் நமஸ்காரஞ் செய்வித்தார். பிள்ளையார் அவர் திருமுகத்தைப் பார்த்து, இனி உமது திருமகளை யழைத்துக்கொண்டு திருமாளிகைக்குச்செல்லுமென்று திருவாய்மலர்ந்தருளினார். அதுகேட்ட அப்பெருந்தகையாரும், வணங்கி நின்று, எம்பெருமானே! என்னருமைத் திருமகளாரைத் தேவரீர் திருமணஞ்செய்தருளவேண்டு மென்று விண்ணப்பித்தார். அதற்குப் பிள்ளையார், ஐயனே! நீர் பெற்றருளிய திருமகள் விடத்தால் இறந்தபின்பு, நாம்சிவபெருமான் பெருங்கருணையால்

மீட்டும் எழுந்துவரக் கண்டபடியால் அவ்வுரை தகாதென்று மறுத்தருளினார். அதனைக்கேட்டு, அவ்வசிய சிகாமணியும் அவர் சுற்றமும், திகைத்து அடங்காத துயரத்தோடு திருவடிகளில் விழுந்து பற்றிவருந்திநிற்க; பிள்ளையார், அவர்கள் துயரமொழியும்படி வேத முடிபையெடுத்துக் கூறி, தெளிவித்தருளினார். பின்பு அவர்கள் ஆசையை விட்டவர்களாய் இனிவேறொருவர்க்கும் இக்கன்னிகையைக் கொடேன் என்று சிவநேசர் நிச்சயித்துக்கொண்டு அம்மாது சிகாமணியைக் கன்னிமாடஞ் சேர்த்தனர். அவரும் அங்கு சிவத்தியானத்தோடிருந்து திருவடி நீழலடைந்தார். அது நிற்க, பிள்ளையார் திருக்கபாலீச்சரத்துக்கு எழுந்தருளிப் பெருமான் பெருங்கருணையைப்பாடிப் பணிந்து, புறம்போந்து திருமடஞ் செய்து அங்கு சிலநாளிருந்தார். பின்பு அங்குள்ள அடியார்களுக்கு விடைகொடுத்து, சிவநேசப் பெருந்தகையார் வருத்தம் அகல இனியவசனங் கூறி நிறுத்தி, திருவான்மியூர், திரு இடைச்சுரம், திருக்கழுக்குன்றம், திரு அச்சிறுபாக்கம், திரு அரைசிலி, திருப்புறவார்பனங் காட்டூர் முதலிய திருப்பதிகளை வணங்கிச் சென்று, திருத்தில்லைத் திருச்சிற்றம்பலம் தரிசித்து, அங்கிருக்கையில், சிவபாதவிரதயரும் ஏனைய வேதியர்களும்பிள்ளையார் எழுந்தருளியசுப வார்த்தைகேட்டுக் காணும் பெருவிருப்பத்தினால் சிதம்பரம்வந்து சேர்ந்தார்கள். பிள்ளையார் அவர்களோடும் திருச்சிற்றம்பல முடையாரைத் தரிசித்து, அருள்விடைபெற்று, சீகாழிக்கு எழுந்தருளி, தோணிப்பெருங்கோயிற் பெருமானையும் பெருமாட்டியையும் தரிசித்துப் பதிகம்பாடி அங்குநின்றும் திருமாளிகைக்கு எழுந்தருளினார். அங்கிருக்குநாளில் திருமுருகனார், திருநீலநக்கவடிகள், முதலிய திருத்தொண்டர்கள், திருத்தோணிவணங்கிவரப் பிள்ளையார் எதிர்சென்றுபசரித்து அழைத்துவந்து, அவர்களோடு அளவளாவியிருந்தருளினார். அப்போது, பெருந்தவத்துச் சிவபாத விரதயப் பெருந்தகையும் ஏனையசுற்றத்தாரும், ஒருங்கு கூடிப்பிள்ளைப் பெருமான் திருமணஞ் செய்தருளும் பருவமிதுதான் என்று எண்ணி வந்துதொழுது திருவுள்ளங் கொள்ளும் வகையாக; ஐயரே! வேதத்துள் விதிக்கப்பட்ட வேள்விகளை நடாத்தத் தேவரீர் திருமணஞ்செய்தருளவேண்டு மென்று விண்ணப்பித்தார்கள். பிள்ளையார், சுற்றத்தொடர்பு அறுக்கப்பெருமான் திருவருளை முன் பெற்ற காரணத்தினால் திருவுளமிசையாது அக்காரிய முடியுமாயினும் கூடாது என்று திருவாய்மலர அவ்வந்தணர்கள் மீட்டும் தொழுது, எம்பெருமானே! இவ்வுலகத்தில் வேதவிதி வழங்கவென்று, திருவுள்ளஞ் செய்தபடியால், அம்முறையே அறுவகைத் தொழிலும் நிலைபெறத் திருக்கலியாணஞ் செய்தருள வேண்டு

மென்று விண்ணப்பஞ் செய்தார்கள். பிள்ளையார், வேதமும் அந்தணரொழுக்கமும் நிலைபெறத் திருவுள்ளத் தெண்ணியுடன்பட்டருளினார். அதுகண்டு அவர்கள் மிகமனங்களித்து, திருத்தோணியுடையாரைத் தொழுதார்கள்.

பின்பு அவர்கள், அந்தணருள் சிறந்தவரும், தமது மரபுக்கு ஒத்தமரபினருமாகிய திருப்பெருமண நல்லூர் நம்பாண்டார் நம்பியார் பெற்ற திருமகளாரைப் பிள்ளையார்கைப்பற்றத் தருமென்று நிச்சயித்து, மகட்பேசும்படி அவ்வூர்க்குச் சென்றார்கள். அவ்வரவுணர்ந்த நம்பாண்டார் நம்பிகளும், மகிழ்ச்சியோடும் அட்டமங்கல முதலிய சிறப்போடும் எதிர்வந்து, தொழுது தமது திருமாளிகைக்குக்கொடுபோய்உபசரித்தார். அப்போது, வந்தபெரியோர்கள் நம்பாண்டார்நம்பியாரைநோக்கி, ஐயரே! நீர்தவஞ்செய்துபெற்ற திருமகளாரை, எங்கள் பிள்ளைப்பெருமானுக்குத் திருமணம் புணர்த்த மகட்பேசவேண்டி வந்தோமென்று கூறினார்கள். அதுகேட்டு அவர் பேரானந்த மடைந்து, எம்முடையீரே! உலகுய்ய ஞானவமுதமுண்டருளிய உங்கள் தவப்பயனுக்கு யாமுய்ய எங்கள் குலப்பயனைத் தருகின்றோம்: ஆதலின், திருமணத்திற்கு எழுந்தருளலாம் என்று சொல்லி மகிழ்வோடும் அவர்களை யனுப்பினார். உடனே யவர்கள் சீகாழிக்குச் சென்று, பிள்ளையார்க்குத் தெரிவித்து, திருக்கலியாண மஹோற்சவத்தை விதிப்படிச் செய்யத் தொடங்கி, சோதிடநூல் வல்லவர் முகூர்த்தம் வகுக்கத் திருக்கலியாண நாள் குறித்த வோலையை அனுப்பி நகரத்தை யலங்கரித்து, முளைப்பாலிகை அமைத்தார்கள். அம்மங்கலநாளோலைவந்த வளவிலே நம்பாண்டார் நம்பிகளும் களிப்புற்று, முளைவிதைத்து, திருமாளிகையையும் திருக்கலியாண மண்டபத்தையும் அலங்கரித்து, அட்டமங்கலஞ்சாத்தி நகர்கோலஞ்செய்து, முளைவிதைத்த நாள் தொட்டு வருகின்ற சிவனடியவர் முதலிய யாவர்க்கும். அறுசுவையோடும் மஹேசுவர பூசைமுதலியன நடந்துவரவும் மங்கலவாத்திய முழங்கவுமான பெருஞ்சிறப்பு நடத்திவந்தார்.

இங்கு சீகாழியில், முகூர்த்தத்திற்கு முன்தினத்தில் விருத்த வேதியர்கள் விதிப்படி கங்கணத்தை நகர்வலஞ்செய்வித்து, சமாவர்த்தனம் நடத்தி மங்கலவாத்தியமுழங்க, நெல்பரப்பிப் பூவாலும்பட்டாலும் அலங்கரிக்கப்பட்ட ஆசனத்திற் பிள்ளையாரை எழுந்தருளப் பண்ணி கங்கணதாரணம் செய்தார்கள். அன்றிரவு நடத்தும் வைதிகச்சடங்கெல்லாம் நிறைவேறின. சூரியனும் உதயமானான். பிள்ளையார் நித்தகருமங்களை முடித்து அடியவர்களும் அந்தணரும் உடன்வரத் தோணிப்பெருங்கோயி லுடையாரைச் சென்று வணங்கி, யருள்விடைபெற்றுப் புறம்போந்து, முத்துச்

சிவிகைமே லெழுந்தருளினார். எல்லாமங்கல வாத்தியமும் முழங்கின. முத்துப்பந்தர், முத்துக்குடை, கொடி சாமரை முதலிய பணிமாற, கற்புடைமாதரும், அறிவினுயர்ந்த விருத்தரும், அழகு மிகுந்த இளையோரும், அன்புததும்பிய அடியார்களும் அருள் சிறந்த மற்றைய பெரியோர்களும் தங்கள் தங்கள் திருமணமாகக் கொண்டு பெருங்களிப்போடுஞ் சூழ்ந்துவரப் பிள்ளையார் திருப்பெருமண நல்லூரைச்சேர்ந்து திருக்கோயிலை அடைந்து, பெருமானைத் தரிசித்துப்புறம்வந்தபோது, பிராமணோத்தமர்கள் வந்து திருக்கலியாணகோலம் கொண்டருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்ய ; பிள்ளையார் திருவுளமிசைந்து, அவ்விடத்துள்ளதோர் திருமடத்திற் கெழுந்தருளினார். அங்கு அந்தணர்கள் பிள்ளைப்பெருமானுக்குத் திருமஞ்சனம் செய்வித்து ஈரம் புலர்த்தி வெண்பட்டாடைசாத்தி,களபம்பூசி,முத்தாலியற்றப்பட்டமகுட, குண்டல, ஹார, கேயூர, சன்னவீர, வாகைமணிமாலை, உபவீத, உதரபந்தன, கடிசூத்திர, கடக, கங்கணமோதிர, முதலிய திருவாபரணங்களைச் சாத்தித் திருக்கோலஞ் செய்து, பணிந்தார்கள். பின்பு குருமணியும் அருண்மணி திருவடையாளமாகிய கருவழி திருவிழித் திருமணிமாலையைத் தொழுது தாங்கி, அலங்கார பூஷணமாகிய திருவெண்ணீற்றை ஸ்ரீ பஞ்சாக்ஷர மோதி யணிந்து, பெறலரும் பெரும் பொருளாகிய பேரறிவாளனைப் பெருந்தேவி பிரியாதகோலத்துப் பெற்று வணங்கி, திருவீதிவந்து, சிவிகை மேற்கொண்டு, முத்துக்குடைபந்தர் நிழற்ற, சின்னமுதலியன உலகுய்யவந்த திருநாமங்களைக் கீர்த்தித்து முழங்க, வேதகீதமலிய, மங்கலவாத்தியங் கோஷிக்க, புண்ணியத்தம்பதிகள் சோபனப்பல்லாண்டுபாட, பூமழை, பொரிமழை, பொற்சுண்ணமழை, புனித மந்திரநீர்மழை பொழிய, திருவீதி விடங்கமாக வுலாப்போந்து, திருக்கலியாணப் பூம்பந்தர் முன்வந்து, சிவிகைவிட் டிழிந்தருளினார். சுமங்கலிகள் அட்டமங்கலமேந்தி யெதிரேற்று நின்றார்கள். நம்பாண்டார் புண்ணியத்திருமாதரானவர் ஆயத்தோடும் மங்கல வாழ்த்துககூறி வந்து, திருககரகநீராற் றிருவடிவிளக்கி வலஞ் செய்து பணிந்துசென்றார்.பின்பு சம்பந்தநாயகர்மணவேதிகைக்கு எழுந்தருளிப் பூம்பள்ளிமீது வீற்றிருந்தார். அச்சமயத்தில், நம்பாண்டாரும் அவர்மனைவியாரும் பெறலருங் களிப்போடு ஆன்பாலும், புண்ணியநீரும், ஏனைப் பூசைத் திரவியங்களும் கொண்டு சென்று, நீர்மைவரப் பிள்ளைப் பெருமானைச் சிவபெருமானாகத் தியானித்துத் திருவடிக்குத் திருமஞ்சனஞ்செய்து, அந்நீரைச் சிரத்தின்மேற் றெளித்து உள்ளும் பூரித்து, சுற்றமுதலிய யாவர்க்கும் பிரசாதமாகக் கொடுத்து முறையே அருச்சித்து, பின்பு சங்

கற்பஞ்செய்து, பிள்ளையார் திருக்கரத்தில், வேத இருக்குகளைக் கூறிக் கோத்திர சூத்திரமரபுகளைச்சொல்லி இன்று பிள்ளையார்க்கு எனது தவமகளைக் கொடுத்தேனென்று நீர்வார்த்தார். அதன்பின், பாணிக்கிரகண முகூர்த்தம் வந்தவளவிலே, முன்னமே விதிப்படி காப்புத்தரித்துச் சர்வாலங்காரஞ்செய்து வைத்திருந்த பெருந்தவக்கற்பரசியாகிய திருமகளாரை மங்கையர் புடைசூழநம்பாண்டார் நம்பிகள் அழைத்துவந்து, வலஞ்செய்வித்து, ஸ்ரீ சம்பந்த நாயகர் வலப்பக்கத் தெழுந்தருளப் பண்ணினூர். அவ்விடத்து அந்த நித்தியகலியாணரிருவருமிருந்ததிருக்கோலத்தைத் தரிசித்து அம்மண்டபத்திருந்த மாந்தரெல்லாம் கண்ணிமை கூடாது அழகு மயப்பட்டு நின்று தேவர்களே யாயினூர். அது நிற்க.

அத்திருவேதிகையில், நீலநக்க அடிகள், வேத விதிப்படி, செய்யும் திருக்கலியாணச்சடங்குகளைச் சிவசிந்தையோடு நடத்தினூர். வேதகீதமும் மங்கலவாழ்த்தும் மங்கலதூரியமும் முழங்க, பிள்ளைநாயகம் அத்தெய்வமகளார் திருக்கரத்தை நீரோடேற்றுத் திருக்கடிசூத்திரம் புனைந்து, எல்லாமுடையார் திருவடிவாய் வலஞ்சுழித்தெழுந்த தெய்வத்தீயைப் பொரியவியூட்டி வலஞ்செய்யும்படி, என்னம்மை யணிதிருக்கரம்பற்றி இவ்வழல்வடிவராவார் எம்பெருமானன்றே ? என்று திருப்பெருமணத்தையடைய வெண்ணி அம்மந்திரத்தீயை வலம்வந்து நின்று,இவ்வில்லற வொழுக்கம்வந்தமையால் இம்மாதரோடும் எந்தை திருவருட்கழல் சேர்வனுக வென்று துணிந்து, சுற்றமும் தொண்டருஞ்சூழச் சுருதிநாயகன் பெருமணக்கோயிலையடைந்து, அருணிலைமைநோக்கிஎம்மை முன்னுண்ட அப்பெருங்கருணை இன்றுபிரிவறக் கூட்டுமென்னுந் தோற்றமுண்டாகவே, "கல்லூர்ப்பெருமணம் வேண்டாகழுமலம்-பல்லூர்ப்பெருமணம் பாட்டுமெய்யாய்த்தில- சொல்லூர்ப் பெருமணஞ் சூடலரேதொண்டர்-நல்லூர்ப்பெருமண மேயநம்பானே." என்னும் திருப்பதிகமெடுத்து நேர்பட்டவர் பாசங்கழலுவதே முடிபாகக்கொண்டு நல்லூர்ப்பெருமணத்து நம்பனே உன்பாத நீழல் சேரும் பருவம் இது என்று திருவாய்மலர்ந் தருளினூர். அப்பொழுது, தேவதேவராகிய ஆளுடையார் திருவருள்செய்து,ஐய! நீரும், இம்மாதரும், இப்புண்ணியத் திருமணத்திற்கு வந்தார் யாவருமாக நம்பாலாகிய இச்சோதியினுள் வந்து புகுமின்என்று, மூவுலகடங்கி விளங்க விழுங்கி ஒப்பற்ற தம்பாகாரமாய்த் திருக்கோயிலுட்பட மேலெழுந்த அருட்பெருஞ் சோதியாய் ஒரு திருவாயிலைத் தன்னுள் வகுத்துக்காட்டி நிற்க; பிள்ளையார் அவ்வருட்பெருஞ் சோதியைத் தொழுது நின்று, "காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி, யோதுவார்தமை நன்னெறிக்குய்ப்பதும், வேதநான்

கினு மெய்ப்பொருளாவதும், நாதநாமநமச்சிவாயவே.'' என்ற நமச்சிவாயத் திருப்பதிகத்தை யாவரும் கேட்டுப்பாசங்கழன்று உய்யும்படித் தீக்ஷைமுகமாக உபதேசித்தருளி, இக்கலியாணத்தில் வந்தவர் அனைவரும் இனி இழிந்த பிறவித்துன்ப மடையாதபடி இதனுட் செல்கவென்று திருவாய்மலர்ந்தருளினார். உடனே ஒழியாத பிறவிப்பெருவெள்ளத் துட்பட்டு, எல்லைகாணாதுதேக துன்பத்தில் தப்பும் உணர்ச்சியில்லாமலே மயங்குவார் எல்லாரும், எமது குருராயர் திருமணத்தைச் சேவிக்கப்பெற்ற திறத்தினால், தங்கள் தொலையாப்பிறவி தொலைய நிலைபெற்ற அவ்வருட் பெருஞ்சோதிக் கண்ணே புகுந்தார்கள். பின், திருநீலநக்க அடிகள், திருமுருக அடிகள், சிவபாதவிரதயர், நம்பாண்டார் நம்பிகள், திருநீலகண்ட யாழ்ப்பாணத் திருவடிகள் முதலிய பெருமக்களும் மற்றைய அடியார்கள் அனைவரும் தத்தம்பத்தினிமார்களோடும் அதனுள் எழுந்தருளினார்கள். முத்துச்சிவிகை, பந்தர், குடை முதலியதாங்கும் பரிசனங்கள், அங்குவந்திருந்த மாதர்கள், அறுவகைச சமையத்தினகளும் பெரிய தவமுடையவர்கள், வேதம் வல்ல அந்தணர்கள், மற்றையசாதகர், சாதகியர், முதலிய எல்லாரும் அதனுட்புகுந்து கலந்தருளினார்கள். பின்பு, உலகுய்யவந்த எம்மாசிரியர் பெருமானார் திருமனைவியார் திருக்கரத்தைப் பற்றிக் கொண்டபடி வலம்வந்து அவ்வருட்பெருஞ் சோதியில் எழுந்தருளி, ஆணமபோதத் தானமுங்கடந்த அருணெறிசென்று சிவத்தோடு இரண்டறநின்றருளினார். பின் ஆநந்தநாடகர் திருவருளால் அப்பெருஞ்சோதிமறைந்தருளிப் பழையபெருமணக்கோயி லொன்றேதோன்றி நிற்ககண்டு,பெறாதுநின்று ஏனையவுலகர் கவலுற்றார்கள். அருளாளர் திருமேனியோடு குருநாதர்கலந்தவாறு தூரத்தேநின்று தரிசித்த அளவன்றி அடையப்பெறாத தேவர் முனிவர் பிரமனாதியோர் சிந்தித்துச் சிந்தித்து, தங்கள் ஆராமைச் சோரவு அகலும்படி துதித்தார்கள். இதனால் முத்தி நிலையிது வென்ப துணர்த்தப்பட்டது.

இவர் எம்மார்க்கத்தினர்க்கு முய்வருளவல்ல ஞானசன் மார்க்க சதாசாரியர் என்று உணர்க. ஏனையகுருமுகத்தா னுணர்க.

இரண்டாங்காண்டத்துள்

ஆளுடையபிள்ளையார்புராணம் - முற்றிற்று.

---

திருச்சிற்றம்பலம்.

---

என்றுமின்பம் பெருகுமியல்பினால்
ஒன்றுகாதலி னுள்ளமுமோங்கிட
மன்றுளாரடி யாரவர்வான்புகழ்
நின்றதெங்கு நிலவியுலகெலாம்.

வையநீடுக மாமழைமன்னுக
மெய்விரும்பிய வன்பர்விளங்குக
சைவநன்னெறி தாந்தழைத்தோங்குக
தெய்வவெண்டிரு நீறுசிறக்கவே.

திருச்சிற்றம்பலம்.

---

முற்றிற்று.

# அரும்பத அகராதி.

அகமருடம் = பாவநீங்கச்செய்தல்.

அசதியுரை = பரிகாசச்சொல்.

அசரீரி = கட்புலனாகுமுடம்பில்லாதது.

அசுசி - ஆசுசி = சுத்தமில்லாமை.

அஞ்சலிசெய்தல் = இருகையுஞ் சேரக்குவித்தல்.

அடிகண்மார் = குருக்கண்மார்.

அணித்தாதல் = சமீபித்தல்.

அத்தமித்தல் - அஸ்தமித்தல் = மறைதல்.

அநுசிதம் = சுத்தமில்லாதது.

அந்தப்புரம் = இராஜபத்தினியிருக்குமிடம்.

அந்நப்பிராசனம் = சிறுகுழவிகட்கு முதலிற் சோறூட்டும் வேதவிதிச்சடங்கு.

அரதனம் = நவரத்தினங்கள்.

அருகு = சமீபம், பக்கம்.

அருளப்பாடு = தயவுசெய்யப்பட்டது.

அலகிடுதல் = குப்பையகலவிளக்குதல்

ஆடை = வஸ்திரம்.

ஆணை = கட்டளை = விதித்தல்.

ஆயம் = பெண்கள் கூட்டம்.

ஆயர் = கோபாலர் = இடையர்.

ஆயுள்வேதம் = வைத்தியநூல்.

ஆரவாரித்தல் = பெருங்கூச்சலிடுதல்.

ஆலயம் = கோயில்.

இராஜக்கிரகம் = அரண்மனை.

இருவினையொப்பு = நல்வினை தீவினைப் பயனனுபவமொத்தொழிதல்.

இழுது = வெண்ணெய்.

இறைமகன = அரசன.

இறைவர் = கடவுள்.

ஈடேறுதல் = உலகு ஒத்த நிலைமையடைதல்.

உடை = வஸ்திரம்.

உதரபந்தனம் = இடைமேற்கட்டி.

உபகரணம் = கருவியாகியபண்டம்.

உபநிடதம் = வேதமுடிபாகிய விரகசியப்பொருளைக் கூறுவது.

உபவீதம் = பூணநூல்.

உய்தல் = பிழைத்தல்.

உலவாக்கிழி = எடுக்கக்குறையாதபொருள்வைப்பு.

உலா = பவனி.

உளைதல் = நோதல்.

எடுத்துக்காட்டு = உதாரணம்.

எய்தல் = அடைதல், அம்புவிடுத்தல்.

எழுச்சி = புறப்பாடு.

எழுவகைச்சுரம் = ச, ரி, க, ம, ப, த, நி, இவற்றின் பெயர் முதலியன விரிந்தநூலுட்காண்க.

ஏவுதல் = செலுத்துதல்.

ஏறு = இடபம்.

ஏற்பித்தல் = கொள்ளச்செய்தல்.

ஐவகைக்கருவியாவன = தோற்கருவி = மத்தளமுதலியகொட்டுவன, துளைக்கருவி = குழல்முதலிய ஊதுவன, கஞ்சக்கருவி = தாளமுதலியபுடைப்பன, நரப்புக்கருவி = வீணைமுதலிய இசைப்பன, மிடற்றுக்கருவி = கண்டத்தெழால். இவ்வைந்தும் பாடுதற்குரிய இசைக்கருவிகளாம்.

ஒட்டம் = பந்தயம் = சபதம்.

ஒத்தறுத்தல் = தாளமமையக்கட்டளைசெய்தல்.

ஓச்சுதல் = செலுத்துதல் = போகவிடல்.

ஓலக்கம் = கொலுவிருக்கும்காட்சி.

கஞ்சுகிமாக்கள் = புகழ்ந்துவிருதுகூறுவோர்.

கடகம் - கங்கணம் = காப்பு.

கடிசூத்திரம் = அரைஞாண், மங்கலியசூத்திரம் = தாலி.

கணபங்கம் = ஒவ்வொருகணத்திலும் தோன்றியழிவது.

கணடுமுட்டு = கண்டதனால்வருந்தடை அசுத்தம் என்பாருமுளர்.

கமர் = வெடிப்பு.

கமலம் = தாமரை.

கமுகு = பாக்குமரம்.

கம்பலை = சத்தம்.

கம்பித்தல் = நடுக்கமடைதல்.

கரணம் = கருவி = ஒருதொழிலைச்செய்துமுடித்தற்கு உதவியாயிருப்பது.

கரு = பிறவி.

கருணை = தயவு = அருள். அது அறக்கருணை = இன்ப வகையாகச் செய்யும் அருளெனவும், மறக்கருணை = துன்பவகையாகச்செய்யும் அருள் எனவும் இருவகைப்படும்.

கலாஞானம் = சாத்திரவுணர்ச்சி.

கழல் = பாதம் = வீரவெண்டயம்.

கழு = கழுமரம் = உயிர்த்தண்டனைக்கருவி.

களபம் = வாசனைத்திரவியத்தோடுகலந்தசாந்து.

காட்சி = அழகு = பார்வை, கண்ணாற்காணப்படுவது.

காநம் = இசை.

காம முதலிய அறுவகைப் பகையாவன = காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம்.

காயத்திரி=கடக்கவிடும்பெருமந்திரம்
கடத்தல்=பிழைத்துப்போதல்.
கிரியாமார்க்கம=மனமுதலியவுட்கரணத்தாலும் கண்கால் முதலியபுறக்கரணத்தாலும் கடவுளுக்குச் செய்யும்தொண்டுவழி.
கிருத்தியம்=தொழில்.
குடாதம்படுதல்=வணங்குதல்.
குண்டலம் - குழை=காதிலணிவது.
குண்டிகை=கரகம்.
குரு - இலிங்கம் - சங்கமம் = ஆசிரியன், சிவன், அடியார்கள்.
குறையிரத்தல்=விண்ணப்பித்தல்.
கூகை=கோட்டான்.
கூற்று=சொல், இயமன்.
கேட்டுமுட்டு = கேட்டதனால் வந்ததடை அசுசி என்பாருமுளர்.
கேயூரம் - வாகுவலயம்=தோளிலணிவது.
கைதவம்=வஞ்சகம்.
கைதவன்=பாண்டியன்.
கொற்கை = பாண்டிநாட்டு நகரத்துளொன்று.
கோசலம்=பசுவின்மூத்திரம்.
கோட்டம்=கோயில், பெரியோர் வாழிடம்.
கோமயம்=பசுவின்சாணம்.
கோள்=நவக்கிரகம்.
சகசமலம் - மூலஆணவம்=செம்பிற்களிம்புபோ லானமாவினுள்ளது.
சகளகோலம் = கண்ணுக்குப்புலப்படுங்கடவுள்வடிவம்.
சங்கித்தல்=எண்ணுதல்.
சத்திநிபாதம்=சத்தியிறெழிவு.
சயனம்=பள்ளி=படுக்கை.
சயனித்தல்=படுத்தல
சரியைமார்க்கம்=கடவுளுக்கும் அடியார்களுக்கும் புறத்தொண்டு செய்யும்வழி.
சவம்=பிணம். [வழி.
சன்மார்க்கம் - உண்மைவழி = ஞான
சாத்து - சாந்து=சந்தனம்.
சால=மிக.
சிவசாரூபம்=சிவன் வடிவுபோலும்வடிவமுறுதல். அது பெற்றவர்கள் உருத்திரர்களாம்.
சிவிகை=பல்லக்கு.
சின்னம் - தாரை - காளம்= ஓர்வகை யூதுகருவி.
சுருதி - மறை=வேதம், இசை கூட்டல்.

சுவாலை=தழல்.
செவிலி=வளர்த்ததாய்.
சோபம்=மூர்ச்சை.
சோபானம்=படி.
தம்பித்தல்=அசைவற்றிருத்தல்.
தலைசிறத்தல்=மிகச்சிறத்தல்.
தலையளி=பெருந்தயவு.
தவமறைந்து அல்லசெய்வார்= தவஞ்செய்வார்போலக் காட்டிப் பாவஞ்செய்வார்.
தழங்குதல்=ஒலித்தல்.
திதி - காத்தல்=இரக்ஷித்தல்.
திருமுறைசெய்தல் = ஒழுக்கம்பெறச்சேர்த்தல்.
திளைத்தல்=அநுபவித்தல்.
தீக்ஷை=பாவநாசஞ்செய்தல், மலநாசஞ்செய்தல்.
துச்சகுநம்=பினவருங்கேட்டினை முன்னுணர்த்துங்குறி.
துமித்தல்=உமிழ்தல்.
தெங்கு=தென்னமரம்.
தொடுத்தல்=கட்டுதல், கோத்தல்.
தோணி=படகு.
நடைக்காவணம்=நடக்கும் வீதி முழுவதுமிட்டபந்தர்.
நந்தவனம்=பூந்தோட்டம்.
நித்திலயானம=முத்துப்பல்லக்கு.
நிமித்தவுபாதன காரணம்=நிமித்தகாரணம் எனக்கூட்டுக. ஒருகுடத்திற்குக்குயவனை நிமித்தகாரணம்=செய்வோனை. மண் உபாதானகாரணம்=முதற்காரணம்.
பசுநிரை=பசுமந்தை.
பஞ்சசுத்தி=ஐவகைச்சுத்தி. அவை திரவியசுத்தி, தத்துவசுத்தி, மந்திரசுத்தி, ஆன்மசுத்தி, பூதசுத்தி.
பஞ்சவடி=மயிர்ப்பூணநூல்.
பணிவிடை - தொண்டு=வேலை.
பத்தினி=மனைவி.
பஞ்சஸ்கந்தம்=ஐவகைக்கூட்டம். அவை, உருவம்=வடிவு=உடம்பு (1). வேதனை=நோய்(2). குறிப்பு=தருமம்=இலக்கணம்(3). பாவனை = நினைத்தற்றொழில் (4). விஞ்ஞானம்=அறிவு=மனம். (5). இவ்வைந்தின் கூட்டமே பிறப்பு - இது கெடுதலே முத்தி என்பர் புத்தர் - கெடுதல்= இறத்தல்.
பரசமயகோளரி=அந்நியசமயமாகிய யானைகளுக்குச் சிங்கமானவன்.
பரவசம்=தனைமறத்தல்.

பராமுகம்-மேலீடு=உள்ளழுந்தாமை.
பரிகலம்=உண்பதற்குரியபாத்திரம்.
பரிசனம்=ஏவல்செய்வோர்.
பவித்திரம்=குற்றநீங்கிச்சுத்தமாவது.
பழுது=குற்றம்.
பாணி=பாட்டு.
பாணிக்கிரகணம்=கைபிடித்தல்.
[illegible]டகநூல்=புத்தர்சமயநூல்.
[illegible]ரளயாகலர்=ஆணவங்காமியமென
னுமிருவகை மலமுடைய "கபாலி"
முதலிய நாற்றுப் பதினெண்ணுருத்
திரரும் மந்திரேச்சுரரும.
பிள்ளைவிழா=புத்திரோச்சவம்.
பீடித்தல்=வருத்துதல்.
பீலி=மயிலிறகு.
புண்டரிகம்=தாமரை.
புலர்தல்=உலர்தல்.
புனனாடு=சோழநாடு.
பெருமக்கள்=பெரியோர்.
பைய=மெதுவாக.
பொரியவி=நெற்பொரியாகிய அவிசு.
அவிசு=தேவருணவு.
பொற்றொடி=பொனவளையல்.
பொன்னி=காவேரி.
[illegible]=பெரியோரிருக்குமிடம.
[illegible]ம்=கலியாணம், வாசனை.
[illegible]க்கொழுந்து=இளஞ்சந்திரன்.
[illegible]கலம்=கப்பல்.
[illegible]பு=குலம். நியாயம=முறைமை.
[illegible]ங்கு=பக்கம்.
[illegible]தம்=கழனிசார்ந்தவிடம்.
[illegible]லை=திருந்ாதமொழி=குதலை.
[illegible]கம்=வீணையாழ்முதலியவற்றின
[illegible]ந்திரிகள்முறுக்காணி.
[illegible]டு=மாம்பிஞ்சு.
[illegible]லை - குதலை=இளஞ்சொல்.
[illegible]மனை=உபசாரம்.
[illegible]கூர்த்தம்=ஒருகருமத்தின்பொருட்
டுவரைந்துகொண்டகாலம்.
[illegible]ட்டுதல்=தடைபடுதல்.
[illegible]த்தி - சித்தி - வியத்தி=மலபந்தமற
த் தத்துவச சேட்டையொழிதல்; பெ
றத்தகுவன முற்றும் பெறுதல்; அழி
வற்றவினபவடிவமேயாதல்.

மு[illegible]ர்ந்தநிலம்.
மு[illegible]கூறியோலமிடுதல், இர
[illegible]சை.
வக்கணை=ஆலாபித்தல், அ[illegible]வக்கணை
யென்றும்வழங்கும்.
வசித்தல்=வாசஞ்செய்தல்.
வந்தித்தல்=தொழுதல்.
வயோதிகர்=முதிர்ந்த வயதை யுடை
யவர்.
வரையரமகளிர் - நீரரமகளிர் - வான
ரமகளிர்=தெய்வப்பெண்களின் பே
தம்.
வலம்வருதல்=பிரதக்ஷணம்வருதல்.
வழிபடுதல்=வணஙகுதல்.
வழுதி - பஞ்சவன் - கைதவன் - கௌ
ரியன்=பாண்டியன்.
வளார்=மெல்லிய சிறுகொம்பு, அது
மிலார் என்று வழங்கும்.
வள்ளம்=கிண்ணம்.
வள்ளல்=கொடுப்போன்.
வறிது - சும்மா=வீண்.
வனப்பு=மொழித்தொடரடிவிதியொ
த்துநிற்றல்.
வாகுமாலை - வெற்றிமாலை= தோளில
ணிவது.
விடங்கம=அழகு.
விபவம்=நல்லகாட்சி.
வியப்பு=அதிசயம்.
விராட்புருடன = உலக வடிவமாகிய
தெய்வபுருடன்.
வீரட்டானம் = கடவுள்வீரஞ் செலுத்
தியவிடம்.
வெகுளுதல்=கோபித்தல்.
வெருளுதல் = அச்சத்தால் நிலைதவறி
நிற்றல். அதுமிரளுதலெனவும் வழ
ங்குகின்றது.
வேட்டல்=யாகஞ்செய்தல்.
வேட்பித்தல்=யாகஞ்செய்வித்தல்.
வேதஇருக்கு=வேதமந்திரம்.
வேதிகை=மேடை.
வேள்வி=யாகம்.
வேனிற்பருவம்=வெயிற்காலம்.
வைப்பு=புதையல்.
ஹாரம்=மணிமாலை, கழுத்திலணிவது.

# அரும்பத அகராதி

முற்றிற்று.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 10 | 18 | தரிசு | தரிசி. |
| 12 | 25 | செய்வி | செய்வி. |
| 21 | 5 | வுலக் | வுலகங். |
| ,, | 8 | கோடு | கொடு. |
| 24 | 2 | எழிந்தரு | எழுந்தரு. |
| 33 | 38 | யாழ்பா | யாழ்ப்பா. |
| 36 | 23 | கொடிகா | கோடிகா. |
| 45 | 14 | எஅறு | என்று. |
| 54 | 6 | சொன்ன | சொன்ன. |
| 55 | 18 | பின்ளை | பிள்ளை. |
| 58 | 37 | பெருட்டு | பொருட்டு. |
| 59 | 11 | காவே | காகவே. |
| 64 | 27 | பொழுநும் | பொழுதும். |
| 66 | 32 | சமணர்ளை | சமணர்களை |
| 68 | 24 | றழிதி | றருதி. |
| 69 | 37 | வாறெ | வாறே. |
| 79 | 29 | மேனி | மேனி. |
| 81 | 33 | புவியு | புகலியு. |